# HOW TAMIL WAS BUILT UP

—:*:—

AN ESSAY ON THE ORIGIN OF THE TAMILIAN SPEECH
WITH SIDELIGHTS ON THE DEVELOPMENT
OF THE INDO-GERMANIC LANGUAGES
FROM WORD-BASES COMMON TO BOTH THE GROUPS

By
Rev. S. Gnana Prakasar, O. M. I.

Publishers:
The United Trading Company
Chunnakam, Ceylon

*Permissu Superiorum*

1927
PRINTED AT ST. JOSEPH'S CATHOLIC PRESS,
**JAFFNA**

# தமிழ் அமைப்புற்ற வரலாறு

சொற்களின் உண்மைப் பிறப்பை
விளக்கும் புதியநூல்

---

ஆக்கியோன்
நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்

சுன்னாகம், இலங்கை
வியாபார ஐக்கியசங்கத்தாரின் பதிப்பு
1927

# Introduction

THIS little book, containing a summary of matter which should fill a large volume, is the result of an accidental discovery. After a particularly strenuous season of official work I sat, one day, jaded and fit for no sèrious undertaking. Finding the new Tamil Dictionary of Mr. C. W. Katiravel Pillai handy, I began turning its pages at random, for the mere curiosity of seeing what treatment certain obscure words of classical Tamil had received in the *magnum opus* of a great scholar. Soon my attention was drawn to an important fact which had never struck me so forcibly before: namely that the entire vocabulary of our peculiarly symmetric language ( with the exception of a handful of imitative words ) falls into a number of inter-related groups. Caldwell and others, indeed, had pointed out the fact with regard to a few scores of words; but I now began to see that this was the case with the whole vocabulary.

The idea of further investigating the subject began to grip. The next step was to run through the Dictionary and write down all the principal word-types of the language under separate groups, noting down, at the same time, their primary senses, with detailed references to classical literature. Here Katiravel Pillai failed me, as his arrangement of the senses of many important words was by hap-hazard and not in the order of their historical evolution—a failing to be deplored in the case also of the Tamil Lexicon of the Madras University now in course of publication. The task of fishing out the original sense of words from early literature became laborious, but at the same time absorbingly interesting, as it

# Contents

**I Radically related Word-groups**

Tamil words fall into groups, which, on examination, resolve into a handful of word-bases.—Early language was composed of what we now call Roots. 1—6

**II Predicates based on Spatial Relation**

Idea of the non-Ego, a Response to Stimuli through the Senses.—Stimuli and Spatial Relation.—Four distinct Root-groups based on the deictics A I U and E which, in turn, designate a Fourfold spatial relation 7—14

**III Primary Roots**

The use of Consonants.—The vague ideas of Relation conveyed by the deictics were made more precise by tacking on Consonant sounds.—This Law illustrated by copious Examples 15—22

**IV Secondary Roots**

Primary Roots became Secondary by lengthening Initial Vowels, introducing Initial Consonants, Reduplication of the Final and Interchange of sounds of similar Origin 23—29

**V Multiplication of Word-forms**

Words denoting spatial relation made to convey Higher Ideas by Analogy and Metaphor.—This illustrated by Derivatives from the root "Aya".—"Uva," another prolific root yielding Words of a wide range of meaning.—Some of the Variations of the word

"Iya".—Further illustrations from the root "Ey".—Some Fanciful Theories of the Origin of Language 30—44

**VI Pronouns**

Origin of the Aryan "Aham" and the Second personal Pronoun.—Suffixes denoting Gender.—Their Indo-Germanic affinity.—Suffixes denoting Number.—How the Selective word "El" came to signify Totality.—The Plural signs "Ir" and "Ar" are forms of a word for Two.—Interrogatives and Relatives originally the same.—The Tamil base "Ya" and the Interrogative-relatives of Indo-Germanic languages 45—59

**VII Nominal Suffixes, Signs Of Declension**

All suffixes of Verbal nouns are forms of the Primary words "Atu", "Il and Ul".—Sign of the Accusative.—Words which became Signs of the other Declensions 60—66

**VIII Particles denoting Tense**

The Present tense.—Past tense expressed by the Demonstrative "Atu" as Something at a distance.—This word probably the basis of the Sign of Aryan preterite.—Tamil Future tense compared with that of the Aryan languages and the Prakrits 67—76

**IX Infinitive, Benedictive and Negative Forms**

The Benedictive "Kadavatu" regularly formed from a Tamil primary word.—Nagative forms of verbs made up with the word "Al" meaning Disappearance.—Same word in other Languages 77—84





**X Tamil Roots in the Indo-Germanic Languages**

Why familiar Names not identical in Tamil and the other languages.—"El" and words for the Sun.—Words signifying Light, Day, Limit and Time; Colour and Brightness; Grace and Knowledge; Joy and Bashfulness; Sand and Wheat; Fish and Star; Glass and Wit; Lamp and Light; Blue and Black; Fire and God; Heat and Furnace; Chalk and Hound; Sun and Blood; Red and Gold 85—104

APPENDIX: **Index of words whose origin is to be found in this work**

Tamil words traced.—Indo-Germanic words traced 105—115

ERRATA 116

# உள்ளுறை


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | தமிழ்ச்சொற்றொகுதிகள் | 1— 6 |
| 2 | இடம்பற்றிய பெயரீடு | 7—14 |
| 3 | முதற்சொல்லடிகள் | 15—22 |
| 4 | வழிச்சொல்லடிகள் | 23—29 |
| 5 | சொல்லர்த்தங்கள் விரிந்த விசித்திரம் | 30—44 |
| 6 | பிரதிப்பெயர்கள் | 45—59 |
| 7 | பெயர்விகுதிகள், வேற்றுமைஉருபுகள் | 60—66 |
| 8 | காலங்காட்டும் இடைநிலைகள் | 67—76 |
| 9 | செயவெனெச்சம், வியங்கோள், எதிர்மறை | 77—84 |
| 10 | பிறமொழிகளிற் தமிழடிகள் | 85-104 |
| | அநுபந்தம்—இந்நூலினுள் வரலாறு விளக்கப்பெற்ற சொற்கள் | 105-115 |
| | பிழைத்திருத்தம் | 116 |




# Abbreviations used in this work

## மேற்கோள் காட்டிய நூல்களின் குறிப்பு விளக்கம்

**Beames**—A Comparative Grammar of the Modern Aryan Languages of India, by John Beames, 3 vols. London, 1872

**Caldwell**—A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages, by Rt. Rev. Robert Caldwell, 3rd Edition Wyatt and Pillai, London, 1913

**Max Muller**—The Science of Language, by F. Max Muller, 2 vols. London, 1891

**Subrahmanya Ayyar**—The Earliest Monuments of the Pandya Country and their Inscriptions, by K. V. Subrahmanya Ayyar, B. A., M. R. A. S. Madras, 1925

**Swaminatha Aiyar**—The Aryan Affinities of Dravidian Pronouns, by R. Swaminatha Aiyar, B. A., Madras, 1924

**Whitney**—A Sanskrit Grammar including both the classical language and the older dialects of Veda and Brahmana, by W. D. Whitney, 2nd Ed. Leipzig, 1889

**Winslow**—A Comprehensive Tamil and English Dictionary, by M. Winslow., Madras, 1862

அக நா.—அகநானூறு, வே. இராசகோபாலையங்கார்

அகப்போ.—அகப்பொருள் விளக்கம்

இராமா.—கம்பராமாயணம், சென்னை 1911

ஐங்குறு.—ஐங்குறுநூறு, வே. சாமிநாதையர்

கந்தரந்.—கந்தரந்தாதி

கலி, கலித்.—கலித்தொகை, சி. வை. தாமோதரம்பிள்ளை

கல்லா.—கல்லாடம், இராமானந்தயோகிகள்

குற.—திருவள்ளுவர் குறள்

குறிஞ்சிப்.—குறிஞ்சிப்பாட்டு (பத்துப்.) வே. சாமிநாதையர்

சிலப்.—சிலப்பதிகாரம் ஷை

சிவ-சித்.—சிவஞானசித்தியார்

சிவரக.—சிவரகசியம்

சீவக.—சீவகசிந்தாமணி, வே. சாமிநாதையர் .

தணிகைப்.—தணிகைப்புராணம், சி. வை. தாமோதரம்பிள்ளை

தாயு.—தாயுமானசுவாமிபாடல், காசி நாகலிங்க முதலியார்

திணைமா.—திணைமாலை நூற்றைம்பது, ரா. இராகவையங்கார்

திருக்கோ.—திருக்கோவையார், பொன்னம்பலபிள்ளை

திருநாவுக்.—திருநாவுக்கரசர் தேவாரம்

திருமுரு.—திருமுருகாற்றுப்படை (பத்துப்.) வே. சாமிநாதையர்

திருவள்.—திருவள்ளுவர் குறள்

திருவாச.—திருவாசகம், பா. மாசிலாமணிமுதலியார்

திருவிளை.—திருவிளையாடற்புராணம், நா. கதிரைவேற்பிள்ளை





திவாக.—சேந்தன்திவாகரம், சென்னை 1904

திவ். பெருமா.—நாலாயிர திவ்ய பிரபந்தம்

தேவா.—தேவாரம், சுவாமிநாதபண்டிதர்

தோல்.—தொல்காப்பியம்; எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் (மூன்றும் நச்சினார்க்கினியருரை)

நற்.—நற்றிணை, அ. நாராயணசாமிஐயர்

நாலடி.—நாலடியார், கோ. வடிவேலுச்செட்டியார்

நான்மணி.—நான்மணிக்கடிகை, மதுரைச்சங்கம்

நெடுநேல்.—நெடுநல்வாடை (பத்துப்.) வே. சாமிநாதையர்

நைடத.—நைடதம், நா. கதிரைவேற்பிள்ளை

பட்டினப்.—பட்டினப்பாலை (பத்துப்.) வே. சாமிநாதையர்

பதிற்றுப்.—பதிற்றுப்பத்து ஷை

பரிபா.—பரிபாடல் ஷை

பவணந்தி.—நன்னூல் விருத்தியுரை, சதாசிவம்பிள்ளை

பாரத.—வில்லிபுத்தூரர் பாரதம், ரா. சுப்பிரமணியக்கவிராயர்

பிங்.—பிங்கல நிகண்டு, ரிப்பன் யந்திரசாலை

பு, வெ.—புறப்பொருள்வெண்பாமாலை, வே. சாமிநாதையர்

புறநா.—புறநானூறு ஷை

பெரும்பா.—பெரும்பாணாற்றுப்படை (பத்துப்.) ஷை

பொருந.—பொருநராற்றுப்படை (பத்துப்.) ஷை

மணி.—மணிமேகலை ஷை

மதுரைக்.—மதுரைக்காஞ்சி (பத்துப்.) ஷை

மலைப.—மலைபடுகடாம் (பத்துப்.) ஷை

ஸ்வாமிநாதய்யர்— ஆர். ஸ்வாமிநாதய்யர் சுதேசமித்திரன் வருஷ அனுபந்தத்தில் எழுதிய "தமிழின் உற்பத்தி" எனும் வியாசம்

# How Tamil Was Built Up

# தமிழ் அமைப்புற்ற வரலாறு

## முதல் அதிகாரம்

### Radically Related Word-Groups

### தமிழ்ச்சொற் தொகுதிகள்

அமிழ்தினும் இனியது என அறிஞர் போற்றும் எம் அரிய தமிழ்மொழியின்கட் பொருந்திய அழகுகளுள் ஒன்று யாதெனில், அதன் பன்னூற்றுத் தொகைப்பட்ட சொற்களிற் பெரும் பங்கானவை தம்முள் இனங்கொண்ட கூட்டங் கூட்டமாய் இயலுதலாம். இச் சிறப்பினைப் பண்டை இலக்கண நூலாசிரியர் சிறுபான்மையும், எங்காலத்து அகலறிவாளர் சில்லோர் பெரும்பான்மையும் எடுத்துக்காட்டலுற்றார். தமிழ்ச்சொற் பரப்பு முழுதினையும் ஒப்புநோக்கி அடைவுபட நிரீஇ, பிற பெரும் மொழிகளோடும் ஊடாடிய நுண்ணறிவுகொண்டு ஆராயுமிடத்து, முற்கூறிய பலப்பல சொற் கூட்டங்களானவற்றுள் குடும்பச் சாயல் போன்றதோர் ஒற்றுமை நயம் வெளிப்பட்டு,

அக்கூட்டங்கள், தம்மிலும் தொகைசுருங்கிய வேறு கூட்டங்களின் உறுப்புக்களாய்நிற்றல் தெளிவுறும். இவ்வாறே,

உழு, உளி, உலை, உளை
உழ, உழல், உளர், சுழல்
உழறு, குழறு, உழற்று, சுழற்று
உலவு, சுலவு, சில்லு, சுற்று
சுலவு, துழாவு, துருவு

ஆதியன இனம்பற்றிய ஒருகூட்டச் சொற்களாம். இவற்றின் தலை அர்த்தங்களை ஆராயுமிடத்து, இவையெல்லாம் ஓர் பொது அடியைக்கொண்டு பிறந்தனவாம் என்பது தெற்றெனப் புலப்படும்.

அஃதெங்ஙனமெனில், உழுதல் நிலத்தினுள் "கொழு" வைச் செலுத்திக் கிளைத்தல்.—"உழுதுமாநிலத்தேனமாகி" (தேவா. 929, 9); ("கொழு" எனும் சொல்லும் உழுதலுக் கினமாதல் மேல்வருவனவற்றால் விளங்கும்.) உளியென்பது உட்பாகத்தைத் "தோண்டும்" கருவி.—"கூருளி குயின்ற வீரிலை" (நெடுநல். 119); ("தோண்டு" தற்சொல்லுமன்னது.); உலைதல், உள் நின்று வெளியேறிக் கலைதல்.—"ஒன்னாத்தெவ்வருலைவிடத்து" (பெரும்பா. 491); உளைதல், உள் வீழ்ந்து (உட்கி) அழிதல்.—"உளையாவலியொல்க" (தேவா. 570, 8); உழத்தல், உழலல், உள்ளும் புறமுமாய் மாறிவரல்; சுழலலும் அது.—"அருந்துதலின்றி யலைகடலுழந்தோன்" (மணி. 16, 74); "ஆடுகறங்காகி யலமந்துழன்று" (தாயு. காண். 22) உளர்தல் கையை உட்செலுத்தி ஆற்றுதல்.—"கூந்தலுளர" (கலித். 105); உழறுதல் உள்ளே அசைவுறுதல். குழறுதலுமது.—"என்னைக் கண்டுழறு நெகிழ்ந்தாய்" (திவ். பெருமா. 6, 8); உழற்றுதல், உள்ளும் புறமுமாய் மாறிவரச்செய்தல். சுழற்றுதலுமது.—"என்னையவமேயுழற்றி" (திருக்கோ. 100 உரை, அவ.); உலவுதல், உலாவுதல் என்பன=உலைதல்.—





"வந்துலாய்த் துயர்செய்யும் வாடை" (பு. வெ. 8, 16 கொளு); சுலவுதல், சுலாவுதல் என்பன சுழலுதலின் மறு உருவமாம்.—"சுலவுற் றெதிர்போகிய தூவியனம்" (நைடத. அன்னத்தைத்தூ. 45); சில்லு, (சுல்லு) உள்ளும் புறமுமாய் வீசும் தேருருள்; சுற்றுதல் (=சுழற்றுதல்), உள்ளும் புறமுமாய் மாறிவரல்.—"பரவை சுற்றுறும்பாரிடம்" (இராமா. கவந். 23); துழாவுதல்=சுலாவுதல். துருவுதல், உட் செலுத்தித் "துளைத்" தல் (துளைத்தற்சொல்லுமன்னது), தண்ணீருட்போல ஆராய்ந்து எடுத்தல். (குறள்929)

இக்கூட்டத்தில் அடங்கிய சொற்களை ஒன்றுடனொன்றாக ஒப்புநோக்குமிடத்து, இவற்றிற்கெல்லாம் "உள்" எனும் ஒரு அர்த்தம் பொது உறுப்பாகக் கிடக்கக் காண்கின்றாம். அன்றியும் உழு, உல, உழ, எனும் உருவங்கள் தாம் உளை, உலாவு, உழல் முதலியனவாகப் பேதப்பட்டு அவற்றிற்கினமான வெவ்வேறு அர்த்தங்களைத் தந்தன என்பதும் தோன்றுகின்றது. உழு, உல, உழ எனும் ஆதி உருவங்களும், உள் என்னும் ஓர் பிரதம அடியை வேராகக்கொண்டு கிளைத்தன என ஊகிக்கவுங் கிடக்கின்றது.

இதனை மேலும் விளக்கும் பொருட்டு, பின்னும் ஓர் கூட்டச் சொற்களை எடுத்துக் காட்டுவாம்.

இழி, இற-ங்கு, இர-ங்கு, இறை-ஞ்சு
கிழி, கீல், கீறு, கிண்டு, கிட-ங்கு, கிழ-ங்கு
கேழல், கேணி, கிணறு
இடு, இரு, விடு
இடம், இடை, இறை, ஈடு
இழு, ஈர், இடு-ங்கு, இணு-ங்கு, பிடு-ங்கு
இலை, கிளை, இணர், இணு-ட்டு, ஏடு

எனுமிவை இனம்பற்றிய ஓர் கூட்டமாம். இக் கூட்டச் சொற்களின் தலை அர்த்தங்கள் பின்வருவன. இழி-தல்,

கீழ் நோக்கிச் செல்லல்.—“வெண்மதியம்......நிலத்திழிந்த தொத்தனவே” (சீவக. 2238) இறங்குதலுமது; இரங்குதல், துன்பத்தால் கீழ் நிலைப்பட்டோரை நோக்கிக் கீழிறங்கும் மனோநிலையாம்.—“சிற்றுயிர்க்கிரங்கிக் காய் சினவாலமுண்டாய்” (திருவாச. 6, 50); இறைஞ்சல், கீழ் நோக்கித் தாழ்தல்.—“குலையிறைஞ்சிய கோட்டாழை” (புறநா. 17,9); கிழித்தல், கீன்றல், கீறல், கிண்டல் என்பன “இழி”தலின் வலியுறுத்த உருவங்கள், தோண்டிக் கீழ் இடத்தை நாடுதற் பொருளுள்ளன; கிடங்கு, தோண்டிய கீழ் இடமும், கிழங்கு, கீழ் இறங்கிப் போமதுவுமாம்; அவ்வாறே, கேழல் கிண்டுகின்ற மிருகம், பன்றி; கேணி கிண்டப்பட்டது. கிணறும் அது; அப்பால், இடுதல் கீழே வைத்தலாம்; இருத்தல் கீழ் இறங்குதல், நிலைபெறுதல்; விடுதல் எனும் இடுதலின் உறுதிப்பாடான உருவம், கீழே கிடக்கச் செய்யும் பொருளது; இடம் கீழ் இருப்பது, இடையுமது; இறை கீழ் இடுவது, தங்குவது.—“நெஞ்சிறை கொண்ட” (மணி. 4, 69); இடைப்பொருளில் முன்கை எனலுமாம்.—“எல்வளையிறையூரும்மே” (கலித். 7); இடைப்படுவது ஈடு; இழிதலின் வேறு உருவங்களாகிய இழுத்(தல்), ஈர்(தல்) எனும் பிறவினைகள், கீழ் உற வாங்குதலேயாம்; இடுங்குதலும் இணுங்குதலும் இழுத்தெடுத்தல்; பிடுங்குதல் அவற்றின் வலிகொண்ட உருவம். அப்பால் செடிகளின் கீழே தொங்கும் உறுப்பு இலையும், கிளை அவ் இலைச் சொல்லின் வலியுறுத்த உருவமுமாம். இணர், இணுட்டு, ஏடு என்னும் இலைச் சொல்லின் பிற உருவங்கள் செடியின் கீழ்ப்பாகத்தே தூங்கும் வேறு உறுப்புக்களைக் குறிக்கும்.

இக்கூட்டத்துச் சொற்கள் அனைத்தையும் ஒப்புநோக்குமிடத்து, இவற்றினூடு “இல்” அன்றேல் “இழ்” எனும் ஓர் முதற் சொல்லடி தோன்றும். அச் சொல்லடியின் ஆதி அர்த்தமும் கீழுறுந்தன்மையாம் எனப் புலப்படும். இக்





கீழுறுந்தன்மையைச் சிறப்பியல்பாகக் கொண்ட விவித பொருட்களைக் குறிக்குமுகத்தாலேதான் “இல்” அன்றேல் “இழ்” என்னும் சொல்லடியானது இங்கு யாம் எடுத்தாண்ட வெவ்வேறு உருவங்களைத் தாங்கியதென்க.

## மொழியின் இளமைக்காலம்

இதுகாறும் காட்டிய இரு சொற் தொகுதிகளையும் நிகர, தமிழ் மொழியில் வேறு பலப்பல தொகுதிகளுமுள. உண்மையில், பிறப்பு விளங்காமற் கிடக்கின்ற மிகச்சில சொற்களையொழித்து, ஒழிந்த சகல தமிழ்ச் சொற்களும் ஒவ்வோர் கூட்டமாய் வகுக்கப்படும் பெற்றி வாய்ந்தனவேயாம். இதனானே, பண்டைக்காலத் தமிழருட் சொற்கள் தொகை குறைந்தனவாயிருந்தன என்பதூஉம், அவை இங்கு காட்டப்பெற்ற முதற் சொல்லடிகளைப் போன்றனவாய்ச் சிறிதுகாலம் நிலைபெற்றுப் பின்னரே விவித பொருட்களை, முயற்சிகளை, உள்ள நிலைகளைப் பிரித்துப் பிரித்துக் கூறுவான் வேண்டி வெவ்வேறு உருவமடைந்த வெவ்வேறு சொல்லாயின என்பதூஉம் வெள்ளிடை விலங்கலாம். எங்காலத்திலேதான் இரசாயன சாத்திரத்தால் வெளியாகும் புதுப் புதுக் கூட்டுப்பொருள் வகையிலோ, நவமாயியற்றப்படும் இயந்திரவகையிலோ, தாவரசங்கமங்களின் அமைப்புக்களையே உறுப்புக்களையே சேட்டைகளையே ஆராய்ந்து அவ்வவற்றிற்குத் திருத்தமாய்ப் பெயரீடு செய்யும்வகையிலோ, மனோதத்துவத்தின் விவிதமுயற்சிகளைப் பரீட்சித்துக் குறிக்கும் வகையிலோ, முன்னில்லாச் சொற்களையும் தொடர்களையும் அவ்வம்மொழியாளர் ஆக்கிக்கொண்டுவரக் காண்கின்றனமே. எமது நாகரிகத்துக்குப் புதியனவாயுள்ள பொருட்கள், நோக்குகட்கு நாம் புதுப் பெயரீடு செய்கின்றமை எப்படியோ, அப்படியே எமக்கு முன்னிருந்த மக்கட்கூட்டமும், தனது தேவை

களும் அறிவும் மேற்பட மேற்பட, அப் புதுத் தேவைகட்குப் பொருந்திய பொருட்கட்கும் அறிவுத்துறைகட்கும் பெயரீடு செய்வதாயிற்று. அப்பெயர்கள் எமக்குப் பழஞ்சொற்களாக நிலைபெறுகின்றனவேயாயினும், முன்னிருந்தோர்க்கு அவை புதுச்சொற்களாயின. பூர்வகாலங்களிற் பெயரிட்டழைக்கப்பட்ட சிற்சில பொருட்களும் அறிவு விடயங்களும் தற்காலம் அழிந்துபட்டும் மறந்துவிடப்பட்டும் போயினமையால் அப்பெயர்கள் மறைந்துபோனதும் உண்டு. இங்ஙனமாயினும், ஆதிகாலத்து மக்கள் எங்காலத்தவர்களையொப்ப அத்துணை அளவுகடந்த பொருட்களை வழங்கியும் சஞ்சலத்துக்கிலக்கான உள்ள நிலைகளை அடைந்தும் இடர்ப்படாதோராகவே, அன்னோர் ஆட்சிசெய்த சொற்கள் சுருக்கமுள்ளவைகளே எனச் சந்தேகமின்றி ஒப்புக்கொள்ளலாம்.



# இரண்டாம் அதிகாரம்

## Predicates Based on Spatial Relation

## இடம் பற்றிய பெயரீடு

எந் தமிழ் மொழியின் சொற்பரப்பை இனிது ஆராயுமிடத்து, ஒலிக் குறிப்புக்களாயுள்ள *சரசர*, கறகற என்றற் றொடக்கமான ஒரு கைம்மண்ணளவு சொற்களை ஒழித்து, ஒழிந்த உலகளவானவையெல்லாம் காரணப் பெயரீடாயுள்ளவைகளே என்பது தேற்றமாகும். மானுடன் தன் ஆச்சரியமான சிற்சத்தியின் வலிமையினால், அவ்வப் பொருட்களினும் செய்திகளினும் புறப்படத் தோன்றும் சிறப்பியல்புக்களைக்கொண்டு, அவ்வவற்றிற்கு வெகு சாதுரியமாய் நாமகரணம் செய்திட்டான். இது இந் நூலில் ஆங்காங்கு தெரிக்கப்படும். ஆகவே நன்னூலுடையார் ஆதியோர் கூறிய “இடுகுறி”ப் பெயர்கள் ஆதியிலுள்ளனவல்ல; அனைத்தும் காரணப் பெயரேயாய் எழுந்து, பிற்பட்ட காலத்தில் காரணம் தெரிக்கலாற்றாமற் கிடந்தனவே இடுகுறிப் பெயராயின என்க. இன்னணமே ஆரியத்தினை ஆராய்ந்து தாதுக்களை வகுத்தார் தமக்குப் புலனாகாச் சொல்லடிகளை “புலனாகாதன” என்றர்த்தமுள்ள ரூடங்களென்றார். இவ் ரூடங்களின் வழியே தமிழ் இலக்கண ஆசிரியரும் இடுகுறிப் பெயர் வகுத்தனர்போலும். தமிழ்ச் சொற்கள் யாவும் காரணப் பெயரீடே என “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே” என்றதனாலும், அப்பொருள் எளிதிற்காண்டற்பாலதன்று என “மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா” என்றதனாலும் தோன்றவைத்தார் தொல்காப்பியனாரும். (தொல். சொல்., 157, 394.) இனி, இக்காரணப் பெயரீட்டில் செயல்பற்

றிய பெயர்களும் பொருளாதியன பற்றிய பெயர்களும் அடங்கும். இங்கு எவ்வெச் சொல்லினாலும் குறிக்கப்படும் அனைத்தையும் பெயரீடு என்பாம். யாம் எடுத்தாளும் பெயரீடு வியாகரணகாரரின் பெயர், வினை, இடை, உரி என்னும் பாகுபாட்டினுள் அடங்காதது; அப் பாகுபாட்டினுக்கெல்லாம் மேற்பட்டது. பண்டைத் தமிழ் மக்கள் பொருட்களையோ, செய்திகளையோ, குணம் ஆதியவற்றினையோ குறித்தற்கு வழங்கிய சொல் எதனையும் யாம் இந்நூலினுள் பெயரீடு என்கின்றோம்.

## அறிவு உண்டாகி விரியும் முறை

இனி இப் பெயரீடு, முதற்கண், இடம்பற்றி எழுந்ததெனத் தமிழ்ச்சொல் ஆராய்ச்சியாற் பெறப்படுகின்றது. எவ்வெம் மொழிக்கும் இயல்பான தோற்றுவாயும் அஃதேயாம். எவ்வாறெனிற் காட்டுதும். ஐம்புலன்கள் வழியாய்ப் புறத்தேயுள்ளன மனத்தில் உறுத்தலும், அகத்தே கிளர்கின்றனவாகிய உணர்ச்சிகளுமே எமது அறிவு யாவற்றிற்கும் பிறப்பிடமாமென்பது உற்றுநோக்குங்காற் றெளிவாகும். ஆன்ம, தேகிகளாகிய நமக்கு இவற்றின் வேறான அறிவு யாண்டுமிலது. இதுபற்றியே அறிவுக்கு வாயிலாயுள்ளன பிரத்தியக்ஷம், அநுமானம், சத்தம் எனும் மூன்றுமாமென்பர் தர்க்கநூலோர். இவற்றுள் சத்தம் பிறர் அறிந்தனவற்றைச் சொல்லக்கேட்டலும், அநுமானம் அறிவுத் துறைகளை ஒப்புநோக்குதலுமாதலால் இவையிரண்டும் அறிவுக்குப் பிறப்பிடமாகாமல், அதற்கு உண்மைவாயிலாகும் பிரத்தியக்ஷத்திலடங்கும். அடங்கவே, கண் ஆதிய பொறிகள்வழியால் புறத்துப்பொருட்கள் மனத்திலுறுத்துதலே அறிவுக்கு உற்பத்தியாமென்றல் பெற்றாம். மேனாட்டாரின் தர்க்கநூற் கட்டுரையொன்றன் அடக்கமும் இதுவாம். "புறத்தினின்று பொறிகள் வழியாய் அகத்திற்





பிம்பியாதது ஒன்றும் புந்தியிலிலது" என்பது அக்கட்டுரை.

இனி ஆன்மாவின் எண்ணங்கட்கு அடிப்படையாயுள்ள உணர்வு யாதெனில், சிந்திக்கின்ற வினைமுதலாகிய "தான்" என்பதும், இத் "தான்" எனும் வினைமுதலின் வேறாகிய "தானல்லாதது"மேயாம், (The Ego and the non-Ego) "தான்" என்னும் அறிவு உள்ளுணர்வினால் உதிப்பது. "தானல்லாதது" எனும் அறிவு புறத்தேயுள்ளன தன்மேல் உறுத்துதலால் உண்டாவது. அப்பால் புறத்தேயுள்ள பொருட்கள் தன்மேல் உறுத்தும் முறையை நோக்குவோமாயின் "அடுத்தது", "தூரத்திலுள்ளது", "கீழுள்ளது", "மேலுள்ளது" எனும் இடச் சம்பந்தமே முதற்கண் பற்றப்படுகின்ற அறிவு எனக் காணலாம். "தான்" என்பதற்கும் "தானல்லாதது" என்பதற்கும் இடையில் வேற்றுமையைப் பகுத்தறிந்தவுடனேயும் உள், புறம் எனும் இடநோக்கு அவதானிக்கப்பட்டதாயிற்று. அதற்கப்பால், புறத்திலுள்ள பொருட்கள் தனக்கு அடுத்தனவோ, தூரத்திலுள்ளனவோ, கீழுள்ளனவோ, மேலுள்ளனவோ என்ற குறிப்பு நுணுகி அறியப்படும். இவ்வாறாக "தானல்லாதது" ஆகிய புறத்துப் பொருளின் சிறப்பியல்பை நோக்குமுன், அது தன்னோடு கொண்ட இடச்சம்பந்தமே எளிதிலும் முதற்கண்ணும் உணரப்படுவதாம்.

ஆதலால், மானுட அறிவு உற்பத்தியாகி விரியும் முறையைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். (முதற்படி) தனக்கும் தானல்லாததற்குமிடையில் வேற்றுமையை உணர்தல்; (2-ம்படி) தான் உள்ளும், தானல்லாதது புறமும் இருப்பதை உணர்தல்; (3-ம்படி) தனக்குப்புறத்தே உள்ளவைகள் தனக்கு அண்மையிலோ, சேய்மையிலோ, கீழோ, மேலோ இருத்தலை உணர்தல். (சூழவிருத்தல்,

இவை நான்கு நோக்கினுள்ளும் அடங்குமெனக் காண்க) இவ்வுணர்வுகளை ஒருவன் தனக்குள் அமைத்துக்கொண்டிருக்கும்வரையில் பெயரீடோ வேறெவ்வித குறியீடோ வேண்டப்படாது. தன் உணர்வுகளின் பயனான இன்ப துன்பங்களை தானே அநுபவிப்பன். ஆயின், அவற்றைப் பிறர்க்கு வெளியிட விரும்புவானாயின், அத் தன்னுணர்வுகளைத் தெரிவிக்க இயன்ற ஒலிகளையோ (பெயரீடு) சயிக்கினைகளையோ (குறியீடு) வழங்குமாறு தூண்டப்படுவன்.

ஒலிகளால்மட்டும் மொழி '(பாஷை) ஆக்கப்படல் வேண்டும் என ஓர் நியதியின்று. ஒலிகளைக் கையாடாது சயிக்கினைகளையே ஆதிதொட்டு மக்கள் தம்முணர்ச்சிகளைப் பிறர்க் கறிவுறுத்தும்பொருட்டு வழங்க எடுத்துக்கொண்டிருப்பாராயின், கைச்சாடைகளால், கண் வாய் ஆதிய உறுப்புக்களாற் காட்டும் பல வேறு தோற்றங்களினால் பயிலுகின்ற ஓர் மொழி உண்டாகி, மிகத் திருத்தம்பெற்றுத் திகழ்ந்திருக்கும் என்பதை புரோபசர் மாக்ஸ்முல்லரும் சம்மதித்துக் கூறியிருக்கின்றார். (Max Muller, II, 508) செவிட்டு ஊமர்கள் வழங்கும் சயிக்கினை மொழியும் மௌனநாட்டியர்கள் (Pantomimes) பயிலும் குறியீட்டு மொழியும் இவ்வாறானவையே. இவற்றைப் பரிசோதிப்போமாயின், யாங்கூறிய இடம்பற்றிய சயிக்கினைகளே இவற்றிற்கு அடிப்படையாம் எனக் காணலாம். நடத்தல், கிடத்தல், அடித்தல், வெட்டல் ஆதிய செய்திகளை அபிநயித்துக் காட்டுகின்ற குறிப்புக்களைத் தவிர்த்து, மற்றைச் சயிக்கினைகளெல்லாம் முதற்கண் அண்மை, சேய்மை, கீழ்ப்புறம், மேற்புறங்களையே நிலையுறுப்பாகக் கொண்டவைகளாகும் என நுணுகி ஆராய்ந்தறிக.

பெயரீடெல்லாம் வாயினாற் பேசுதலாகிய ஒலியாலுண்டாகும். இவ் ஒலி, வாயுவைத் தொண்டையின் நாளங்கள் வழியாய்த் தெளிவுறத் தொனித்தெழச் செய்தலினாற் பிறப்





பதாம். இங்ஙனம் தெளிவுறப் பிறப்பிக்கும் ஒலியே பேச்சு எனப்படும். தெளிவும் உறுதியுமற்ற அநுக்கம் கூக்குரல் ஆதிய ஒலிகள் பேச்சாகா. இனி, முதற்கண் புறத்து அறிவெல்லாம் இடச்சம்பந்தம் பூண்டதென்றாமன்றோ? பேச்சும் முதற்கண் அவ்வாறே இடம்பற்றியதாய் எழுந்தது என்றல் செவ்வனே செய்த தமிழ்ச் சொல்லாராய்ச்சியின் துணிபாம்.

## நால்வகைச்சுட்டு

இடம்பற்றியனவாய், தமிழ்மக்களின் ஆதிப் பேச்சுக்களாய், எந் தமிழ் மொழிப் பரப்பு முழுதினுக்கும் மூல வேர்களாய் நின்ற சொற்கள் இலக்கணவாசிரியரால் சுட்டுக்கள் என அழைக்கப்படுமவைகளாம். இச்சுட்டுக்கள் அ, இ, உ, எனும் மூன்றுமே என்பது அன்னோர் மதமாயினும், யாம் எகரம் எனும் நான்காவதோர் சுட்டையும் அவற்றோடு சேர்த்தல் வேண்டும். இலக்கண நூலோர் தமதாகிய இடைக்காலத்துத் தமிழ் வழக்குக்களைநோக்கி இலக்கணம் வகுத்துள்ளார் ஆதலால், தமிழின் தலைக்காலத்து வழக்குக்களை ஆராயாதுவிட்டார். "அ இ உம் முதற்றனிவரிற் சுட்டே" எனப் பவணந்தியார் கூறிய இலக்கணம் (எழுத். 66) அவ் அகர இகர உகரங்கட்குப்போன்று எகரத்துக்கும் பூரணமாய்ப் பொருந்துதலை இதன்கீழ்க் காண்க :

| அ | இ | உ | எ |
|---|---|---|---|
| அவன் | இவன் | உவன் | எவன் |
| அவள் | இவள் | உவள் | எவள் |
| அது | இது | உது | எது |
| அவர் | இவர் | உவர் | எவர் |
| அவை | இவை | உவை | எவை |

இங்ஙனம் எகரம் எவ்வாற்றானும் அகர இகர உகரங்களை ஒத்து நிகழ்கையில், இவற்றைச் சுட்டென்றவிடத்து அதனையும் அங்ஙனம் விதவாதுவிட்டமை யாதோ? தொடக்கத்தில் உண்மைச் சுட்டாய்நின்ற அதனில் பிற்றை

ஞான்று வினாவர்த்தம் பொருந்திவிடவே, அதைச் சுட்டெனக் கூறுதலையொழித்து வினா எனமட்டும் வரையறுத்தார் என்க. "அ இ உ எ இந்நான்குஞ் சுட்டு; இவற்றுள் எ சுட்டின் ஓர் சிறப்பு நிலையாகிய வினாப்பொருளைத் தரும்" என வரைதலே பொருத்தமுடைத்தாகும். இலக்கண ஆசிரியர் இவற்றின் பண்டைநிலைகளை ஆராய எடுத்துக்கொண்டாரில்லை. ஆயினும் நச்சினார்க்கினியர் "அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு" எனும் தொல்காப்பியச் சூத்திர உரையின்கண், "தன்னினமுடித்தல் என்பதனான் எகரம் வினாப்பொருள் உணர்த்தலுங் கொள்க" எனக் குறித்துப் போந்தமை நோக்கத்தக்கது.

பண்டை நூலாசிரியரானோர் எகரத்தைச் சுட்டாகத் தெரிக்காமைமட்டுமன்று, தாம் எடுத்தாண்ட அகரமாதிய சுட்டுக்களின் பூர்வ அர்த்தங்களையும் விளக்க அக்கறையில்லாதோராயினர். தமிழரின் புராதன சொல்வழக்குக்களை ஒப்புநோக்கித் துருவி ஆராயுங்கால், அகரம் முதற்கண் அண்மையையும், உகரம் சேய்மையையும், இகரம் கீழுறுந்தன்மையையும், எகரம் மேலுறுந்தன்மையையும் சுட்டுகின்றனவாமென்பது பெறப்படும். இவை மூன்று பேச்சொலிகளும் பிறக்கும் முறையும் இதனை உணர்த்துகின்ற பான்மையைக் கவனிக்கத்தகும். வாயை அகலத் திறக்கும்போதே, அருகில் உள்ளதைச் சுட்டுதல், அகன்று அகன்றுபோதல் எனும் குறிப்புத் தோன்றும். இதுவே அண்மைச் சுட்டாகிய அகரம். இதழ்களை நீட்டிக் குவித்து வாயுவை வெளிப்படுத்துவது "ஓடு," (தூரத்துச்செல்) "உட்செல்லு" என்ற குறிப்பை இயல்பாகவே காட்டும். இதுதான் சேய்மைச் சுட்டாகிய உகரம். இனி, குரலைக் கீழடக்கி இகரத்தை உச்சரிக்கும்போதே "இறங்கு" "கீழ்ப்படு" என்ற குறிப்புத் தோன்றும். இது கீழுறுஞ் சுட்டாகிய இகரம். குரலை மேலெடுத்து ஒலிப்பதாகிய





எகரம் "ஏறு" "மேற்கிளம்பு" என்ற குறிப்பையுள்ளடக்குகின்ற எகரச் சுட்டாம்.

அகரச்சுட்டு இலக்கண ஆசிரியரின் "அவன், அக்கொற்றன்" என்பனவான எடுத்துக்காட்டுக்களிற் தூரத்துப் பொருளை உணர்த்தல் உண்மையாயினும், தன்னடியாய்ப் பிறந்த அ-யல், அ-டு, அ-ண்டை ஆதிய எண்ணிறந்த தமிழ்ச் சொற்களிலே அண்மையைக் குறிக்கின்ற விசித்திரம் மேல்வரும் ஆராய்ச்சிகளாற் தெளிவுறும். முன் அண்மைச் சுட்டாயிருந்து பின்னரே அஃது படிப்படியாய்த் தூரத்துப் பொருட்களையும் உணர்த்தலாயிற்று என்க.

உகரச்சுட்டு இலக்கணங்களில் "உவன், உக்கொற்றன்" எனும் உதாரண விளக்கமுடையதாய் எதிர்முகத்திலுள்ள பொருளை உணர்த்துவதென்னப்படும். இது சிறுபான்மையேயாம். ஆயினும் "ஊழையுமுப்பக்கங் காண்பர்" என்ற திருவள்ளுவர் (620) மேற்கோளிற்போல, உகரம் உரைப்போற்குத் தூரத்துள்ள பொருளையுஞ் சுட்டுமென்பர். ஆரிய பாகதங்களாகும் இந்தி, பஞ்சாபி, சிந்தி எனும் மொழிப் பிரதிப் பெயர்களில் முறையே உ, (ஓ, வஹ) உஹ, ஊ (ஹூ, ஹொ) என்பன சேய்மைச் சுட்டாய் நிற்றல் காண்க. (Beames, II. 318) பாகதங்களில் பலகாலும் சமஸ்கிருதத்துக்கு முற்பட்ட அமிசங்கள் காணப்படுதல் ஒருதலையாகலின், சுட்டிய மொழிகளின் உம்முதற் பிரதிப் பெயர்களால் உகரம் ஆதியிற் கொண்டிருந்த சேய்மைப்பொருள் விளக்கமாகும் என்க. இவ் உகரம் தமிழ்மொழி அமைப்பின்கண் "உ-ம்பர்" "உ-ச்சி," "உ-யர்," "ஊ-ங்கு" ஆதிய பல நூறு சொற்களில் சேய்மையையும், "உள்" ஆதிய அநேக அடிகளில் சேய்மையின் திரிபாகிய மறைவாந்தன்மையையும், "உய்" ஆதிய அடிகளில் உள்ளிருந்து புறம்போந்து சேய்மையாந்தன்மையையும் தெரித்தல் காணப்படும்.

இகரச்சுட்டு இலக்கண நூலோர் தருகின்ற "இவன், இக்கொற்றன்" எனும் உதாரணங்கட்கேற்ப அண்மைப் பொருளைச் சுட்டுகின்ற இடைச்சொல் என்ப. தமிழ்ச் சொற்பிறப்பின்கண் இது அண்மையோடு உறவுபூண்டதும், ஒருவர் காலடியிலுள்ளது போன்றதுமான கீழுறுந்தன்மையைக் குறிக்கும். இ-டு, இ-ரு, இ-ழி ஆதிய பல தமிழ்ச் சொல்லடிகள் இக்கீழுறுந்தன்மையை உணர்த்துஞ் சுட்டிற்கு இலக்கியமாதல் மேலே காட்டப்பெறும்.

எகரம் இலக்கண நூலோர்க்கு "எவன், எக்கொற்றன்" என்ற வாய்பாட்டு உதாரணங்களிற்போல! வினாப் பொருளைத்தருவதோர் இடைச்சொல் மாத்திரையேயாம். இவ் வினாப்பொருள் தானும் "பலவற்றுள் ஒன்றைத் தெரிந்து எ-டுத்தல்" எனும் பொருளை ஆசிரயித்து நிற்பது. எ-டுத்தல்=மேலே எ-ழுப்புதலே. இவ்வர்த்தத்தில் அன்றே தமிழில் தேற்றேகாரம் வருகின்றமையுமாம். தேற்றம்=தெரிந்து எடுத்தல். குப்பாடையில் ஏகாரம் ஓர் சுட்டாக நிலவுகின்றது.। (Caldwell, p. 420) ஆதலால் "மேலுறுந்தன்மை"யே எகரத்துக்குரிய ஆதிப்பொருளாம் எனவும், தெரிந்து அன்றேல் மேலே கிளத்திச் சுட்டுவதனால் எகரமும் ஒரு சுட்டெனப்படுந் தகுதி சான்றதாம் எனவும் காண்க. எடு, எழு எனுஞ் சொற்களும் "தெரி" (தெளி) என்பதூஉங்கூட தமிழ்மொழி யமைப்பில் எகரத்துக்கு உரிய "மேலுறுந்தன்மை"க்கு உள்ள தொகைப்பட்ட உதாரணங்களுட் சிலவாம். பலருள் ஒருவனை எழுப்பிவிட்டாற்போலச் சுட்டி நோக்குவதே எ-வன், எக்-கொற்றன் எனும் வினாவாவதை நுண்மதியாற் கண்டு மகிழ்க. இவையாவும் மேல்வருவனவற்றால் விகசிதமாகும்.



# மூன்றாம் அதிகாரம்

## Primary Roots

## முதற்சொல்லடிகள்

மானுடனின் புத்தி விருத்தியானது தனக்குப்புறத்தே உள்ள பொருட்களை அ, இ, உ, எ எனும் நால்வகைச் சுட்டினாலும் குறிப்பிடுதல் மாத்திரையோடு அடங்கியிருக்கவறியாது. அண்மை சேய்மை முதலிய மங்குளமான இக்குறிப்புக்கள், வரையறுத்து யாதொன்றைக் காட்டும் ஆற்றல் வாய்ந்தனவல்ல. ஆகவே, மேலும் அதிதுலக்கமான பெயரீட்டை நோக்கி, அங்காத்தல் முதலிய எளிதான முயற்சிகளால் ஆன சுட்டுக்களாகிய உயிர் ஒலிகளோடு, சிறிது அரிதான உச்சாரண முயற்சியை வேண்டுகின்ற மெய் ஒலிகளுஞ் சில சேர்க்கப்படலாயின. அ, இ, உ எனும் இவைமூன்றுமே வாயை வெவ்வேறு ஆகாரமாய் அங்காத்து ஒலிக்கும் வெவ்வேறான உயிர்கள் என்பதையும், மற்று "எ" உட்பட எட்டும் இவற்றின் திரிபுகளே என்பதையும் ஈண்டு கவனிக்குக. "ஆ", அகரத்தின் திரிபு; "ஈ", இகரத்தின்திரிபு; "எ"யும் அவ்வாறே; "ஏ", எகரத்தின் திரிபு; "ஊ", உகரத்தின் திரிபு; "ஒ"வும் அவ்வாறே; "ஓ" ஒகரத்தின் திரிபு; "ஐ" அகரமும் இகரமும்சேர்ந்த சத்தமன்றிப் புறம்பான ஒலியன்று; ஔகாரமும் அவ்வாறு அகர உகரங்களின் சேர்க்கையாம். இதனானே ஐகார ஔகாரங்களை வடநூலார் சந்தியக்கரம் என்பர். பெயரீட்டின்கண், நால்வகைச் சுட்டுக்களோடு அவற்றிற்கினமானவையும் அவற்றைப்போல அங்காத்தல் ஆதிய முயற்சிகளால் எளிதில் உச்சரிக்கப்படுகின்றவைகளுமான பிற உயிரொலிகள் எவ்வாறு வேலைகொள்ளப்பட்டன என்பது அடிக்குள் விளக்கப்படும்.

தமிழ்ச் சுட்டொலிகள் புறத்துப்பொருட்கட்கு மிக மங்குளமான பெயரீடாயின என்றும். மெய்யொலிகள் அம்மங்குளத்தை நீக்கி மனக்குறிப்புக்களைத் துலக்கமாய் விளக்க உதவியாயின. உயிரொலியாவது தொண்டையின் நாளங்கள் வழியாய் எழுந்து தடையின்றி வெளிப்படும் வாயுவினாலுண்டாவது. அவ்வாயு அடித்தொண்டை, நா, அண்பல் ஆதிய தடைகளால் நெருக்குண்டதாகிப் புறப்பட்டு வருவதால் உண்டாகும் ஒலியே மெய்யொலியாம். உயிரொலியைத் துலக்கமாக்கி வேறுபடுத்தும் பெற்றி வாய்ந்தது இம்மெய்யொலி. இதனாலன்றோ வடமொழியாளரும் மெய்யெழுத்தை, "விளக்குவது" எனும் பொருளுள்ள வியஞ்சனம் என்றழைத்துப்போந்தார்.

## எண்ணத்தைச் சிறப்பித்து விளக்கும் வியஞ்சனங்கள்

இனி, தமிழ்மக்கள் வழங்கிய தலைச்சொற்கட்கு முதற்கண் உபயோகமான மெய்களானவை, உயிர்களைக் காட்டிலும் ஒரு சிறிதுமட்டும் முயற்சிகூட்டி உச்சரிக்க இயன்றவைகளேயாம். இவ்வண் மனோதத்துவநூலாளர் கூறும் ஓர் உண்மை எடுத்துக்காட்டற்பாலது: அது யாதோவெனில், முயற்சியைச் சுருக்குதலே மானுடசுபாவமாம். கஷ்டசாத்தியமானது எதுவெதுவோ அதுவதனை வெறுத்து, இலகுவிற் பெறத்தக்கதனையே விரும்புதல் அதற்கியல்பு. ஆதலால் சுகசாத்தியமான மெய்கள்தாம் முதற்கண் ஆட்சியிற் கொண்டுவரப்பட்டன. நால்வகைச் சுட்டுக்களால் வெளியிடப்பெற்ற துலாம்பரமற்ற மனக்குறிப்புக்களை இம்மெய்களின் துணைக்கொண்டு விகற்பித்தல்வாயிலாய் மேன்மேலும் வரையறுத்த எண்ணங்களும் பெயரீடுகளும் நிகழ்த்தப்பெற்றன.

மெய்களுள் மிக எளிதில் உச்சரிக்கப்படுவன ய் வ் எனுமிரண்டுமாம். உண்மையில் இவை உயிரோடு பெரி





தும் ஒப்புமையுமுடையன. இடை நாவினால் சிறிதுநெருக்குண்டு பிறக்கும் அகரமே யகரமெய்யும், உகாரத்துக்கெனக் குவித்த இதழ்களைச் சிறிது நெருக்குவதினாற் பிறப்பதே வகரமுமாம். ஆதலாலன்றே இவையிற்றை மேனாட்டு வியாகரணகாரர் "அரையுயிர்" எனக் குறிக்கின்றனர். இவ் யவ்வையும் வவ்வையும் அணுகிச் சார்ந்தன ல், ர், ம் என்பனவாம். லவ்வும், ரவ்வும் அப்பால் மேன்மேலும் வேண்டப்பட்ட சொல் வேறுபாடு நோக்கி, ள், ழ், த், ட், ற், ன், ண் எனவாயின. இவைதாம் நால்வகைச் சுட்டொடுங்கூடி தமிழ் மொழியின் பிரதம சொல்லடிகளின் உற்பத்திக்கு உபகாரமாகிய "வியஞ்சன" அமிசங்களாம். பின்னும் அவ்வடிகளின் மெய்யீறுகள், இலகுவாய் உச்சாரணமடையும் முகத்தால், பலகாலும் அ என்னும் ஆதி உயிர்கூடப்பெற்று இயன்றன. அவ்வுச்சாரண அகரமும், விகற்பம் நோக்கி, ஐகார, இகர, உகரங்களாகத் திரிந்து சொல்லடிகளின் தொகையினைப் பலுகச்செய்திட்டது.

எங்ஙனம்? அண்மைச்சுட்டாகிய அகரம் யகர "வியஞ்சன"த்தால் விளக்கம்பெற்று, அய் (ஐ) என்றாகி "நெருங்கியுள்ளதை"க் குறித்தது. இந் நெருங்கிய அண்மையால் பிதா, அரசன், கடவுள் எனும் பொருட்களும் அழகு எனும் பொருளும் பெறப்படும்.—"என்னை வானமெய்தி" (பாரத. வாரணா. 35) "ஐ மைந்தா சரணந்தனமும்" (கந்தரங். காப்பு 2); இவ் அய் எனும் அடி மேலும் "அக" எனக் ககர வியஞ்சனம்பெற்று விரிதலினால் அகட்டுதற்பொருளும், "அஃ" எனச் சுருங்குதலினால் அடக்குதற்பொருளும் அடையும். அகல்(தல்)=விரிதல், நீங்குதல்;—"பாயிருளகல" (புறநா. 25). அஃ(கல்)=சுருங்குதல், குறைதல்;—"கற்பக்கழிமடமஃகும்" (நான்மணி. 29) "அ(க்)அ" எனும்போது அங்காத்தல் அதிகமாகி பேசுமவனிடத்தினின்றும் பொருள் தூரமாதல் காட்டப்படுதலை

யும், “அஃ” எனச் சப்தத்தை ஒடுக்கும்போது அண்மையும் அதிகமாகி பேசுமவனுள் அடங்கிவிடுதல் தோன்றுவதையும் நுனித்துக்காண்க.

அகரச்சுட்டு வவ்வொடு விளங்கி, உச்சாரண உகரத்தோடு வகரமும்பெற்று, அவ்வு என்றாகும். அவ்வுதல் அண்மைகொள்ள நெருங்குதலேயாம். இங்கு வந்தடைந்த வ் எனும் இடைநிலையும் மேல் உதாரணங்களில் வரும் க் ஆதியவைகளும் இலேசான உச்சாரணத்தை நோக்கி இயல்பாயெழுந்தனவாம். அங்காத்தல் மாத்திரையால் மிகச் சுலபமாய்ப் பிறக்கும் அகர உயிர்தானும் செவிக்குப் புலனாகாததோர் முதனிலை மெய்யோடு கூடியே உச்சரிக்கப்படுதலை உற்றுநோக்குக. “எவன்” என்பதை “யெவன்” என்றும், “எப்படி” என்பதை “யெப்படி” என்றும் தமிழ்நாட்டார் சில்லோர் உச்சரிப்பது பிரசித்தம்.

அகரச்சுட்டு லவ்வொடு விளங்கி உச்சாரண ஐகாரம் பெற்று அலை என்றாகி, நெருக்கமாகிய மிகுதியையும், அடுத்துநின்றும் போவதுமாகிய அசைவையும் கருதும்.—“கண்ணீரலைப்பட்ட கொங்கையாள்” (நளவெண். கலிநீ 34) “அலைமேற்கொண்டல்லவைசெய்யும்” (குறள். 551)

அகரச்சுட்டு ரவ்வொடு விளங்கி இருமடியாய் உச்சாரண உவ்வும் இடைநிலையும் பெற்று அருகு என நின்று நெருங்கியுள்ளதாகிய ஓரத்தைக் குறிக்கும்.—“தும்பியருகுடைக்கு நணுட்டரசு” (நளவெண். கலிநீ. 24) அருவு (தல்) எனும் உருவம் கிட்டிச்சேர்தலை உணர்த்தும்.

அகரச்சுட்டு மவ்வொடு விளங்கி உச்சாரண ஐகாரத்தோடு அமை அம்மை என நின்று நெருங்கிய தன்மையாகிய நிறைவு அழகு எனப் பொருள்படும்.—“அம்மையஞ் சொலார்” (சிந்தா. முத்தி. 533, பிங்.1941) ஐ, ஆய், (தாய்) என்பதோடு அம்மையை ஒப்புநோக்குக. அமைச்சன் ஆமாத்தியன் என்பனவும் அமைஎனும் அடிப்பிறந்தனவே.





அகரச்சுட்டு ளவ்வொடு விளங்கி அள் எனவாகி நெருக்கம், கூர்மை ஆதிய பொருள்கொள்ளும்.—“அள்ளிலைத்தாளி” (புறநா. 252); “அள்ளிலைவேல்” (கந்தபு. வள். 1)

அகரச்சுட்டு ழவ்வொடு விளங்கி அழு-ங்கு அழு-ந்து என உச்சாரண உகரம் இருதடவையும் இடைநிலையும் பெற்று நெருங்குதல் வருந்துதல் எனும் பொருளையேதரும்.—“அவரையழுந்தப்பற்றி” (புறநா. 77) “அலரதாகாதொழியுமே யழுங்கல்” (சிந். கனக. 110)

அகரச்சுட்டு இரட்டித்த தவ்வொடு விளங்கி உச்சாரண உகரம் பெற்று அத்து என நின்று நெருங்கி அடைதலைக் காட்டும். பொருத்துதலுமது. (சூ. நிக. 11, 12) அத்தன், ஆத்தை எனும் முறைச்சொற்களையும் ஐ, ஐயன் ஐயை, ஆய் என்பனவற்றோடு ஒப்புநோக்குக.

அகரச்சுட்டு டவ்வொடு விளங்கி உச்சாரண உகரம் பொருந்தி அடு என நின்று நெருக்கத்தையும் சேர்தல், சேர்த்தலையுமே விளக்கும். அடைதலுமது.—“அந்நாளடுத்து வயமாருதியை” (பாரத. மணிமா. 3) “வெண்டுகிலடுத்து” (சிந்தா. காந்த. 125)

அகரச்சுட்டு றவ்வொடு விளங்கி உச்சாரண ஐகாரம் பெற்று அறை என்றாகி நெருங்க இறுக்குதற் பொருளையும் அதனோடுறவுபூண்ட அடித்தற்பொருளையும் தரும்.—“இதயத்தாணியறைந்ததும்” (இரகுவ. இந்தும. 85) “முரசறையுமாக்கடல்” (சிந்தா. மண். 67)

அகரச்சுட்டு ணவ்வொடுவிளங்கி இரட்டை உச்சாரண உகரத்தோடு இடைநிலையும்பெற்று அணுங்கு என நின்று நெருங்கி முட்டுறுதல், கெடுதல் எனும் பொருள் கொள்ளும்.—“வாட்படையணுங்கவேடர்” (சிந்தா. கோவிந். 28) “ஓதிமமச்சமுற்றணுங்கி” (உபதேச. சிவத்து. 210) நெருங்

குதற்பொருளில் அன்னை எனும் முறைச்சொல்லை ஐ, அத்தன் ஆதியவற்றுடன் ஒப்புநோக்குக.

அகரச்சுட்டு ணவ்வொடு விளங்கி உச்சாரண இகரம் பெற்று அணியென நின்று நெருங்கிய சமீபத்தை உணர்த்தும்.—"இறையணிகேட்கவுய்த்திட்டனர் பூசல்" (சிந்தா-கோவிந். 19) அண்ணித்தல், நெருங்கப் பொருந்துதல்.—"ஆரமுதாயண்ணிக்கு மையாற்றான்காண்" (திருநாவுக். திருவா. 2)

## ஏனைய சுட்டடியான சொற்கள்

இதுகாறும் அண்மைப்பொருளதாகிய அகரச்சுட்டு முதலாக நின்று, எளிதினுச்சரிக்கப்படும் விளக்க அமிசங்களாகிய மெய்களினுதவியோடு தோன்றச்செய்த சொல்லடிகளுட் சிலவற்றை நோக்கினாம். மற்று, முறையே சேய்மை, கீழுறுந்தன்மை, மேலுறுந்தன்மை எனும் பொருள்கொண்ட உகர, இகர, எகரச்சுட்டுக்களும் அவ்வாறு மெய்யெடுத்து தத்தம் பொருளைச் சிறிது சிறிதாய் வேறுபடுத்தும் இரீதியைச் சுருக்கி ஈண்டுத் தருவாம்.

உகரச்சுட்டிற் பிறந்த முதற்சொல்லடிகளிற் சில பின் வருவன :—

உ-ய்(தல்) உள்மறைந்து சேய்மையை நாடுதல்.—"உண்ணாவறுங்கடும்புய்தல்வேண்டி" (புறநா. 181)

உ-வ(த்தல்) உள்ளிருந்து பொருமி உயர்தல், உளம் பூரித்தல்; உப்புதலுமது.—"உகப்பேயுயர்வு, உவப்பே யுவகை" (தொல். சொல். 306)

உ-லை(தல்) உள்ளாகிய நிலைகுலைந்து சேய்மையிற் சிதறுண்ணுதல்.—"ஒன்னாத்தெவ்வருலைவிடத்து" (பெரும்பாணா. 4,9)

உ-ர-வு(தல்) உள்ளாகிய இடம்விட்டுப் பெயரல்.—"உரவுநீரழுவத்தோடுகலம்" (பெரும்பாணா. 350)

உ-மி(ழ்தல்) உள்ளிருந்து வெளியேற்றுதல்.—"உள்ளத்தானுமிழவேண்டா" (சீவக. 2149)





உ-ள் மறைவிடத்தே

உ-ழு(தல்) உட்செலுத்திக் கிண்டுதல்.—"உழுதுமா நிலத்தேனமாகி" (தேவா. 929, 9)

உ-தி(த்தல்) உள்நின்று புறப்படுதல்.—"மீளவுமுதித்தனன்" (பாரத. இரண்டாம். 32)

உ-டை(தல்) உள் விழுதல். — "உடைபுநெஞ்சுக" (கலித். 10) உகல், உட்கலுமது.

உ-று(தல்) வேரூன்றியவாறு (உட்செலுத்தி) நிலைநிற்றல்.—"உயிர்வழங்கும் வாழ்க்கையுறும்" (பு.வெ. 2, 13)

உ-ன்(னல்) உள்நோக்குதல், நினைத்தல்.—"உன்னலே தியானம்" (கந்தபு. திருநக. 81)

உ-ண்(ணல்) உட்செலுத்துதல், தின்னுதல்

இகரச்சுட்டுவழியாய்ப் பிறந்த சொல்லடிகளிற் சில வருமாறு :—

இய(ங்குதல்)=கீழ் இறங்குதல், செல்லுதல், இதன் ஆதிப்பொருளை "மாக்கடல் கண்டியையமாந்திக்......கார் தோன்ற" எனும் (திணைமாலை 100) மேற்கோளையும் "எறி நீரடைகரையியக்கந்தன்னில்" எனும் (சிலப். 10,90) மேற்கோளையும் ஒப்புநோக்கிக் காண்க.

இ-லை, கீழுள்ளது, செடிகளினிலை

இ-ரு(த்தல்) கீழ் உட்காருதல்

இமை(த்தல்) கீழ்ப்படுதல், குறைதல். — "இமைய வருங்கடன்" (கல்லா. 7)

இ-ள(கு-தல்) கீழ்நிலையடைதல், தணிதல். — "நீர்நின்றிளகிற்றிது வேண்டாம்" (சீவக. 718)

இ-ழி(தல்) கீழ்விழுதல். — "வெண்மதியம்......நிலத்திழிந்த தொத்தனவே" (சீவக. 2238)

இ-த(ழ்) கீழ்விழுவது. பூவிதழ், ஓலை.—"புல்லிதழ் பூவிற்குமுண்டு" (நாலடி. 221)

இ-டு(தல்) கீழே வைத்தல்

இ-ற(ங்குதல்) கீழ் நோக்கிச் செல்லல்

இ-ழை(தல்) கீழே இறங்குதல்=இரங்குதல்.—"சேர்தியோ வென்றிழைந்திரங்கி" (சிந்தா. நாம. 263)

இ-ண(ர்) கீழே தூங்குவது, குலை.—"இணர்ப்பெண்ணை" (பட்டினப். 18)

எகரச்சுட்டுவழியாய்ப்பிறந்த சில சொல்லடிகளாவன :—

எ-ய்(தல்) மேல் எழச் செலுத்துதல்.—"பூக்கோள் எனவேஎய்க்கயம் புக்கனனே" (புறநா.341)

இ-வர்(தல்) (இங்கு எகரம் இகரமாயிற்று.) மேலெழுதல்—"விசும்பிவர்ந்தமான் சென்றான்" (சீவக. 959)

எ-ல்(லு) மேல் எழுவது, சூரியன்.— "எல்லுப்பட விட்ட சுடுதீவிளக்கம்" (புறநா. 16, 7)

எரி(தல்) மேலெழுந்து வீசுதல், மேற்படுதல்=முதிர்தல்.—"எரிகின்ற மூப்பினாலும்" (கம்பரா.மருத்து. 17)

இ-மை (எகரம் இகரமாயிற்று.) மேலுள்ளது, உயர்ந்தது. இமயம், (மலை, பொன்) இமையவர் எனும் சொற்களை நோக்குக.

எ-ழு(தல்) மேற்கிளம்புதல்

எ-தி(ர்) மேல் எழுந்து வருவது — "எதிரல்ல நின் வாய்ச் சொல்" (கலித். 96)

எடு(த்தல்) மேலே கிளப்புதல்

எ-றி(தல்) மேலே வீசுதல்

எ-ன்(னல்) சுவாசத்தை மேலெடுத்தல்=சொல்லுதல்

எ-ண்(ணல்) ஒவ்வொன்றாய்ப் பொருட்களை மேல் எடுத்துக் கணக்கிடுதல்



# நான்காம் அதிகாரம்

## Secondary Roots

## வழிச் சொல்லடிகள்

அகரமாதிய நான்கு சுட்டுக்களோடும் சுலப உச்சாரணமுள்ளனவான மெய்களோடும் இயன்ற சொற்கள் அண்மை ஆதிய இடம்பற்றிய எண்ணங்களை இன்னும் அதி மங்குளமாகவே விளக்கிக்கொண்டிருந்தன. மானுடனது நுண்மதியின் முயற்சிகட்கு அவைதாம் போதியனவாயிற்றா? அற்றன்று. தன்னைச்சூழ்ந்துள்ள பொருட்களின் குணம் செயல் ஆதிகளை நுனித்துநுனித்துக் கண்டு அவ்வவற்றிற்குப் பெயரீடுசெய்து தன்போலியரோடு அளவளாவிப் பேசும்முகத்தால், அவன் மீண்டும் பலபுதுச் சொற்களை இயற்றத் தேடினன். இவைதாம் வழிச்சொல் அடிகளாம்.

### நெட்டுயிர்கள்

முன்னைய அடிகளைக்கொண்டு ஆக்கப்பட்ட இப்பின்னையவைகட்கு முதற்கண் நெட்டுயிர்கள் ஆதாரமாயின. குற்றுயிர்களை உச்சரித்தலினும் நெட்டுயிர்களை உச்சரித்தலில் கூடிய முயற்சி வேண்டப்படுமன்றோ. இக் கூடிய முயற்சியானது கூடிய உறுதிப்பாட்டையும் வருவித்தது. குற்றுயிர் முதலான சொல்லின் அர்த்தம், நெட்டுயிர்ப் பேற்றினால் வலியுறுத்து வேறுபாட்டை யுணர்த்துவதாயிற்று. இவ்வாறே, முன் நெருங்கியுள்ளதைக் குறித்த "அய்" என்னும் அடி, அவ் அகரத்தை நீட்டி "ஆய்" என உச்சரித்ததனால் மீசுரமான நெருக்கத்தினைக்காட்டி, சுருங்குதலை நுணுகுதலை உணர்த்துவதாயிற்று. "ஓய்தலாய்தல்.....உள்ளதனுணுக்கம்" என்றார் ஒல்காப்புகழ்த்

தொல்காப்பியனாரும் (சொல் 330). மிக நெருங்கிவருதலே சுருங்குதல் எனக் காண்க.

அதி சுட்டிப்பான அர்த்தங்களை விளக்குமாறு ஆக்கப்பெற்ற துவிதீய சொல்லடிகட்கு, பின்னும், சொன் முதல் மெய்யொலிகள் உதவியாயின. தமிழ்மொழியின்கண் ஆதியில் ஒரு சில மாத்திரையாயிருந்த சொற்களெல்லாம் பிரதமத்தில் உயிர் முதலானவைகளே என்பது முன்கூறிப் போந்தவைகளால் சித்தித்துள்ளது. இனி அப் பிரதம சொற்களை வலியுறுத்தி, அதி துலக்கமாக்கி, பெயரீடுகளின் தொகையையும் வேறுபாட்டையும் அதிகரித்தற்கு அவ் உயிர்முதல்களோடு ஒவ்வோர் மெய்யைச் சேர்த்தல் தகுதியாயிற்று. பேச்சுக்குத் தாரகமாகிய வாயு அடித்தொண்டை ஆதிய தடைகளால் நெருக்குண்டு புறப்படுவதுதான் மெய் ஒலி எனப்படுமென்றும். இவ் விசேட முயற்சியால் உண்டான மெய் ஒலியானது குறைந்த முயற்சிபூருவமான உயிரோடு தொடங்கிய ஒரு சொற்கு முதலாகும்போது, அச் சொற்கு அதிக உறுதியும் அதனால் விகற்பமான ஓர் பொருளையுணர்த்தும் வன்மையும் உண்டாகும். இவ்வாறே "ஆய்" என்ற உயிர் முதல்கொண்ட சொற்கு சகர மெய் முதலாகும்போது "சாய்" என்றாகி மேலும் மீசுரமான சுருங்குதலையும் மெலித்தலையும் உணர்த்தும். — "நெறிதாழ்ந்து சாயினள் வருந்தியாளிடும்பை" (கலி. 121) ஓர்பக்கத்துச் சரிந்துவீழ்தலும், சாதலும் இவ் வர்த்தத்தினின்றே உற்பத்தியானவையாம்.

## சொன் முதல் மெய்கள்

இன்னணமே, முதற்கண் நால்வகைச் சுட்டுக்களாகும் குற்றுயிர் முதலாய் எழுந்த சொல்லடிகள், அப்பால் நெட்டுயிர்களைச் சொன்முதலாக மேற்கொண்டு அதிக துலக்கமும் விகற்பமுமான அர்த்தம் பெறுவனவாயின. மேலும் அச் சொன் முதற் குறில்களும் நெடில்களும் மெய் ஒலிகளின்





கூட்டரவால் அதிக உறுதிபெற்றுப் புதுப் புதுச் சொல்லடிகளாயின. இம் மெய்களுள் வலிமைகொண்டு உச்சரிக்கப்படுமவை வலிமையோடு கூடிய அர்த்தத்தையும், மென்மையாய் உச்சரிக்கப்படுமவை மென்மையோடுகூடிய அர்த்தத்தையும் காட்டும் சொற்கட்கு முதலாயினமையும் சகசமே. இவ்வரன்முறை முழுதினுக்கும் ஈண்டு ஓர் உதாகரணம் தருவாம்.

"அடு" என்பது அகரச்சுட்டாகிய குற்றுயிர் டகர ஒற்றால் விளக்கம்பெற்று உச்சாரண உகரத்தோடு இயன்ற ஓர் முதற் சொல்லடியாம். இதன்பொருள் நெருக்கமும், சேர்தலும் சேர்த்தலும் என்றும். இச் சொன் முகற் குற்றகரம் நெடிலாகும்போது "ஆடு" எனும் வழிச் சொல்லடி பிறக்கும். ஆடுதலின் பொருள் அமிழ்ந்துதல், பூசுதல் முதலியனவாம்.—"பூக்கமழ் பொய்கையாடச் சென்றோன்" (மணி. 17, 32); "ஆடிய சாந்தமும்" (மணி. 16, 31) நெருங்குதல் என்னும் பொருளே இங்கு மீசுரமும் விகற்பமும் பெற்றுநிற்றலை உய்த்துணர்க. இனி, இவ் "அடு" எனும பிரதம சொல்லடியின் முதனின்ற அகரத்திற்கு வல்லினமெய்கள் முற்படும்போது "கடு", "தடு", "படு" ஆதிய துவிதீய சொல்லடிகள் உளவாகும். கடு(கு)தல் சமீபித்தலாம்.—"காவலர் கடுகுதல்" (அகப்பொ. களவி. 45) விரைந்துசெல்லலும் அது. தடுத்தல், நெருக்கி அடைத்தலாம். படுதல், திகிலுறுத்தும்பான்மையாய் அடுத்துநிகழல் (ஒலி), தரையோடு வீழ்ந்து தாழ்தல் முதலிய பொருளைத்தரும். — "படுகண்முரசங் காலையியம்ப" (மதுரைக். 232); "படுமணியிரட்டுமருங்கில்" (திருமுரு. 80). அப்பால், மெல்லினமாகிய நகரத்தைச் சொன்முதலாகக் கொள்ளும்போது இவ் "அடு" எனுஞ்சொல் நடு(ங்கு) என்றாகி மென்மையாய் அடுத்தடுத்து அசைதல், பதறுதலை உணர்த்தும்.—"பருந்துபட

வொன்றுத்தெவ்வர் நடுங்கவோச்சி" (பெரும்பா.118) பிறிதொரு மெல்லினமெய்யாகும் மகரம் சொன்முதலாகுமிடத்து "அடுத்தல்" மடுத்தலாகி, அழுத்துதல் கலத்தல் ஆகிய பொருள் தந்து நிற்கும். — "ஞானவாரிமடுத் தானந்தம் பொழிந்து" (சிவ. சித். 8, 16) "இறைவனின்னருட்கடற் றுறையின்வாய் மடுப்பவே" (திருவிளை. அட்ட. 18)

## சொல்லீற்று மெய்யிரட்டல்

மீட்டும் வேறொரு உபாயத்தால் சொற்கள் பல்கித் தொகை விரிந்தன. பல பிரதம அடிகள் ஈற்று மெய்யை இரட்டலால் பிறவினையாயின. இரட்டியவைகளுள் முந்தியதை மெலித்தலால் தன்வினையாயின. உதாரணம்:— சமீபத்திருத்தல், சமீபத்துவைத்தல் எனும் பொருளுள்ள அடு எனும் அடி, அட்டு என ஒற்றிரட்டி, இறுகப் பிழிதல், வடித்தல் என வந்தது. — "சீயட்டு முயவு நோய்" (சீவக. 2798) அதுதான் அண்டு எனவாகி நெருங்கிச் சேர்தல், பொருந்துதல் எனப்பொருள்கொண்டது.-"அண்டினள் சேர்தலும்" (கந்தபு. திரும. 445). இவ் அடு ஆதிய சில அடிகள் உச்சாரண பேதத்தால் தன்வினை பிறவினையாதலையுங் குறித்துக்கொள்க. அடு என எடுத்துக்கூறின் சேர்தற்பொருளாம். அடு எனப்படுத்துச் சொல்லின் சேர்த்தற் பொருளாம் (தொல். எழுத். 76 காண்க). இங்ஙனம் உச்சாரணத்தால் கருத்து வேறுபடுவன சாய், மேய், உடை, மறை, எரி, உரி, ஒடி, ஒழி, ஒளி, அழி, இடி முதலியன இன்னுஞ் சிலவுள. இடைக்காலத்தில் இத்தகைய ஸ்வரபேதம் வழங்காதொழிந்து, இச்சொற்களின் வேற்றுமை உருவங்களின் இடைநிலையாற் காட்டப்பெறும் விகற்ப மாத்திரையால் தன் வினை, பிறவினை வேறுபாடு விளக்கப்படுவது. எங்ஙனம்? அடு என்னும் அடி தன் வினையில் அண்டு என, பிறவினையில் அட்டு என வரல் கண்





டாம். முற்காலத்து அண்டு அடு எனவும், அட்டு அடு எனவும் உச்சாரண பேதத்தால்மட்டும் வேறுபாடுணர்த்தி நின்றது. இவ்வாறே சாய், சாய்தலும் சாய்த்தலும் என, மேய், மேய்தலும் மேய்த்தலும் என வரும். பிறவுமின்ன. ஈண்டு பொருந்திய ட், ண், த் ஆதிய இடை நிலைகள் சொல் வேறுபடுத்து முகத்தால் இடைவைக்கப் பெற்றன என்பது தானே போதரும். அண்டுதல் என்பதிற்போல ணகரம் முதலான மெல்லினங்களும், சாய்தல் என்பதிற் போல தனி வல்லினங்களும் தன்வினைக்கும், அட்டுதல் சாய்த்தல் என்பனவற்றிற்போல இரட்டித்த ஒற்றுக்கள் தாம் பிறவினைக்கும் குறியாய் வருதல் இயல்பே. மெல்லினமும் தனித்த வல்லினமும் வலிகுறைந்தவையாதலால் தன்செயலைக் காட்டி நிற்கும். வலிகூடியனவான இரட்டித்த மெய்களே பிறிதொன்றிற் செலுத்துதலைக் காட்டும் பான்மை சான்றவையன்றோ.

## பண்டைநாள் ஒலி வேறுபாடுகள்

இவ்விடத்து, வல்லினத்தோடு மெல்லினமடுத்தும் அவ்வல்லினம் இரட்டித்தும் வந்தமைக்கு ஓர் காரணமும் அநுமானித்துக் கூறுதும். கிறிஸ்தாப்தத்திற்குமுன் மூன்றும் நூற்றாண்டளவில் கல்லில் வெட்டப்பட்டனவாய், தென்னிந்தியாவில் (காவேரி வைகை நதிகளினும் வைகை தாமிரபருணிநதிகளினும் முகத்துவாரங்கட்கு இடைப்பிரதேசத்தில்) காணப்படுகின்றனவாயுள்ள பண்டைக்காலக் குகாசாசனங்களின் தமிழ்லிபியைப் பரிசோதிக்குமிடத்து, அவை இரட்டித்த ஒற்றில்லாதனவாய் நிற்கின்றன. அவற்றுள் சாத்தன் எனும் சொல் சாதன் என, கொட்டுவித்தான் எனுஞ் சொல் குடுபிதான் என வரும். (Subrahmanya Ayyer, p. 288) ஆதலால் தகரம் சில்லமயங்களில் த்த எனவும் டகரம் ட்ட எனவும் பகரம் ப்ப என

வும் உச்சரிக்கப்பெற்றமை தோன்றும். தகர, டகர, பகரங்களும் இவற்றையொப்ப ககர, சகரங்களும் மந்த என்ற சொல்லிற்போல வடமொழி மூன்றாம் தகர, டகர, பகர, ககர, சகர வொலியோடு இயங்கினமையும் தோன்றும். இப் பதமையான ஒலிக்குப் புறம்பான எழுத்துக்களைக் கொள்ளாது, பிற்காலம் இவற்றின் இனமாகிய மெல்லின ஒற்றுக்களை முன்னிட்டுப் பதமையான ஒலி கொடுத்து உச்சரிக்கப்பட்டதுபோலும். இவ்வாறே க், ச், ட், த், ப் எனும் வல்லின வியஞ்சனங்கட்கு மூவித ஒலிகள் இருந்தனவாகி, இவை மூன்றும் முறையே ஒற்றை எழுத்தாலும் இரட்டித்த எழுத்தாலும் மெல்லினத்தோடு கூடிய எழுத்தாலும் குறிக்கப்பட்டன எனத் தோன்றும். ககரத்துக்கு மூவித ஒலிகளுண்மையை காடு, வீக்கம், பங்கு என்னுஞ் சொற்களை உச்சரித்துக்காண்க. பிறவல்லினங்கட்கும் இப்படியே சொல்லிக்கொள்க. மூவித ஒலியும் எஞ்ஞான்றும் ஒரே எழுத்தாற் குறிக்கப்பட்டதாயினும், கர்ண பரம்பரையில் அவ்வவ்வொலி வகுத்து உணரப்பட்டதாகலாம்.

இதனானே தமிழின் பாகதங்களாகிய தெலுங்கு ஆதியவற்றில் ஆரிய எழுத்துவர்க்கங்களின் மூன்றாவதுபோன்ற ககர ஆதிகள் நிலவுகின்றன என்க. ஆரிய எழுத்துவர்க்கங்களின் இரண்டாம் நான்காம் எழுத்துக்கள் (உதாகரணம் kh, gh) உள்ளபடி முதலாம் மூன்றாம் எழுத்துக்களின் இரட்டித்த உச்சரிப்பே என்றலையும் நோக்குக. இதுகாறும் கூறியவற்றால் தலையடிகளிலிருந்து சொல்லுருவங்களை விகற்பித்து வழங்கும் உபாயங்களுளொன்றாக யாங்கூறிய ஒற்றிரட்டலும், இரட்டியதனுள் முன்னதை மெலித்தலும் எழுத்துமுறையில் உண்மையேயாயினும், ஒலிமுறையில் அவ்வாறாகாது, எமது வல்லின மெய் ஒலிகள், ஆரியத்தில் யாம் காண்கின்றவாறு, உரப்பியும் பதமையாயும் உச்சரிக்கப்படலாயின எனக் கொள்க.





## ஒத்த பிறப்புடைய உயிர்மெய்கள்

வழிச் சொல்லடிகளைப் பல்கச்செய்தற்கு இவ்வுபாயங்களன்றி, தம்முள் ஒத்த பிறப்புடையனவான உயிர்களையும் மெய்களையும் மாற்றி வெவ்வேறு சொல்லாக்கும் முறையும் கையாளப்பட்டது. இங்ஙனமே, எய் என்னும் பிரதம அடியினின்று செய் எனும் துவிதீய அடி பிறந்தது. எய்தல் மேலெழுமாறு செலுத்துதல்; செய்தல் கையையுயர்த்தலாகிய முயற்சி, யாதொன்றனை இயற்றுதல். இனி இச் செய் என்பதுதான் கையென்றாகி வேலை செய்கின்ற சிறந்த உறுப்பையும் உணர்த்துவதாயிற்று. இதில் எகரம் ஐகாரமாயினமையோடு சகரமும் ககரமாயிற்று. எகரம் தனக்கினமான இகரமும் அப்பால் உகர ஒகரங்களுமாயினமைக்கு நல் எடுத்துக்காட்டு எல் எனும் அடியிற் காணலாம். எல், எழுந்து சுவாலிப்பது; இல(கு)தல் பிரகாசித்தல்; உல(ர்)தல் காய்தல்; ஒலி(த்)தல் (வெண்மையாய்ப்) பிரகாசித்தல். இவையெல்லாம் "எல்" லின் விகாரமும் "எல்" தானே எழுதலின் விகாரமுமென்பதை இந்நூலின் ஈற்றதிகாரத்துட் கண்டு மகிழ்க.

# ஐந்தாம் அதிகாரம்

## Multiplication of Word-forms

## சொல் அர்த்தங்கள் விரிந்த விசித்திரம்

அண்மை, சேய்மை, கீழுறுந்தன்மை, மேலுறுந்தன்மைகளினின்று விகற்பித்து விகற்பித்துப் பெயரீடு செய்துகொண்டுதான் மானுடன் தன் புத்திநுட்பத்தினால் அதி உன்னதமான சிந்தனைகளையும் உருவாக்கிப் பெயரிட்டான். எழுவாயில், இடம்பற்றிய குறிப்புக்கள் பெயரிடப்பெற்றன. அப்பால், எதிர்ப்பட்ட பொருட்களெல்லாம் அதனதனிடத்துப் புறப்பாடாய்த் தோன்றிய குணம் செயல்களைத் தழுவிப் பெயரடையவந்தகாலையில், முன் இடம்பற்றிச் செய்த பெயரீடுகளையே திரித்தும் வேறுபடுத்தும் இவற்றிற்கு நாமகரணம் இயற்றப்பட்டது. புறப்படத்தோன்றிய செயல் குணங்களும் இடம்பற்றிய குறிப்பு எனும் வாயிலாகவே மனதில் நுழைந்தனவாக, அக்குறிப்புக்களின் ஆதிப் பெயரீடுகள்தாம் சிறிது சிறிது விகாரப்பட்டவழி இவற்றிற்குப் பொருந்தியனவாயின எனக் காண்டல் எளிதே.

### அய எனுமடியிற் பிறந்தன

இதனை ஓர் எடுத்துக்காட்டினால் விளக்குவாம். அய எனும் இடம்பற்றிய ஆதிப் பெயரீடு நெருங்கியதாய்ச் சமீபத்திலுள்ளதனைக் குறிப்பது. இதனையொத்த அய், "நெருங்கியுள்ளது" என முன்னரே கூறினோம். ஆய்தல் சாய்தல் என்பன சொற்கள் அதனிடத்திற் பிறக்குமாறும் விளக்கப்பட்டது. இச் சாய்தற் பொருளிற்றான் ஐயம், (அய்-அம்=சமுச்சயம்) எனும் பதம் வருவது. அதோ





இதோ என அங்குமிங்குஞ் சாய்தலே ஐயமாம். "அய" அப்பால் அய(ல்) எனத் திரிந்து இன்னும் அருகாமையை, சுற்றுப்புறத்தையே விளக்கிற்று. மேல், "அயல்" அயர் என்றாகி, படிப்படியாய் அருகில் வைத்தல், புறக்கணித்தல், மறந்துவிடுதல் எனும் அர்த்தங்களைப் பெற்றது. அயலில் வைப்பதோடு அயர்த்துவிடுதல் எவ்வாறு இயல்பாக உறவுகொள்ளுமென நோக்கியுணர்க. மீண்டும் "அய(ல்)" அயக்கு என்றாகி, அயற்கண் வைத்துக்கொண்டுபோவதையுணர்த்தி, செலுத்துதல் எனப் பொருளுற்றது. இவை இரண்டு அர்த்தங்களும் ஒன்றிலிருந்தொன்று தோற்றிடலை "இயற்படு மானமுமிகலு நாணமு மயற்பட" எனும் (கந்தபு. சயந். 5) மேற்கோளையும், "திண்டேரயர்மதி" என்பதனையும் (கலித் 30, 19) ஒப்பு நோக்கி உணர்க. அயக்கு என்பதே அசக்கு, அசங்கு என்றும் வந்தது. அசக்குதலும் இயக்குதலும், அசங்குதலும் இயங்குதலும் ஒன்று. இவற்றில் அகரம் இகரமாயிற்று.—"அகடசக்கரவின்மணியா" (கந்தபு. கடவு.) "சங்கர நான்முகர் கைத்தலம்விண்டசங்க" (கம்பரா. இராவ. 28) எனும் மேற்கோட்களைக் காண்க. அசங்குதல் என்னும் பொருளில் அசை என்பது மெல்லெனச் செல்லுதல், யாதொன்றனை நாடுதல் எனப் பொருள்கொண்டு ஆசை எனும் பதத்திற்கு அடியாயிற்று. நசை என்பதூஉம் அது.—"நசைதரவந்தோர் நசைபிறக்கொழிய" (புறநா. 15) அசை எனப்படுத்துச்சொல்லல் அயக்குதலாம். அயர்தல் என்னும் பொருளில், அசைதலானது சோம்புதல் எனவும் கிடத்தல் எனவும் வந்திட்டது.— "இலமென்றசைஇயிருப்பாரை" (குற. 1040); — "குறங்கின்மிசை அசைஇயதொருகை" (திருமுரு. 109).

அய எனும் அடி அயல், அயர் எனத்திரிந்து பூண்ட அர்த்தங்களிற் சிலவற்றைக் காட்டினோம். இனி அயல் என்

பது அகல் எனமாறி அடைந்த பொருட்களிற் சிலவற்றைக் குறிப்பாம். அயலை நாடி நாடிச் செல்லற்கு அகல்(தல்) எனப் பெயரீடு செய்யப்பட்டது. இதுதான் அகழ்தல், அகட்டுதல் என்றும், அகற்றுதல் என்றும் சிறிது சிறிது வேறான செயல்களைக் காட்டிற்று. அகழ்தல், கிண்டி "அகட்டி"க்கொண்டுபோதல்; அகட்டுதல் அயலை நாடி நாடி விசாலிக்கச்செய்தல்; அகற்றுதல் தூரத் தூர வைத்துச் சம்பந்தமில்லாது செய்துவிடுதலாம். இப்பதங்களினின்று பிறப்பன: அகலம்=விசாலம், நெஞ்சு; அகல்=சட்டி; ஆல்=அகன்றமரம் (விசாலித்துநிற்குந்தன்மை இம்மரத்துக்குப் புறப்பாடாகத் தோன்றும் விசேடமாதலால், ஆலெனப்பட்டது); ஆலச்சொல், கடல், ஆகாசம் எனும் அர்த்தங்கள் கொளலும் விசாலித்ததன்மைபற்றியே. இவ்வாறே, சால் அகன்ற சட்டியாம்; தாழியுமது. தாலம் அகன்றதாகிய பூமியாம். அகழ்=தோண்டியவிடம்; அகழான்=தோண்டிக்கொண்டுபோகும் விசேட குணமுள்ள எலி; ஆழல்=கறையான் என வந்ததும் புற்றெடுத்தலாகிய குணம்நோக்கியே. ஆழம், ஆழ்வு=காம்பீரம், தாழ்வும் அது; ஆன்றோர்=அகன்ற நோக்குடையோர். இன்னன சொற்கள் பலவுள.

மீண்டும், அயல் (அகல்) எனும் பதம் அல் எனவும் நின்று சால், நல், நனி, நன்று எனும் சொற்கட்கு உற்பத்தியாயிற்று. சால், அகன்ற மிகுந்த எனும் பொருள்கொள்ளும்.—"அலகு சால் கற்பினறிவுநூல்" (நாலடி.) இதில் அலகுச்சொல்லும் சால் சப்தமும் ஒரு அடியாகவே பிறந்ததனை நோக்குக. அலகு=அகன்ற, சால்=அகல்தலாகிய மிகுதி. நல் ஆதியனவும் அகன்றதை, பெரியதை, நிறைந்ததைக் குறிப்பனவே என உய்த்துணர்க. "நன்று பெரிதாகும்" என்றார் சொல்லர்த்தங்களைத் துருவியறிந்த தொல்காப்பியனாரும் (சொல். 343). "நயமாய் அள்ளு" "நல்ல





மழை" என மிகுதிக்கண் வரும் உலகவழக்குக்களையும் நோக்குக. அப்பால் நல், நனி என்பன நன(வு), மல்(லல்), வள(ன்), வன(ப்பு), வள(ம்) எனும் உருவங்களைக்கொண்டு விசாலித்த, மிகுத்த தன்மைகளையே குறித்தன. "நனவே களனுமகலமுஞ்செய்யும்" (சொல் 376) "மல்லல்வளனே" (சொல். 305) "செழுமை வளனும் கொழுப்புமாகும்" (சொல். 352). "வளமழை பெய்தது" எனல் "நல்ல மழை பெய்தது" என்றதன் மறு உருவமே.

"மழை"யும் செறிவின்பொருட்டே போலும். அப்பால், "நனி," நனிதல்=செறிதல் (பதிற்றுப்.) என்றாகும். "மல்லல்," மல்குதல், மலிதல் ஆதிய உருவங்கள் தாங்கும். "வளன்," வளர் என வினையடியாகும். வளர்தல்=அதிகரித்தல். "வனம்" செறிவின்பொருட்டாய் சோலையைக் குறிக்கும். இதுமட்டா! அல் என்னும் அடி அகல்கின்ற குறிப்பையே அமைத்து அலர், அலரி என வந்தது. அலர்=விரிவது, பூ. அலரி ஏராளமாய்ப் பூவைக்கொண்ட செடி. அல்லியும் விரிதலையே குறியாகக்கொண்டதெனக் காண்க. "அலர்" பின்பு மலர் எனவும் மருவிற்று. "மலர்" வடமொழியில் மாலா என, சிங்களத்தில் மல என நிற்றலும் இங்கு குறிக்கத்தக்கது. இதுமட்டா! அல் என்பது அகல் எனும் அர்த்தத்தினையே உள்ளடக்கி ஆர் எனத் திரிந்து பரந்து நிற்றலை, நிறைவை விளக்கிற்று. முன்காட்டிய ஆல் சப்தமும் இதனையொத்ததே. "ஆர்" பரத்தற்பொருளில் வருதலை "போதாரிவண்டெலாம்" (திணைமா. 95 உரை) என்பதிற் காண்க. அப்பால், ஆர்பு=நிறைவு; அருத்துதல்=நிறைவித்தல்.—"கறவைகன்றார்த்தி" (மணி. 12, 93); அருந்துதல்=நிறைத்து அடக்குதல். "சாந்தருந்தி......மலர்ந்தேந்தகலத்து" (குறிஞ்சிப். 120) எனும் இம்மேற்கோளில் அருந்தி, மலர்ந்து, அகலத்து எனும் மூன்று சொற்களும் அய (அகல்) எனும் ஒரே அடியாய்ப் பிறந்து

நிற்கும் விசித்திரத்தைக்காண்க. ஆர்வு=நிறைவு என்றனமே, இவ் ஆர்வே ஆர்வம், ஆர்வல், ஆர்வலித்தல் என வந்ததையும் நோக்குக.—“சிந்தையாரவார்வலித்து” எனும் தேவார (997, 5) மேற்கோளில் “ஆர” “ஆர்வலித்து” எனும் இரு சொல்லும் ஒன்றேயாய் ஒன்று மற்றதின் பொருளை விளக்குதலைக் காண்க. ஆராய்தல் என்னும் சொல் “ஆர ஆழ்தல்”=“அகல அகழ்தல்” எனும் சொற்களின் கூட்டேயாம்.

ஆய்தற் சொற்கு உள்ள “சுருங்குதல்” எனும் மற்றொரு அர்த்தம் அய எனும் அடியிலிருந்தே அஃகு எனும் உருவத்தின் வழியாய் வருவது. —“ஓப்தலாய்தல்...... உள்ளதனுணுக்கம்” (தொல், சொல். 330) அகம்=உள்ளிருப்பது எனும் பொருளில் அகம்=யான் என வருதலையும், அதுவே வடமொழியின் தன்மை ஒருமைச் சர்வநாமத்துக்கு உற்பத்தியாதலையுங் காண்க. அஃகு எனும் கிளைப் பிதிர்வழியை இங்கெடுத்தாளுவோமாயின் மிக விரியும்.

அகனை ஒழித்து, அய என்னும் அடியினின்று அகலும் அர்த்தத்தில் விரிந்த சொற் குடும்பங்களுள் பின்னும் ஒன்றினை மட்டும் ஈண்டுக் காட்டுவோம். அய எனும் அடி அகவு, அவாவு என நின்று தாவித் தாவிச் செல்வதைக் குறிக்கும். அகவல்=அருகிற்சேரக்கூவுதல்.—“அகவினம் பாடுவாந் தோழீ” (கலி. 40); அவாவல்=நெருங்கிச்செல்லத்தேடல், விரும்பல்:—“உலகவாம் பேரறிவாளன்” (குற. 215). இதிலிருந்து அவா, ஆவல், அயா, வயா என்பன வந்தன.—“வயாவென்கிளவிவேட்கைப்பெருக்கம்” என்பது தொல்காப்பியம் (சொல் 371). அவவு அவாவின் வேறொரு உருவம்.—“அவவுக்கைவிடுதலுமுண்டு” (கலி. 14). அவவினின்றும் அவ்வித்தல் அவ்வியம் என்பன உண்





டாயின. அவ்வியம் அவாவினாற் பிறக்கும் பொறாமை.—“அவ்வித்தழுக்காறுடையானை” (குறள் 167). உறுதிப்பாடாய் அவவுதல்தான் கவவுதல் எனப்பட்டது.—“கவவிக்கிடந்தகுறங்கினாள்” (சிந்தா.கனக.101). இனி வாயினாற் பற்றுதல் கவ்வுதலாம்.—“கருங்காக்கை கவ்வுமுனையின்” (பொருந. 184). இனி, கவலை என்பது அவாவுதலாகிய கவவலின் திரிபே. கவர் இதன் மறு உருவமாகும். “கவர் விருப்பாகும்” என்றார் தொல்காப்பியனாரும் (சொல். 362). அவாவுதலாகிய ஆவலானது மனதை அங்கும் இங்கும் செலுத்திப் பிரித்தலால், கவலை என்னும் உருவம் பிரிவு என்னும் பொருளையும் கொள்வதாயிற்று.—“பெருவழிக் கவலைகாக்கும்” (பெரும்பா. 81). கவலை=பிரிந்தவழி. கவர் என்பது இதன் திரிபு. கவர்தல் என்பது மீட்டும் ஆவல், விருப்பு எனும் பொருளேகொள்ளும். —“அடியவரே சிவமாகக் கவர்ந்தொழுகி” (திருவிளை. மெய்க்கா. 3) இக்கவர் அப்பால் “கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்” மரங்களினும் விளங்கக்காண்கின்றோம். கவலையே கவனம் எனும்பதத்திற்கும் உற்பத்தி. கவலை பிரிவென்றால் கவனம் யாதொன்றைப் பிரித்தெடுத்து அதன்கண் மனத்தைச் செலுத்தலேயன்றோ. கவனம் எனும் சொல்லினுக்கு கலக்கம் (கவலை) எனும் பொருளிருத்தலையும் (திவாக.) நோக்குக.

அப்பால் கவவுதலிலிருந்து கவளம், கவற்சி ஆதிய சொற்களும்; அவவுதலிலிருந்து தாவு, தவி, பாவு, பரவு, வவ்வு ஆதியனவும்; இவ்வாறே முன் எடுத்தாண்ட அயக்குதலிலிருந்து அலைதல், ஆடுதல் முதலியனவும் அவ்வவற்றின் வியுற்பன்னங்களும் வருதலைக் காட்டப்புகின் மிகவிரியும். இவையெல்லாம் எமது சொற்பிறப்பகராதியிற் கண்டுகொள்க.

இன்னணம் முழுதும் சடச் சம்பந்தத்தையே ஒருகால் உணர்த்திநின்ற பெயரீடுகள், சிறிது சிறிதாய் ஆத்மீக சிந்தனைகளையும் விகாரங்களையும் உணர்த்தி, மிக மேம்பட்டனவான எண்ணங்கட்கும் வாக்கலங்காரத்தினுக்கும் வாயிலாயினமையை யாரே கண்டு மகிழ்ச்சியெய்தாதார்? பேசுமவனோடு பொருட்கள் நெருங்கியிருந்தமையாகிய குறிப்பைமட்டும் காட்டி நின்றதாகிய அய எனும் அடி சந்தேகத்தையும் ஆசையையும் ஒருபுறத்திற் காட்டிற்று; காம்பீரத்தையும் கற்றோரின் அறிவுப் பெருக்கையும் ஒருபுறத்தில் விளக்கிற்று; வேட்கைப் பெருக்கம், அவாவிய பொருள் கிட்டாமையினாற் பிறக்கும் மயக்கம், பொறாமையின்மை, மனதை நுனித்து நிறுத்துந்தன்மை ஆதியனவற்றை மற்றொருபுறத்திற் தெரிப்பதாயிற்று. இவ்வாறே சிறிது சிறிதாய்ப் பஞ்சபுலன்கட்கு விடயமானவைகளைக்கொண்டு மனோநிலைகளைச் சார்ந்த மிகத் திருத்தமான சிந்தனைகட்கெல்லாம் பெயரீடு செய்யப்படலாயிற்று. இத்துறை மேன்மேலும் தெளிவுறுமாறு மற்றைய மூன்று சுட்டுக்களினும் நின்று பிறந்த சொல்லடிகள் தாமும் விரிந்து விரிந்து விவித பொருள் தருமாற்றை ஒவ்வோர் உதாரணவாயிலாய் விளக்கி மேற்செல்லுவாம்.

## “உவ” எனும் அடி

உகரச்சுட்டு சேய்மையையும், அதன் திரிபாகிய மறைவாந்தன்மையையும் குறிக்கும் என்றனம். மறைவாதற்கு எடுத்துக்காட்டுக்கள் சில முன்னரே தந்துள்ளேம். இங்கு மறைவிடத்து, அன்றேல்உள்ளிருந்து புறம்போந்துபொருமுதற்கும் சேய்மையாதற்கும் ஓர் எடுத்துக்காட்டைத் தருவாம். “உவ” என்னும் பிரதம அடியின் மறு உருவமாகிய “உட்(பு)தல்” என்பது பொருமுதல் எனும் பொருளுள்ளதென்றனம். உப்பசம்=வீக்கம், உப்பல்=ஊதுதல்.





இவ் ஊதுதல், வேறொருவகையில், உள்ளிருந்து வெளியே வாயுவை விடுதலையுணர்த்தி, அப்பால் “ஓது” தலுக்கு அடியாயிற்று. ஓதுதல்=சொல்லல், படித்தல். படிப்பது ஓத்து என்றும், படிப்பிப்போன் ஓச்சனென்றும் வரலாயிற்று. பின், ஓச்சர் கணக்கராயினர்.

இனி, “உவப்பு” உள்ளிருந்து பொருமி உயர்தல் என்றாம். உகப்பும் அது. பொருமுதல் பூரித்தல் என்பன மகிழ்ச்சிக்குக் குறியீடாயின. உவகையுமது. “உகப்பே யுவகை” என்பது தொல்காப்பியம் (சொல். 306). உவத்தல்=மகிழ்தல், விரும்புதல். இனி, உவப்பினின்று “உப்பு’, இனிமை எனப் பொருள்கொண்டது.—“கூடலிற்றோன்றியவுப்பு” (குறள் 1328). இவ் “உவ(ப்பு)”த்தான் “சுவை” என்றாகி ஸ்வத் எனும் வடமொழியாதியவற்றினுக்குப் பிறப்பிடமாயிற்று.

சுவையினின்றுபோலும் இலவணம் உப்பெனப் பெயர் பெற்றது. “உப்பளம்,” “உம்பளம்” இதினின்றுற்பத்தியாயின.—“உம்பளந்தழீஇய உயர்மணனெடுங்கோட்டு” (மணி.24,27). உமணர்(=உவர்மண்ணர்)உப்பமைப்போர். “உப்பு” எனுஞ் சொல்லினின்று உவர்ப்பு வந்திட்டது. உவர்ப்பும் துவர்ப்பும் ஒருசொல்லேயாம். பிந்தியது மொழிமுதற் தகர ஒற்றினால் முந்தியதினும் உறுதிப்பாடு கொண்டது எனக் காண்க. பின்பு உவர்த்தல் உவட்டலாகிடவே வெறுப்பு எனும் பொருள் வந்திட்டது. எங்ஙனம்? “உவப்பு” மனம்பூரித்தலாலுண்டாகும் மகிழ்ச்சியைக் குறிக்க, “உவர்ப்பு” நிறைவை வேறொருபடியாய்க் காட்டி மிகுதியின்கட்சென்றது. அப்பால் டகர ஒற்றிரட்டலால் உறுதிப்பட்ட இறுதியைக்கொண்ட உவட்டுச்சொல் மிதமிஞ்சிய பெருக்கை உணர்த்துவதாயிற்று.—“உவட்டெடுத் தொழுகருவி” (தணிகைப். வீராட்ட. 76) வயிறு நிறைந்

து விஞ்சுவது "உவாந்"தித்தற்கும் வெறுத்தற்கும் உரியதேயன்றோ. உவட்டல் பதம் மொழிமுதல் வல்லினமெய்யீறால் உறுதிப்பாடடைந்து உயிர் விகாரப்பட்ட உருவமே தெவிட்டலாம். இவ்வாறு உவர் எனும் ஒரு சொற்றான் உவப்பாகிய விருப்புக்கும் உவட்டலாகிய வெறுப்புக்கும் அடியாயினமை "உண்மை"க்கும் "பொய்"க்கும் "உள்" எனும் ஓர் அடியே உற்பத்தியாயினமை போன்ற ஒரு வியப்பே. (உள், உண்மை; — உள், புள், பொள்ளல், பொய்ப்பு, பொய்!) அதுகிடக்க; உவர்(ப்பு) "உவர்" என நின்று உப்புத்தன்மையையும், உவரி எனவாகி, கடலை, சிறுநீரையும் அவ்வவற்றிற் புறப்பாடாகத் தோன்றும் ஒவ்வோர் குணம்பற்றிக் குறித்திடுவதாயிற்று.

அப்பால், பொருமித் தோன்றுதலினின்று மணற்குவியல் உப்பென்னப்பட்டது. குப்பை அன்றேல் குப்பலும் குவியலேயாம்.—"வாரிப்படுத்த மீனுப்பின்குப்பை" (கந்தபு. ஆற்றுப். 30). உப்புதல்=உயர்தலெனும் பொருளில் உம்பர் எனும் தமிழ்மொழிக்கும், உப்பரிகை, உபரி, உப ஆதிய வடமொழிகட்கும் அடியாயினமை காண்க. இவ் அர்த்தத்திலே மேலிடம் உவண் எனவும், (சீவக. 2853), உயரப்பறக்கும் பட்சி உவணம் எனவும், தேவலோகம் உவணை எனவும் வந்தன. சுவல் என்பதூஉம் இவ்வடியாய்ப் பிறந்ததேயென்க. சுவல்=மேடு. — "வேங்கைச் செஞ்சுவல்" (புறநா.120). தோண்மேலுமது.—"தோமறு கடிஞையுஞ் சுவன்மேலறுவையும்" (சிலப். நாடு. 98) எம் வீட்டுச் சுவர்களும் தேவலோகப்பொருளுள்ள வடமொழிச் "சுவ"ரும் ஆகாயப் பொருளும் இவ்வடியினின்று வந்தனவேயாம்.





## "இய" எனும் அடி

கீழுறுந்தன்மையைக் குறிக்கும் இகரச்சுட்டின் வழிப்பிறந்த தலைபடிகளுள் இய(ங்கு) என்பதை முதலாவதாய்ச் சுட்டினும். அவ் "இய" அடி கீழிறங்குதற்பொருளோடு இயலல்=இறங்கிச்செல்லல், அசைதல் எனத் திரிந்தது.— "அரிவையொடுமென்மெலவியலி" (ஐங்குறு 175) "இயலவேந்திமென்றோட்பல்பிணை" (திருமுரு. 215). அசைதலினின்றுபோதற்பொருள் பிறப்பதெளிதே. இயறல்=போதல்; இல்லல்=கடத்தல், போதல் (பிங்.); இயவை=போம் வழியென்றுமாயிற்று. (திவா.) இயக்கு=செலவு, இறங்கியோடுதல்.—"நீரியக்கென்னநிரைசெலனெடுந்தேர்" (மலைப. 571) இவற்றோடு போதற்பொருளுள்ள "யா" எனும் வடமொழியடியை ஒப்பிடுக.

"இயலல்" அப்பால், செய்தல் எனும் அர்த்தமும் கொண்டது.—"பொன்னியற்புனைதோட்டி" (புறநா. 14). இயற்றலுமது. அதனால் "இயற்றி," முயற்சியும் "இயற்று" செய்தற்கருவியுமாயின. முயற்சியைக்காட்டும் முகத்தாற்போலும் இயம் ஒலியெனவந்தது. இய(ம்பு)தல்=ஒலிசெய்தல், சொல்லல்; இயவர்=தோற்கருவியாளர்.—"கலித்தவியவ ரியந்தொட்டன்ன" (மதுரைக்.304). இயம்=வாச்சியம். "இயம்" இயம்புதலோடு பொருந்தியவாறு "வாச்சிய"ப்பதமும் "வசனித்"தலோடு பொருந்திநிற்றலைக்காண்க.

இனி "இயலல்" சப்தத்தின் இறங்குதல், செல்லுதல் எனும் அர்த்தங்கள் விரிந்து, சேர்தல் பொருந்துதல் எனும் ஓர் அர்த்தம்பிறந்தது.—"வெயிலியல் வெஞ்சுரம்" (Winsl.) இயல்தலே ஏய்தலெனவருவது. ஏய்தல்=பொருந்தல்.—"ஏய்ந்தபேழ்வாய்" (திவ்ய. பெரியதி. 1,7). தகுதிப்பொருளுமது.—"இயலன்றெனக்கிற்றிலை" (திருக்கோ. 240). "ஏலு"ம் அது.—"கழுநீர்மாலையேலுடைத்தாக" (திருவா.கீர்த். 114) ஏலல்=உடன்படுதல், அங்கீகரித்தல்.—

"பெருந்தகையஃதேலான்முகநோக்கலும்" (சிந்தா. கனக. 112). "ஏற்ற"லும் அது. அப்பால் இச்சேர்தல், பொருந்துதல் அர்த்தங்கள் "ஆற்றொழுக்குப்போல நடத்தல்," "நெறிபிறழாமை" எனும் பொருளையும், பின் "சன்மார்க்க முறைமை"யையும் காட்டின.—"சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்" (குறிஞ்சிப். 15) எனும் மேற்கோளில் "இயல்பு" ஒழுக்கமாம். இதன்கண்ணும் கீழிறங்கிவருதல் எனும் தலையர்த்தம் தொனித்தலைக்காண்க. "இயல்பினானில்வாழ்க்கை வாழ்பவனென்பான்" (குற. 47) இங்கு இயல்பு சன்மார்க்கமுறைமையை விளக்கிற்று. இயற்கையென்பதூஉம் அது. பின் "இயற்கை"க்கு ஆற்றொழுக்குப் போல் யாவர் முயற்சியுமின்றித் தானே நடைபெறுந்தன்மை எனும் பொருள் ஏற்பட்டு, செயற்கைக்கு மாறான நிலையைக் காட்டும் வன்மையுண்டாயிற்று.—"இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினும்" (புறநா. 35).

இயலல்=நடைபெறல், இயற்றல்=நடத்துதல் என வந்ததைக் கண்டனமன்றோ. இந்நடத்துதலைச் செய்து நாயகமாய்த்திகழும் தலைமைக்கு இயவுள் எனும் பெயர் பொருந்திற்று.—"இயவுள் யானை" (அகநா.29). ஆயினும் இயவுட்சொல் இறங்கிச்செல்லும் "வழி"ப்பொருளை இழந்துவிட்டதன்று. (அகநா. 29 உரைகாண்க) அதுமட்டா! இறங்கிச்செல்லும் தலையர்த்தத்தைக் கொண்ட இவ்விடச் சம்பந்தம்பூண்ட "இயவுள்" பெயர், பெயரீட்டுக்கெல்லாம் மேற்பட்டவரும் நடத்துந் தலைமை பூண்டோருளெல்லாம் தலைமை சான்றவருமான கடவுள் தமக்கே சூட்டப்படலாயிற்று.—"பெரியோரேத்தும் பெரும்பெயரியவுள்" (திருமுரு. 274). இது, மானுடன் சடமயமான பொருட்களின் பெயரீட்டைக்கொண்டு சின்மயமான பொருட்களைப் பெயரிட்டழைக்கும் மதிநுட்பத்தினுக்குச் சிறந்ததோர் இலக்கியமே.





## "எய்" எனும் அடி

ஈற்றில் நின்றதாகிய எகரச்சுட்டின் புதுமைகளை இனிக் கண்ணுறுவாம். எய் எனுமடி மேற்செலுத்துதலைக் குறித்ததன்றோ. மேற்செலுத்துறும் அம்பு எய் எனப்பட்டது.—"இவளாகத்தெய்யேறுண்டவாறெவன்" (திருவிளை. பழியஞ். 24). அன்றியும், அம்புப்பிரயோகஞ் செய்து பிழைப்போர் எயினராயினர். —"எயினர்தந்த எய்ம்மான் எறிதசை" (புறநா. 177). இக்கவிப்பாகத்தில் எகரம் மூவிடத்தில் மேற்செலுத்தும் பொருளதாய் நிற்றலைக்காண்க. எயினர்=எய்வோர்; எய்ம்மான்=அம்புபோல் எய்யும் முட்களையுடைய பன்றி; எறிதல்=மேல்வீசி வெட்டுதல். எயினன் வேட்டுவனாயினமைபோல எயிற்றிவேட்டுவப்பெண்ணாயினள். எய்ம்மான் எனும் பன்றிவருக்கம் அம்புபோல் முட்களைக் கொண்டமையால் எய்ப்பெயர் அடைந்தமையும் ஆச்சரியமன்றே.—"எய்ம்முள்ளன்ன பரூஉமயிர்" (நற். 98) எயினமும் பன்றிப்பெயராயிற்று. இது ஏனமெனநிற்கும் (தொல். பொரு. 623). கதிர் ஏனல் எனப் பெயர் அடைந்தமை மேலெழுந்து எறிதலினாற் போலும். அப்பால், முட்போற் பீறிக்கொண்டெழுகின்ற பல்லும் "எய்" அடியினின்று எயிறு எனப் பெயருற்றது. எய்து வெளிப்படுவது எயிறு. பெரும் எயிறுகொண்டதாகிய வீட்டுமிருகம் எகினம் எனப்பட்டது.—"மாண்ட வெயிற்றெகினம்" (சிந்தா.குணமா. 92). இம்மேற்கோளில் "பெரிய பல்லுள்ள பல்லன்" எனக் கூறியாங்கு எகினச் சொல்லின் பொருளும் உற்பத்தியும் நன்கு விளங்கவைத் திருத்தலைக் கண்டுமகிழ்க.

இவ் "எய்" அடிதான் எஃகு என நின்று எறிவேலையும் கூர்மையையும் உணர்த்துவதாயிற்று.—"எஃகொடு வாண்மாறுழக்கி" (பரிபா. 10,109) "ஒன்றுற்றக்காலு

ராண்மை மற்றதனெஃகு" (குற. 773). கூர்மைப்பொருளில் எஃகு அஃகுச் சொல்லின் மரூஉமாகலாம்.

மீட்டும் "எய்", செய் (கன்னடத்தில் கெய்) என நின்று கையை மேலெடுத்தலாகிய முயற்சியைக் குறித்திட்டதைக் கண்டாம். செய்யே கை என்றாகியும், கர என வடமொழியில் மருவியும் நின்றதெனக்கொள்க. செல், சேறு=எழுந்து எதிர்போ என்பனவும், எய்யின் வேறு உருவங்களான எழு, ஏறு என்பவற்றின் திரிபுகளே. இத்துறை விரிப்பிற் பெருகும்.

"எய்" வேறொருபால் ஏ எனவும் நின்று மேலெழுப்பிச் செலுத்துதலையே உணர்த்திற்று. இவ்வகையிலும் "ஏ" அம்புப்பெயராம். —"ஏமுதலாயவெல்லாப் படைக்கலத் தொழிலுமுற்றி" (சீவக. 370). "ஏ" உருவம் ஏறுதற் பொருளில் பெருக்கத்தையும் உணர்த்தும். "ஏ பெற்றாகும்" என்றார் தொல்காப்பியனாரும் (சொல். 305). ஏ என்னும் உருவமே ஏவு என நின்று மீண்டும் ஒருபால் அம்புப் பொருள்கொண்டது.—"மாறிலேவுபூட்டி" (கந்தபு. காமத. 66) மற்றொருபால் ஏவுதல் எனும் வினையடியாகி அம்புபோல் எழுப்பிவிடுதல் எனத் தலைப்பொருளுற்றது. (பிங்.) ஏவுதல் எழுப்பிவிடுதற்பொருள்கொள்வதுபோல, ஏகுதல் எழுந்துசெல்லற் பொருள்தரும். "ஏவுதல்" அப்பால் மேவுதல் ஆதிய உருவங்களையடைந்தகாலையிலும், எகரச் சுட்டினுக்குரிய மேலுறுந் தன்மைப் பொருளை விடாது கொண்டிருத்தலை நுணுகியறிக.

சுருக்கிக் கூறுகில், நால்வகைச் சுட்டினின்றே எந் தமிழ்மொழியின் காரணப் பெயரீடெல்லாம் கிளைத்துத் தழைத்து விரிந்து பரந்திட்டது. சுட்டுமாத்திரையாயன்றி மானுடன் வேறுவகையாய் தன்னின் வேறான பிரபஞ்சத்தைநோக்கியறிந்திரானென்பதூஉம் அறிந்தவழி சுட்டுமாத்திரையாயன்றிப் பெயரீடு செய்திரான் என்பதூஉம் நிலை





பெற்ற உண்மைகளாகவே, இதுகாறும் நம்மால் விஸ்தரிக்கப்பட்ட வரன்முறைதான் தமிழ்மொழிமட்டுமன்று ஆரியம் முதலான இந்து—ஐரோப்பியமொழிகள் யாவும் உற்பத்தியானவழியாம் எனக்கொள்க.

## பொருந்தா மொழி உற்பத்திகள்

இதனை ஆராய்ந்தறியாச் சில்லோர் இயற்கையொலிகளைப் பின்பற்றி மானுடன் பெயரீடுசெய்தமையே மொழியின் தொடக்கமாமென்பர். இலைகளுதிர்தல், நெருப்பெரிதல், நீரோடலாதிய இயற்கைத் தோற்றங்களிற் கேட்கப்படும் கலகல பலபல சரசர ஆதிய ஒலிகளும், பட்சிமுதலியவற்றின் கூகூ காகா முதலிய சப்தங்களும் எம்மொழியிலும் உள்ளனவேயாயினும், இவைதாம் மொழிகளின் எண்ணிறந்த விவித சொற்கட்கெல்லாம் பிறப்பென்றல் அமையாது. அன்றியும், இக்கொள்கை மானுடனுக்குத் தொன்றுதொட்டு இயல்பாயுள்ள மதிநுட்பத்தை மனதிற்றரியாது அவனை ஞானமற்ற கிளிப்பிள்ளைக்கு உவமிப்பதாகும். பொருட்களின் சுபாவத்தையும் குணாகுணங்களையும் உய்த்துணர்ந்து, அவற்றை விளக்கும் பெற்றியுடைய சப்தங்களைப் பொருத்தமாயும் திருத்தமாயும் அமைத்துக் கொள்ளும் வன்மையை நிரம்பப்பெற்றுள்ள மானுடன், ஞானமற்ற படைப்புக்களின் புத்தியற்ற சப்தங்களைக்கேட்டபின்தான் தனக்கோர் மொழியை உண்டாக்கிக்கொள்ளலாயினன் என்றல் எவ்வாற்றானும் பொருந்தாது. பெருங்களிப்பு, பீதி உற்ற அமயங்களில் மானுடன் சுவாகதமாய் வெளியிட்ட ஆஅ ஊஉ அகோ முதலிய அதிசய இரக்கக் குறிகள்தாம் மொழிக்கு உற்பத்தியாம் என மற்றும் சில்லோர் கூறியதும் இந்த நியாய வாயிலாகவே பொருந்தாததென்று ஒதுக்கப்படும்.

இங்ஙனமே, மாகறல் ஸ்ரீ. கார்த்திகேய முதலியார் அவர்கள் இயற்றிய "மொழிநூ"லும் தமிழ்ப்பதங்களை ஆங்

காங்கு வெவ்வேறு கூட்டமாய்த் தொகுத்து நிரைப்படுத்திற்றேயாயினும், தமிழ்மொழியமைப்பின் வரலாற்றினை பொருந்தக்கூறுததாயிற்று. வாயு வீசுதல், தேயு எரிதல், அப்பு பெய்தல், பாம்பாதியன சீறுதல், பழுக்கக் காய்ச்சிய இரும்பை நீரிற்றோய்த்தல் ஆதிய அமயங்களிற் கேட்கப்படும் "சு" என்னும் இயற்கை ஓசையைக் கொண்டு "சுல்" எனும் சூரியன் பெயரும், அப்பால் சூரியனின் வட்டாகாரம், வெம்மை ஆதியவற்றோடு ஒப்புமை நோக்கி மற்று சொற்றொகை அனைத்தும் உண்டாயின என்பர் கார்த்திகேய முதலியாரவர்கள். "சொற்கள் முதல் முதல் உலகத்து அரும் பெரும் பொருளாகிய சூரியனிடத்திருந்தும், பிறகு குறிஞ்சிக்கருப்பொருட்களுட் சிறந்து, சூரியனுக்கு அணுக்க இயைபுடையதாய், ஏனைய பொருள் இலக்கணங்களைத் தன்னிடத்தே விளங்க அமையப்பெற்ற மூங்கிற் சொற்களிடத்திருந்தும், மூங்கிலியையுடைச்சொற்களிடத்திருந்தும் அனுகூகசம்பந்தம்பெற்று உண்டாகின்றன" என்பது அவர்கூற்று. (மொழிநூல் 66–68) முதலியாரவர்கள் தமது சிறந்த சொற்பாகுபாடுகளாற் பன்னூறு தமிழ்ச் சொற்களை சூரியனோடும் மூங்கிலோடும் அர்த்தத்தளவில் சம்பந்தப்படுத்தியிருப்பினும், அச்சொற்கள்தாம் அவ்வவ் அர்த்தத்தினைத் தெரிக்கும் உருவங்களாக ஏற்பட்டமை எவ்வாறு என விளக்காமற்போயினர். இயற்கையொலிபற்றியெழுந்த மிகச்சில பதங்கள் எம்மினிய மொழியிலுண்மையை யாமும் ஒப்புகின்றேம். அவையிற்றை ஒழித்து ஒழிந்த சொற்றிரளெல்லாம் இடக்குறிப்புப்பற்றியே எழுந்து, பின் சூரியன், மூங்கில் ஆதிகளையும் அவற்றோடு ஒப்புமை சான்ற கூட்டங்கூட்டமான பிறபொருள் குணம் செயல்களையும் உணர்த்தலாயின என்பதுதான் முடிந்த முடிபாகும்.

---



# ஆறாம் அதிகாரம்

## Pronouns
## பிரதிப் பெயர்கள்

இனி, எந்தமிழ்மொழியில் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடங்களையும் காட்டும் நான், நீ, அவன், எவன் ஆதிய பிரதிப்பெயர்களும் எல்லாம், யாவும், இங்கு அங்கு ஆதிய இடைச்சொற்களும் எழுந்த முறையை விளக்குவாம்.

இவையும் ஏனைக்காரணப் பெயரீடுகளைப்போல சுட்டுக்கள் வாயிலாகவே பிறந்தன என்க. அஃதெவ்வாறு எனில், பேசுமவன் தன்னைச் சுட்டவுன்னி "இங்கு நிற்பவன்" எனும் குறிப்பைக்காட்டி, "கீழே, அடிக்குள்" எனும் பொருளுள்ள இகரச்சுட்டை, மேல்விளக்கப்பெறும் ஆன் (ஆண்) எனும் சொல்லோடு சேர்த்தி இயான் (இ+ஆன்) எனவே, அது பின் யானென்றாகி அப்பால் நான் எனப்பேச்சுவழக்கில் ஏற்பட்டது. அடியான் எனும் சொல்லை இயான் என்பதனுடன் ஒப்புநோக்குக. யான் எனும் உருவந்தான் இலக்கியத்தமிழாம் என்பதையும், மலையாளத்தில் ஞான் என்றிருப்பது எமது நான் எனும் நாடோடி உருவத்திற்கு இடைப்பட்டது என்பதையும் நோக்க, யமன் எனும் சொல், ஞமன், நமன் எனவரும் உதாகரணத்திற்போல, யான் என்பது ஞான், நான் எனப் படிமுறையாய்த் திரிந்தமை வெளியாகும். யான் என்பதற்கு என் எம் எனும் வேற்றுமை உருவங்களும் உள. அப்பால் செய்கென், செய்தேன் என்ற வினைமுற்றுக்களிற் போல மற்று, தன்மை வினைமுற்றுக்களின் இடங்காட்டும் விகுதிகளெல்லாமும் என் ஏன் என இருக்கின்றன. ஆத

லால் இவ் ஏகரத்துக்கு இனமாகிய இகரமே தன்மைப் பெயர்க்கு அடியாயிற்றென்க.

ஆரியம் ஆதிய பிற மொழிகள் பலவற்றில் தன்மை ஒருமைப் பெயர் "இங்குநிற்பவன்" எனும் குறிப்பைக் கொண்டன்று, "உள்ளிருப்பது" எனக்கருதும் "அகம்" பதத்தினின்று வந்தது. அகம்=சுருங்கிச் சுருங்கிப்போய்ப் பேசுமவனுள் அடங்குந்தன்மையாம் என முன்னரே சொன்னோம். ஆரியத்து "அஹம்"தான் "மஹம்" என உறுத்துக்கூறுமுகத்தால் இரண்டாவது முதலான வேற்றுமையுருவங்கட்கு அடியாயிற்றுப்போலும். அஹம்=யான் மாம்[மஹம்?]=என்னை. ஆரியப்பாகதங்களாகும் மருட்டி, ஒறிய, வங்காளமொழிகளில் முறையே மீ, மு, முஇ என்பன எழுவாயில் அஹம் என்பதனிடமாய் நிற்றலையுங் கவனிக்குக. (Beames, II 302)

நீ என்னும் முன்னிலைப் பிரதிப்பெயர் ஆதியில் "உ" அன்றேல் "யு" என்றிருந்திட்டதாகக் காணப்படும். "உன்" முதலிய வேற்றுமை உருவங்கள் இதனைக் காட்டுகின்றன. அயக்கு, கட்டு ஆதிய ஏவல்வினை முற்றுக்களின் "உ" இம் முன்னிலை அர்த்தம் கொள்வதேயோ? அதுநிற்க, முன்னிலை உகரம் உம், நும், உவன், உங்கு என்பனபோன்ற சில சொற்களில் தரித்துநின்றபோதிலும், பெரும்பான்மை இகரமாக மாறியே இயலத்தொடங்கிற்று. இதற்குக் குற்றியலுகரம் இகரமாவதை உதாரணமாய்க் காண்க. மாடு யாரது என்னும்போது மாடியாரது என உகரத்தை மெலித்து இகரமாக்கி உச்சரிப்பதுதான் இயல்பு. உகரம் நழுவி இகரமாகுதலாலன்றே "கேட்டி" "வருதி" முதலிய ஏவல்வினைகளில் இகரமே முன்னிலைவிகுதியாகின்றது. வினைகளின் இடங்காட்டும் விகுதிகள் யாவும் ஆதியில் நான் நீ, அவன் ஆதிய பிரதிநாமங்களே என்பது மேல் வெளி





யிடப்படும். இவ்வாறே "உ" எனும் முன்னிலைச்சுட்டு "இ" என்றாகி "யி" என நின்று "நீ" ஆயிற்று. "இ" ஏவல்வினை முற்றுக்களில் ஐ, ஆய் எனத் திரிவதுமுண்டு. செய்வை, கேளாய் எனுமுதாரணங்களைக்காண்க.

ஆரியத்தில் முன்னிலைப் பிரதிப் பெயர் ஒருமையில் த்வம் எனநிற்பினும், இருமை பன்மைகளில் யுவாம், யூயம் என வருதல் எமது "யு" எனும் ஆதி நிலைக்கு ஒத்திருக்கின்றது. ஆரியபாகதங்கள் "து" "தூ" ஆதிய உருவங்களை மேற்கொள்ளும். (Beames, II 309) லத்தீனில் ஒருமை "து" என நிற்பினும் பன்மை "வொஸ்" ஆதியனவாகும். கிரேக்க முன்னிலை ஒருமை "ஸு" எனவரும். இவற்றை ஆராயுமிடத்து "யு", (தமிழ்) "ஸு" (கிரேக்), "து" (லத்தின், ஆரியம்) இவையெல்லாம் ஒரே உகர முன்னிலைச் சுட்டின் விகாரங்களே எனக் காணலாம். "யு" எளிதில் "ஸு"வும் இது "து"வுமாதல் ஊன்றி நோக்குவார்க்குப்புலமாகும். அடி உகரம் வகரமாவதும் இயல்பே.

படர்க்கைப் பிரதிப்பெயர்கள் "அகலவுள்ளது" எனும் திரிந்த அர்த்தமுள்ள அகரச்சுட்டு; சமீபத்தை உணர்த்தும் இகரச் சுட்டு; முன்னிலையை உணர்த்தும் உகரச் சுட்டு; தெரிந்து எடுத்தலை உணர்த்தும் எகரச்சுட்டு எனும் இவற்றின் வாயிலாய்ப் பிறப்பன. அ(வ்)அன் என்பது படர்க்கை ஆண்பாற்பதம். இவன், உவன், எவன் என்பனவும் அவ்வாறும்.

## ஆண்பால்விகுதி ஆதியன

"அன்" எனும் ஆண்பால்விகுதி எவ்வாறு எழுந்ததெனில், அது எளிதில் வரையறுக்கற்பாலதன்று. ஆயினும், பிஷப் கால்டுவெல் என்பாரின் சூழ்ச்சியான ஊகத்தின்படி (p. 226), கு எனும் தமிழ்ப் பாகதமொழி வாயிலாய்

அதன் உற்பத்தியைக் கிரகிக்கலாம்போலும். குப்பாடையில் ஆனு என்பது புருடனுக்குப்பெயர். ஆலு ஸ்திரியைக் காட்டும். ஆனு, ஆலு எனுமிவை எந்தமிழின் ஆண், ஆள் எனும் பதங்களே. தமிழில் ஆள் என்பது ஆள்கின்ற கருத்தாவாய் நிற்கும் வியத்தியைப் பால்பகாமற் காட்டிடுமன்றோ? ஆளென்னும்போது ஆண்பாலும் கருதப்படலாம், பெண்பாலும் கருதப்படலாம். இனி, கருத்தாவாகிய வியத்தி எனும் இச்சாமானிய பெயரீட்டை வலிமிக்கவனாகிய ஆடவனுக்குப் பொருத்தும்முகத்தால், ளகரத்தைக் காட்டிலும் கடின உச்சாரணமுள்ளதாகிய ணகரத்தைச் சேர்த்தி ஆண் என்றும், வலிகுறைந்த ஸ்திரீயைச் சுட்டுமிடத்து சாமானிய சொல்மாத்திரையால் ஆள் என்றும் அழைத்தமை சால்புடைத்தன்றே. இவ் "ஆண்" பதந்தான் அ-வன் ஆதிய ஆண்பால் விளக்குஞ் சொற்களில் அன் எனும் விகுதியாக நிற்கின்றது. "ஆள்" எனும்பதம் பெண்பால்காட்டும் சொற்களில் அள் விகுதியாயிற்று. ஆண், ஆள் என்றவற்றில் ஆகாரம் அகரமாய் மருவினமையும் விபரீதமன்று. குப்பாடையிலேயே இம்மாற்றம் பிரசித்தம். "கித-ஆனு" (செய்த ஆண்=செய்தவன்), அம் மொழியில் கிதனு எனவரும். கன்னடத்திலும் இது இப்படியே கெயிதனு (செய்தவன்) என நிற்கும்.

படர்க்கை அஃறிணைவிகுதி விசேடித்தெழுந்ததொன்றன்று, சுட்டுக்களைப் பெலப்பித்தற்குக் கையாடிய மெய்யீறாகிய தகரமே எப்பொருட்களையும் பால்பகாது காட்டுவதாயிற்று. அது எனும்போழ்து அகலவுள்ள பொருள் சுட்டப்படும். மேல் அப்பொருளின் திணையை விளக்குமுகத்தால், "அ-ஆள்" (அவள்) எனச் சாமானிய உயர்திணையும், அதன்மேலும்பாலைப்பிரித்துவிளக்குமுகத்தால் "அ-ஆண்" (அவன்) என ஆண்பாலும் விதந்துகூறப்பட்டன எனக் கொள்க.





ஆரியத்தில் அவன், அவள், அது எனும் சுட்டுப்பெயர்கட்குச் சரியான சொற்கள் "த" எனும் அடியினின்று பிறக்கின்றன. அதன் எழுவாய் ஆண் பெண் ஒன்றன்பால்கள் முறையே ஸ, ஸா, தத் என வரினும், இரண்டாம் வேற்றுமை உருவங்கள் தம், தாம், தத் என நிற்கின்றன. ஆகவே, "த" என்பதே இவை அனைத்தினுக்கும் அடியென்க. இனி இவ் "த" அடி எவ்வாறு உற்பத்தியாயிற்றெனில், அகரச்சுட்டை உறுத்திக் கூறுமுகத்தால் தகரமாக்கியமையினாலேயாம் என எமது "அது" சப்தத்தின் உற்பத்தி ஒப்புமையாற் பெறப்படுகின்றது. உறுதிப்பாட்டின்கண் வரும் இத் தகர ஒற்றை லத்தீன் Is-te, talis, கிரேக்கம் Ton, Ten, To, லிதுவேனியன் Tas, Ta, கொதிக் Tha-ta, பழம் சர்மன் ஆதியன Daz என்பனவற்றிலுங் காண்க. மேல்வரும் தான் தன் எனும் தமிழ்ச் சப்தங்களையும் ஒப்புநோக்குக.

கிரேக்கம் லத்தின் எனும் இருமொழிக்கண்ணும் ஆரியத்து "ஸ" எனும் எழுவாய்ப் பிரதிப் பெயரினிடமாய் "ஹெ", "ஸெ" எனும் அடிகள் காணப்படுகின்றன. ஆதலால் அகரச்சுட்டே வெவ்வேறுவிதத்தில் இவ்வுருவங்கட்கும் அடிப்படையாமென்க.

இனி, அவன் என்னும் ஆண்பாற்சுட்டு தகர மெய்முதலால் வலியுறுத்தப்பெற்று அவனே எனும் உறுதிப்பொருளில் தான், தன் என வந்தன, படிமுறையாய் தன்மை முன்னிலைகட்கும் வழங்கலாயின. ஆயினும் எழுவாயிலன்றி வேற்றுமைகளில் தன் என்பது முதலிரு இடங்கட்கும் பொருந்தாதிருக்கின்றமை, இவை, யான், நீ, என்பவற்றினின்று உற்பவியாமல் அவன் என்பதினின்று பிறந்தமைக்குச் சான்றாகும். உதாரணம்:

யான் தான், நீ தான், அவன் தான்
அவன் தன் மகனுடன் வந்தான்
நீ உன் மகனுடன் வந்தாய்
யான் என் மகனுடன் வந்தேன்.

## பன்மை விகுதிகள்

இனி, யான், என் என்பன யாம், எம் எனவும், நீ, அவன், அவள் என்பன நீர் அவர் எனவும், அது என்பது அவை எனவும் பன்மை விகுதிகள் பெற்றதெவ்வாறென ஆராய்வாம். யாம், எம் எனும் தன்மைச்சொற்களில் மகரம் பன்மைக்குறியாகின்றது. இம் மகரம் எவ்வாறெழுந்தது? இது ஒடு, உடன் எனும்பொருளுள்ள "உம்" என்ற இடைச்சொல்லிற் பிறந்ததென ஊகிப்பர் பிஷப் கால்டுவெல் பண்டிதர். இம்மதம் எமக்குஞ் சம்மதம். இரு பெயரீடுகளை ஒட்டுவதே இவ்வும்மையின் கருத்தாம். "நீயும் யானும்" என்ற சேர்க்கையை "யானும்" எனக்கூறியதுதான் யாம் என்றாயிற்று. ஆதியில் "யாம்" பன்மையன்று இருமையேயாயினமையும் வேண்டும். இவ் இருமை காலகதியிற் பன்மையாயிற்றென்க. ஆயதற்பின் நாங்கள் எனும் ஓருருவம் வழக்கில்வருதலும், முந்திய "யாம்" சொல்வோனும் சொல்லக் கேட்போரும் (=நீயும் அன்றேல் நீயிரும் யானும்) என்ற அடங்கற்பொருளையும், "நாங்கள்" சொல்கின்ற யாம்மட்டும், கேட்கின்ற நீயிரல்லீர் எனும் பிரிவுப் பொருளையும் தருவதாயிற்று. இதனால் "நாம் பூவாசிகள்" என்பது சரியும், "நாங்கள் பூவாசிகள்" என்பது பிழையுமாகின்றது. பிந்திய வாக்கியத்தில், கேட்டுக்கொண்டிருப்போர் பூவாசிகளல்லர் என்பது தொனிக்கும். இவ்வாறே தமிழர் ஐரோப்பியரோடு கதையாடுகையில் "நாம் தமிழர்' என்று சொல்லுவது தவறாகும். "நாங்கள் தமிழர்" என்பதே திருத்தமான பேச்சு எனப்படும்.





அதுகிடக்க: மேற்செல்லுமுன், நாங்கள் என்றதில் ஏற்பட்ட "கள்" விகுதி எவ்வாறெழுந்ததெனவும் விசாரிப்பாம். எகரச்சுட்டு மேலுறுந்தன்மையை விளக்குவதெனக் கண்டாமன்றோ? எகரச்சுட்டிற்கு கிளத்துக்கூறுதலினின்று வினாப்பொருள் வாய்த்தமையையும் குறித்தாம் அன்றோ? அவ்வினாச்சுட்டில் உறுதிப்பாட்டின் பொருட்டு தகர வியஞ்சனஞ்சேர்ந்த காலையில், வினாப்பொருள் வலியுறுத்து எது என நின்றது. அத் தகரம் பின் லகரமுமாயிற்று: எது=எல். லகரவியஞ்சனம் எகரச்சுட்டோடு சேர்ந்தவாறுபோல இகர அகரச்சுட்டுக்களோடும் இணைந்து தத்தம் இடச்சம்பந்தத்தினை உறுதிப்பாடாய்க் குறித்தமையையும் நோக்குக. இல் என்பது "இவ்விடத்து" என உறுதியாய்ச் சுட்டி இடத்தை, வீட்டைக் குறித்தது. அல் என்பது தமிழில் தனிச் சொல்லாய் இந்நாளில் இல்லாவிடினும், கன்னடத்தில் அல்லி என வழங்கி "அவ்விடத்"தைக் குறிக்கின்றது. அத்தமிழ்ப்பாகதத்தில் அல்லியைப் போல இல்லி (இவ்விடத்து) எல்லி (எவ்விடத்து) எனும் உருவங்களும் உள்ளன. (Caldwell, p. 434) "அல்" தமிழிற் தனிச்சொல்லாய் நிகழ்கின்றிலது என்றாம். ஆயினும் அது ஓர் தொழிற்பெயர் விகுதியாய் நடைபெறுகின்றது. ஒலி–யல் என்பது ஒலித்த அது; அரி–யல் என்பது அரித்த அது. இவற்றில் "அது"வே "அல்"என வந்தமை காண்க. இவற்றை உற்றுநோக்குங்கால், அது, இது, எது என்பன அல், இல், எல் எனவும் ஓர்நாள் நின்றமை புலப்படும். அன்று, இன்று, என்று என்பனவற்றிலுள்ள றகரமும் லகரத்தின் திரிபே என்பர் கால்டுவெல் பண்டிதர் (435) எல்லு (சூரியன்) "என்று" எனவருவதையும் ஈண்டு கவனிக்கத்தகும். ஓர் கூட்டத்திலுள்ள பொருட்களனைத்தையும் ஒவ்வொன்றாய் எடுத்து அனைத்தையும் சேர்த்துச் சொல்ல விரும்புமிடத்து "எது எது? அது அது" என

நாம் இந்நாளிற் சொல்லுதல்போல, அந்நாளில் "எல் எல்" எனும் வழக்கு இருந்தமை ஒக்கும். "எல் எல்" என்பதுதான் எல்லா என நின்றதுபோலும். எல்லா=எவ்வெவ் என்பது. (தொல். எழுத். 140 காண்க) ஈண்டு ஈற்று ஆகாரம் அகரச்சுட்டின் வலியுற்ற உருவமாகும். "எல்" தான் பன்மையை விளக்கி உச்சாரண ரீதியில் ககர இடைப்பிறவரல்பெற்று கெல், கல், கள் என நிற்கும். உதாகரணம் :—மாடு-எல், மாடு-கெல், மாடு-கள் எனத் திரிந்தமை காண்க. "கள்" விகுதியே தெலுங்கில் "காரு", "லு" எனவும், சிங்களத்தில் "லா" எனவும் மருவிற்றுப் போலும். (Caldwell, pp. 238, 247)

இங்கு எடுத்தோதியவற்றால் எல்லாம் எனும் மூவிடத்திற்கும் பொதுப் பெயரின் உற்பத்தியும் பெற்றாம். எல்லெல் என்பது எல்லா என ஆகி, முற்றும்மை கூட்டுமுகத்தால் எல்லா-உம், எல்லாம் என வந்தது. ஈண்டு மகரம் முற்றும்மையே என்பது எல்லீர் நும்மையும் எல்லார் தம்மையும் எனப் பிரதிப்பெயர் கூட்டிக் கூறும்போது உம்மை பிரிந்து ஈற்றில் வருதலாற் பெறப்படும். (தொல். எழுத். 191) எல்லீர் நும்மையும் எல்லார் தம்மையும் எனும் தொடைகளில் யாம் முற்கூறிய "எல்" அடிப்புறம்பானதோர் சொல்லாய் விளங்குதலுங்காண்க. எல்-ஈர் எல்-ஆர் என்பனவற்றில் எல் எனும் சொல்லே "எது எது" எனும் முழுமையைக் காட்டும் சொல்லாகின்றது. ஈர், ஆர் என்பன அமைப்புற்ற வரலாறு அடிக்குட் காட்டப்படும். இங்கு முடிந்த முடிபு யாதெனில், எல்லாம் எனும் மொழியீற்றில் நின்று பிரித்து நும் தம் என்னும் பிரதிப் பெயர்களின் பின் வைக்கப்பெற்ற உம்மை, முழுமையைக் காட்டுதற்கு அவசியமான "முற்றும்மை" என்பதாம்.





எல் எல் என்பது எல்லீரும் எல்லாரும் என நின்று உயர் திணையைக் காட்டியவாறே, எல்லா என நின்று அஃறிணையையும் காட்டியதென்க. இன்னணமே யாதுஉம் என்பது யாவும் என வந்தமையுமாம். எல்லா-(உ)ம்=எல்லாம். யா-(து)உம்=யாஉம்=யாவும்.

நீர் (நீயிர் நீவிர்), அவர் ஆதிய முன்னிலைப் படர்க்கைப் பெயர்களின் பன்மை விகுதியாகும் இர் அர் என்பனவற்றின் பிறப்பு பின்வருவது. தமிழ் எண்களுள் ஆதியானதைக் குறிக்கும் ஒன்று, ஒரு, ஓர் எனும் உருவங்கள் ஒன்னுதலை, அதாவது பிரிவின்றி ஏகமாயிருத்தலைக் காட்டி எழுந்தன என்பது ஒருதலை. ஒன்னுதல்=ஒன்றாய்நிற்றல்; ஒன்னாதார்=பிரிந்தார், பகைவர். ஒண்ணுதலும் ஒன்னுதலேயாம். இவ்வாறே, இரண்டு, இரு, ஈர் என்னும் துவிதப் பொருள் காட்டும் இலக்கப்பெயர் ஈர்த்தல் அன்றேல் பாதியாய்ப் பிரித்தலிலிருந்து உண்டாயிற்று. ஒன்றித்து இருப்பது ஒன்று. ஈர்த்து (=இரித்து, பிரித்து) இருப்பது இரண்டு. இவ் ஈர் எனும் பதந்தான் நீ எனும் முன்னிலை ஒருமைப் பிரதிநாமத்தோடு சேர்ந்து நீ-ஈர், நீ-இர் நீயிர், நீவிர் என ஆதியில் இருமை மாத்திரையைக் காட்டி, பின் பன்மையுமாயிற்று. (Caldwell, p. 240) "இர்"விகுதி வருகுதிர் ஆதிய முன்னிலைச் சொற்களோடன்றி மகளிர் ஆதிய படர்க்கைச் சொற்களிலும் பயிலுதல் காண்கின்றோமன்றே. இதனால் "அர்" விகுதி இர்விகுதியின் திரிபே எனக் கொள்ளலாம். மேலும், அவன் எனும் ஒருமைச் சொல் அவ-இர், அவயிர், அவர் என இருமைச் சொல்லாய் வருதல் உச்சாரணமுறைக்கு விருத்தமாகும் என்போமா? அற்றன்று என உச்சரித்துக்காண்க. ஈர், இர் விகுதியைப்போல அர் எனும் அதன் திரிபும் தொடக்கத்தில் இருமையையே காட்டிற்றெனக் கொள்க. இனி, அர் விகுதி, "வர்" எனவும் "மர்" எனவும் திரிந்துள்ளது.

நால்வர், எண்மர் என்பன காண்க. தமிழ் "வர்" விகுதி தெலுங்கில் அவரு, வாரு எனவும், சிங்களத்தில் வரு எனவும் மாறிநிற்கும். தமிழில், அப்பால், மார் என ஒரு உருவம் உண்டாயிற்று. இதனோடு "அர்" விகுதி ஆர் என நீண்டியங்குதலையும் நோக்கத்தகும். உதாரணம்: தகப்பன்மார், தகப்பனார். "மனார்" என்னும் இலக்கியவழக்கில் மகரம் வருங்கால இடைநிலையாயுள்ளதென்பர் பிஷப் கால்டுவல் பண்டிதர் (p. 242). என்ப, என்மர், என்பார், என்மார், என்மனார் என்பதே வரன்முறைபோலும்.

ஈற்றில் அஃறிணைப் பன்மைவிகுதியாகும் அ, அவ (அவை என மெலிவுற்றது) என்பவற்றின் உற்பத்தி தானே போதரும். அது எனும் சுட்டுப்பெயர் யாதொன்றனை உறுதிப்பாடாய்க் குறித்தலால் ஒருமையையே உணர்த்த, அ, அ(வ்)அ எனும் சுட்டு அவ்வாறன உறுதிப்பாடின்றிப் பொதுமையிற் காட்டுவதால் பன்மையாயிற்று. "ஆகுல நீர பிற" எனும் குறட்தொடையில் நீர, பிற என்பன பன்மைகாட்டும் "அ" விகுதியின் பிரயோகங்களாம். அவை என்பது "அவ"வே யெனல் மலையாளததில் அஃறிணைப் பன்மைப் பிரதிப்பெயர் "அவ" என்றிருத்தலால் பெறப்படும். "மீண்டன" என்பதில் "அ" எனும் பன்மைவிகுதி உச்சாரண லாகவம் நோக்கி னகர இடைநிலை பெற்றது. "மீண்ட" எனும் இலக்கியத்தமிழும் மீண்டன என்பதும் ஒன்றேயாம்.

பிரதிப் பெயர்கள் செயல்பற்றிய பெயரீடுகளின் பின்னிலையாகியவிடத்து, தமிழ் வினைகளின் இடமும் பாலும் காட்டும் விகற்பங்கள் உண்டாயின. வரலாறு:

செய்-த-யான் =செய்தனன், செய்தனென், செய்தேன்
செய்-த-நீ =செய்தனை, செய்தாய் (செய்-த-இ)
செய்-த-அவன்=செய்தனன், செய்தான்,





இவற்றில் யான், நீ, அவன் எனும் சர்வநாமங்களே செய் எனும் வினைக்குப் பின்னிலையாகி இடங்காட்டின. செய்தனன் ஆதியவற்றில் னகரம் இசைநிறை. இனிப் பால் காட்டும் வரலாறு இது.

செய்-த-யாம் =செய்தனம், செய்தேம்
செய்-த-நீர் =செய்தனிர், செய்தீர்
செய்-த-அவள்=செய்தனள், செய்தாள்
செய்-த-அது =செய்தது
செய்-த-அர் =செய்தனர், செய்தார்
செய்-த-அ =செய்த, செய்தன.

இனி வினாப்பெயர் பூர்வசம்பந்தப்பெயர்கள் எழுந்த முறையை விளக்குதும்.

## வினாப்பெயர், பூர்வசம்பந்தப்பெயர்

தமிழ் வினாப்பெயர்கள் மேலுறுந்தன்மையைக் குறிப்பதாகிய எகரச்சுட்டினின்று பிறந்தமை வெளிப்படை. எவன்=எ+(வ்)ஆண்=எவன் என்றாயிற்று. (ஏனைத்திணைபால்கட்கும் இவ்வாறே கூறிக்கொள்க.) எவன் ஆதியன தற்காலவழக்கு. தமிழமைப்பின்கண், மீசுரமான உறுதிப்பாட்டை நோக்கி, குற்றுயிர்கள் நெட்டுயிராயினமை கண்டாம். அங்ஙனமே, ஆதியில் வினாப்பெயரின்கண் எகரம் நெடிலாகி ஏவன் ஆதியனவையாய் நின்றதுபோலும். இந்நிலை தொல்காப்பியத்தினுள்ளும்

ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா

என்றதனாற் பெறப்படுகின்றது. (எழுத். 32) இவ் ஏகாரம் பத்தியரூபப் பண்டைநூல்களில் "ஏவன்" எனவிருத்தலோடு இன்றைக்கும் ஏது எனும் ஒன்றன்பாற் பதிற்பெயரிற் காணப்படும். தமிழின் பாகதங்களுள் ஒன்றாகிய மலையாளத்தில் ஏவன், ஏவள், ஏந்து, ஏது, ஏவ எனும்

உருவங்கள் உள. குறுக், மல்ற்றோ எனும் மொழிகளில் இவ்வினாக்கள் "நே" முதலுடையன. தெலுங்கில் ஏதி (எது) ஏவி (எவை), ஏவ (எங்ஙனம்) எனும் உருவங்கள் நிலவுகின்றன. (Caldwell, p. 423) இவற்றால் ஆதித் தமிழில் ஏவன் ஆதியனவே இயன்று, அவை உச்சாரணமுறையில் மொழிமுதல் யகரம் பெற்று வந்தமையினால் யேவன் ஆதியனவாய் நின்று, பின் ஏகாரம் ஆகாரமாய் மெலிந்து யாவன், யாவள், யாது, யாவர், யாவை எனத் திரிந்தனவாகக் கொள்ளலாம்.

இவ் யாவன் ஆதியனதாம் தொல்காப்பியர்கால வழக்காகும். தமக்கு முன் நிகழ்ந்த வழக்கை நோக்கிப்போலும் அன்னார் ஏகாரத்தைச் சூத்திரத்துள் வினாவாகத் தந்தவிடத்தும், யாவன் ஆதியனவற்றையே வினாச்சொற்களாக எடுத்தாண்டார் (எழுத்து; உருபியல், 3, 6, 28). எங்காலத்தில் இவ் யாவன் ஆதிய வழக்குத்தானும் தாழ்ந்து, வினாப்பெயர்கள் எவன் ஆதியனவாய் மருவிவந்திட்டன. இது யாவன் என்பதை இயாவன் என இகரமொழி முதல் கூட்டி உச்சரித்த வழக்கத்தினால் இகரம் தன்னோடு பிறப்பொத்த எகரமாய்த் திரிந்து இயாவன் இயவன், எவன் என உண்டான மாற்றமாகலாம். அன்றேல், "எப்பெயர்" "எவ்வயின்" முதலாம் தொடர்களிலுள்ள வினாப்பொருளதான எகரத்தை அநுசரித்து எழுந்ததாகலாம். இவையிரண்டு எடுத்துக்காட்டுக்களும் எகரத்தை வினாவாகக் காட்டாததாகிய தொல்காப்பியத்துள்ளேயே உள்ளன. (எழுத். புணரி. 26; புள்ளி. 39)

இதுகாறும் கூறியவற்றால் எகரச்சுட்டின் வலிகூடிய உருவமாகிய ஏகாரமே பலவற்றுள் ஒன்றைத் தெரிந்து உறுதிப்பாடாகச் சுட்டும் முகத்தால் வினாப்பொருளைத் தந்துநின்றதெனவும், அதுதான் ஒருபால் யா எனவும் ஒரு





பால் எ எனவும் வந்ததெனவும் புலப்படும். ஆகார ஓகார வினாவுருவங்களும் ஆதி ஏகாரத்தின் திரிபே எனக்கொள்க.

தமிழ்ப்பாகதங்களில் யா என்னும் வினா எழுத்து ஜா எனவும் அப்பால் தா (da) எனவும் மாறிநிற்றல் கவனிக்கற்பாலது. துளுமொழியில் தா=எது, தாயெ=ஏன்; தானெ, ஜானெ=யாது, யேர்=யார் என்றும். பிராகூயில் இவ் யேர், தேர் (der) என நிற்கின்றது. இவ்வாறே ஆரியத்தின் பாகதங்களிலும் ஆரிய யாவத் ஆனது ஜாவ என வரும். ஆரிய ஜகரம் அர்த்தமாகதியிலும் சிங்களத்திலும் த (d) என விகாரப்படும். ஜால என்னும் ஆரியம் தள எனச் சிங்களத்தில் வழங்குவது. ஆரியந் தனக்குள்ளும் ஜாயாபதி எனும் சொற்கூட்டம் தம்பதி என வருதல் காண்க. (Swaminatha Aiyer, p. 17)

இனி, ஆரியத்தில் வினாப்பெயர்கள் க, கா, கிம் (யாவன், யாவள், யாது) என்பனவன்றோ? இவற்றின் அடியாகிய ககரத்துக்கும் தமிழ் வினாவடியென யாம் கூறும் யகரத்துக்கும் இடையில் ஒற்றுமை யாண்டையது எனில், கூறுவாம். ஆரியத்தில் வினாப்பெயர் க, கா, கிம் என்றிருப்பினும், பூர்வசம்பந்தப் பெயர் (Relative pronoun) ய, யா, யத் என யகர அடிபெற்றே நிற்கும். இனி வினாப்பெயர் சிறிது தன் அர்த்தந்திரிந்தே பூர்வ சம்பந்தப் பெயராகும் எனும் உண்மை அறியற்பாலது. இதனைப் பின்வரும் தைத்திரிய ஆரண்யக (6, 1) எடுத்துக்காட்டை அதன் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புக்களோடு ஒப்பு நோக்கியறிக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ய | ஏநம் | விது: | அம்ருதாஸ் | தே | பவந்தி |
| யாவர் | இதை | அறிகின்றார் | சாவாதோர் | அவரே | ஆவார் |
| Who | this | know | immortal | they | become |

"யார்?—அவர்" எனும் இவ்வழக்குத்தான் ஆரிய பூர்வசம்பந்த வாக்கியங்களில் பெரும்பாலுமுள்ளது. இதில்

யார் என்பதற்குச் சரியான "ய" எனும் ஆரியம் உண்மையில் ஓர் வினச் சொல்லே என்பதை இங்கு காட்டிய மேற்கோளின் அங்கில மொழிபெயர்ப்பால் நன்ருய்த் தெளிந்துகொள்ளலாம். அதில் Who=யார் எனும் வினப்பெயரே பூர்வ சம்பந்தப்பெயராயும் நிற்கின்றது. இவ்வாறு பலமொழிகளில் வினப்பெயரும் பூர்வசம்பந்தப் பெயரும் ஒன்றேயாகின்றன. இம்முறையானது முன்பு வினப்பெயராயிருந்தவைதாம் பின்பு பூர்வசம்பந்தப்பெயர் உருவங்கொண்டன என ஐயமின்றிக் காட்டும். இதனுல் ஆரிய "ய" முதலானவை பூர்வசம்பந்தப் பெயராகுமுன் வினப்பெயராயிருந்தன எனல் தேற்றம். ஆகவே இவ் "ய" முதலிய வினப்பெயர்தாம் காலவடைவில் "க" ஆதியன ஆயிற்றென ஊகித்தற்கிடமுண்டு.

இவ்வூகம் ஆரிய பாகதங்களையும் அன்னிய மொழிகளையும் நோக்குதலினுல் வலியடைந்துநிற்கும். ஆரிய "ய" எனும் பூர்வசம்பந்தப் பெயரடியானது பாகதங்களில் "ஜ" என்ருகின்றது. இவ்வாறே ஆரியத்தில் "ய" (ஆண்பால் ஒருமை) "யே" (பன்மை) என்றிருப்பன, இந்தி ஆதியவற்றில் "ஜோ" "ஜே" எனவும், குசராத்தி ஆதியவற்றில் "ஜே" "ஜெ" எனவும் நிற்கின்றன. (Beames, II 321) இவ் ஜ அப்பால் ஒருபுறம் சோ எனக் குசராத்தியினும் ச்சா என சிந்தியினும் நிற்றலையும், மறுபுறம் ஆரியத்தில் சகரமும் ககரமும் நிலைமாறுதல் உண்மையையும் (Ibid. II, 324) நோக்கும்போது, ஆதி"ய" தானே "ஜ", "ச", "க" என அவ்வம்மொழிகளில் மாறிவந்திருக்கின்றமை வெளிப்படும். ஆயின் வலியுடைய ஒலி மெலிவுடைய ஒலியாய் மாறுதலன்ருே சகசம்? ககரம் சகரமாய் மாறிற்றெனில் ஒக்கும்; பின்னைய மெலிவுடைய மெய் முன்னைய வலியுடையதாய் மாறிற்றெனல் ஒக்குமா? எனில், யகர முதலான வினப்பெயர் பூர்வசம்பந்தப்பெயராய்ப்போன காலையில் அதற்கு எதிர்நிற்கும் சுட்டுப்பெயரொன்று (Co-relative) வேண்டப்படவே, அப் புதுச் சுட்டுப்பெயரினுக்கு உறுதிப்பாடுநோக்கி வலிந்து உச்சரிக்கும் மெய்யொன்றைக் கையாளல் அவசியமாயிற்று என்க. வல் ஒலிகளை மெலித்துச் சொல்லுதலே இயற்கையாயினும், மெல்லொலியாலியன்ற ஒருசொல்லை விகற்பித்து வழங்கவேண்டியவிடத்து, மொழியமைப்பின்கண் வல்லொலிகளுந் தேடி வேலைகொள்ளப்பட்டன என்பதில் மயக்கமின்று. பிரதம சொல்லடிகள் துவிதீய அடிகளாய் வந்தவிடத்து உயிர்முதற்சொற்களை விகற்பிக்கும்பொருட்டு உச்சாரணகாடினியமான மெய்கள் எடுத்தாளப்பெற்றதைக் கண்டுள்ளோம் அன்ருே. இங்ஙனமே "எவனே—அவன்" என யாம் தமிழிற் சொல்வது "ய:—க:" (=யாவன்? அந்த அவன்) என்றபடி உறுதிப்பாட்டை நோக்கி எழுந்ததென்க. "ய:" என்பதுதான் கிரேக்கத்தில் Hos என நிற்றலையும், பழம் ஆங்கிலத்தில் Hwa (தற்காலையில் Who) என்றும் இதுதான் லத்தினில் Quis என்றும் வருதலையும் நோக்குக.

இவ்வாறே ஆதி வினவடியாகும் எகரம் ஏகாரமாகி, அப்பால் யகர ஆகாரமாய்த் திரிந்து, பின் ஆரியத்தில் யகரமும் ஆரியபாகதங்களில் ஜகர சகரங்களும், கிரேக்கத்தில் ஆங்கிலத்தில் ஹகரமும், பின் ஆரியத்தில் லத்தினில் ககரமுமாய் வந்திருக்கின்ற விசித்திரத்தைக் கண்டுகொள்க.

# ஏழாம் அதிகாரம்

## Nominal Suffixes, Signs of Declension

## பெயர்விகுதிகள், வேற்றுமை உருபுகள்

இனி, பெயர் விகுதிகளுட் பெரும்பான்மை பயில்வனவற்றை எடுத்தாள்வாம். அகழ் ஆதிய பிரதம சொல்லடிகளினீற்றில் விகுதிபோன்றிருப்பன அன்னவையல்ல, சொல்லமைப்பின்கண் உறுதிப்பாடும் வேறுபடுத்தலும் நோக்கி இணைந்த வியஞ்சனப் பகுதிகளாமென்பது முன்னர் தெளிவித்ததாகும். துவிதீய சொற்களின் இறுதிப் பாகங்களே விகுதிகளாம்.

### அது எனுஞ் சொல்லால் ஆனவை

இவற்றுள் மிக்கு வழங்குவதொன்று அல் விகுதி. இஃது அது என்னுஞ் சுட்டிற்கினமாய்ப் பிறந்ததோர் சொல்; "எது" எல் என நிற்றலையொத்தது. (51-ம் பக்) அது=அல். இவ் "அல்"தான் அர், அழ், அள், அன், எனவும் மாறும்; ல, ர, ழ, ள, ன என்னும் ஒலியெல்லாம் ஒத்த பிறப்பினையுடையன ஆதலால் என்க. உதாகரணம்: குவியல்=குவி(யும்)அது; சுடர்=சுடு(ம்) அது; உறழ்=உறு(ம்) (இடையிற் பொருந்தும்) அது; பாந்தள்=பாய்ந்து (வரும்)அது; கடன்=கட்டு(ம்)அது எனக் கண்டுகொள்க. அதி பூர்வ தமிழ்ச் சாசனங்களில் மட்டும் அன்று பிந்திய வட்டெழுத்துக் கல்வெட்டுக்களிலும் இவ்வரன்முறைக்கு அத்தாட்சி காணப்படும். இப்பிந்தியனவற்றில் வேண்டு-அது, அடு-அவன், எடுக்க-அவகளுக்கு ஆதிய சொற்கள் விளங்குகின்றன. (Subrahmanya Ayyar, p. 286) அல்





விகுதி தன் ஆதியுருவத்தில் அது எனப் பெயர் விகுதியாய் நிற்றலைக் காலங் காட்டும் தொழிற் பெயராதியனவற்றில் பரக்கக் காணலாம். செய்தது, செய்கின்றது, செய்வது என்பனவற்றை செய்த-அது என்பனவாகப் பிரித்துக்காண்க. செய்தது, செய்தல், செயல் என முறையே வைத்து "அது" விகுதி படிப்படியாய் "அல்" ஆயினமையைத் தெளிக. இவ் அல்தான் கிணறு எனுஞ் சொல்லில் அறு எனும் விகுதியாயிற்றுப்போலும். கிணறு=கிண்டிய அது. இவ்வாறே இடறு=இடை(யிற் கிடக்கும்) அது.

அல் விகுதியே உச்சாரணவகையில் கடைக்குறைந்து தமிழ்ப் பாகதங்களில் "அ" "இ" எனவும் தமிழ் தன்னில் "ஐ" எனவும் நிற்பது. உதாகரணம்:—நடை. இது நடத்தல், (நட[ந்]தல்) எனும் தொழிற் பெயரையொத்த நட-அல் என்னு முருவத்தினிடமாய் நட-அ என நின்று நடை ஆயிற்று. நடவை என்பதும் பொருள் வேறுபாடு நோக்கி நட எனும் சொல்லடியாய்ப் பிறந்த வேறொரு உருவமாம்.

ஐகாரமே "அல்"லினுக்குப் பதில் விகுதியாயினதற்பின், சொற்பகுதியோடு இஃது சேருமிடத்து நடவை என்றதிற்போல வகர மெய்மட்டுமன்று, ககர, சகர, மகரம் ஆதிகளும் இடைப் பிறவரலாயினமையுண்டு. இவ்வாறே கவி என்னும் அடியிலிருந்து கவிதல்போல கவிகை (கவி-க்-ஐ) எனும் உருவமும் பிறந்தது. செய் அடியிலிருந்து செய்தல், செயல் போல, செய்கையும் வரும். செய்கை மலையாளத்தில் செய்க எனவாகும். (Caldwell, p. 473) நம்பிக்கை எனும் சொல்லின் "கை"யும் க(ல்) இன் மரூஉ போலும். இச் சொல் தெலுங்கில் நம்மிக்க, நம்முக்க என நிற்பது. ஐயாக மாறிய "அல்" ககர உச்சாரண மெய் கொண்டதுபோல சகர மெய்யுங் கொண்டதற்கு உதாகர

ணம்: வரிசை. இது வரிதல் (வழிதல்) என்னும் உருவத்துக்கு இணையாக வரி-(ச்)-அல் வரிச, வரிசை என வருவது. "அல்" மகரமெய்கொண்டதற்கு எடுத்துக்காட்டு: பொறுமை=பொறுத்தல். இது பொறும(ல்) என நின்று பொறுமையாயிற்றென்க.

அகரமாய் நின்ற அல் விகுதி ஐகாரமாகாது ஆரியத்தை நிகர அஃறிணைப் பொருள்காட்டி மகர மெய் முடிபு பெறுதலுமுண்டு. இங்ஙனமே ஆழ் (அகழ்) எனும் அடி ஆழம் என விரியும். இது ஆழல் எனும் உருவத்தினையொத்துப் பொருள் வேறுபாட்டின்கண் எழுந்தது. இவ்வாறே நீளம்=நீளல்; உயரம்=உயரல். அல் விகுதிக்கும் அதன் "அம்" பேதத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு யாதெனில், முன்னையது வினைப்பொருளையும் பின்னையது பொருட் பெயரையும் காட்டுகின்றமை போலும். தூங்கல்=தூங்குதலாகிய செயல்; தூக்கம்=தூங்கும் அன்றேல் தூங்குவிக்கும் அது. விரும்பல்=விரும்புதலாகிய செயல்; விருப்பம்=விரும்பிய அன்றேல் விரும்பும் அது எனக் காண்க.

இவற்றையொழித்து அல் விகுதி கல், தல், மல் என வேறு வேறு உச்சாரண மெய்முதல் பெற்று இயலலும் ஒன்று. நடக்கல்=நடத்தல்; வளர்தல்=வளரல்; செய்யாமல் எனும் எதிர்மறை வினையெச்சம் செய்தல் எனும் உடம்பாட்டு உருவத்திற்கு இணையானது. தல் என நின்ற "அல்" இங்கு மல் ஆயிற்று.

## இல், உள் என்பன

இதுகாறும் கூறியன அது எனும் சுட்டுப்பெயரின் மரூஉக்களாகும் விகுதிகளாம். இருப்பது எனும் அர்த்தமுள்ள இல் எனும் சுட்டுப்பெயரும் பல வழிச் சொற்கட்குப் பெயர் விகுதியாயிற்று. எச்சில்=எஞ்சியிருப்பது.





வெயில்=வெம்மையாயிருப்பது. அப்பால், இது அல் விகுதியிற்போல ஈற்று லகரங் கெட்டு "இ" என நின்றும் இருப்பது எனும் பொருளையே கொண்ட விகுதியாகும். உவரி=உவர் (உப்பு) இருக்குமிடம்; கல (வ்) இ=கலந்திருப்பது. இவ் இகரம் அகரத்தைப்போல மெய் முதல் பெற்றுவருதலுமொன்று. உண்டி=உண்ண இருப்பது. ஊர்தி=ஊர (வாகனமாய்) இருப்பது. ஏனையவற்றையும் இவ்வாறு ஆராய்ந்தறிக. அப்பால், உள் எனும் முதற்சொல்லடியும் பல பெயர்கட்கு விகுதியாகும். உள்=உள்ளது, அகத்துக்கொண்டது. உதாரணம்:—பொருள் (√ஒல்)=பொருந்தியுள்ளது, உடைமை. விளையுள்=விளைவை அகத்துக்கொண்டது, வயல். உள் விகுதி, அல், இல் என்பனபோல கடைக்குறைந்து உ என நின்றும், மெய் முதல் பெற்றும் விளங்கும். உ-ம், கடுகு (கடு=காரம்) கடுப்பு உள்ளது. களவு=கவர்தல். இங்ஙனமே அசடு (=அயர்-தல்), பிறப்பு (=பிள-த்தல்) ஆதியனவும் வருதல் காண்க.

உள் எனும் அடி உல் என்றாகிச் சில பெயர்கட்கு விகுதியாகும். அல்குல் (அல்கு-உல்) குறைந்துவரும் உறுப்பு, இடை. "உள்" ஊழ் எனவும் நிற்கும். என்றாழ்=என்று (எல்லு)-ஊழ்=சூரிய வெப்பத்தைக்கொண்டுள்ளது, கோடை. "உள்" உறவு (உறு) என்றாகிச் சில சொற்கட்கு விகுதியாம். நல்குரவு=நல்கு (பெறுதல்)-உரவு (உறவு), வறுமை. உரவு அரவென்றும் மாறும். கூட்டரவு, தேற்றரவு ஆதியனவற்றிற்போல.

இவையிற்றையன்றி எவர்க்கும் புலப்பாடாகும்சொற்கள் சிலச்சில விகுதிகளாய் நிற்றலுமுண்டு. இவைதாம் கண்=இடம், இடுக்கண் என்பதிற்போல; பாடு=நிலைமை, கட்டுப்பாடு என்பதிற்போல; சாக்காட்டில் விளங்கும்

காடும் இதன் மரூஉவேயோ? அகம்=உள்ளாகும் தன்மை, வையகம் என்றதிற்போல. பிறவுமன்ன. இங்கு காட்டியவை யாவும் உதாரண மாத்திரையே. விகுதிகளாகும் சொற்களினும் பகுதிகளாய் நிற்கும் சொற்களினும் உற்பத்தியாதிகளை இனி வெளிவரும் எமது சொற்பிறப்பகராதியினுட் பார்க்கக்காண்க.

## ஐ ஆதியன உருபுகள்

இனி, வேற்றுமையுருபுகளின் பிறப்பை ஆராயத் தொடங்குதும்.

பெயர்ச்சொற்கள் வாக்கியத்திற் கொள்ளும் நிலையை வேற்றுமையுறச் செய்யும் உருபுகளும் உருமாறி நிற்கின்ற ஒவ்வோர் சொல்லேயாம். முதலாவதான எழுவாய், வேற்றுமையின்றித் தன்னிலையாயுள்ளது. "எழுவாயுருபு திரிபில் பெயரே.", இரண்டாவதான ஐ உள்ளபடி தெரிந்தெடுத்துக்கூறும் ஏகாரமேயென்க. ஓர் கூட்டத்தில் ஒருவனைத் தூக்கி எடுப்பதுபோலத் தெரிந்து சுட்டி "அவனே வரச்சொல்லு" என்பதுதான் அவனை வரச்சொல்லு எனப்படுவதாம். "அவனே கூப்பிடு" அவனைக் கூப்பிடு என வரும். மலையாளத்தில் எகரமும் அகரமும் இரண்டாம் வேற்றுமைக் குறியாகின்றன. ஆதி ஏகாரந்தான் எகர, அகர, ஐகாரங்களாயிற்றென்க.

மரத்தை என்றதிற்போல, பெயர்ச்சொற்கள் பல அத்துச்சாரியை பெற்று வருதலுங் காண்கின்றனமே. இதன் வரலாறுயாது? இவ் "அத்து"வும் அது எனும் சுட்டுச்சொல்லேயாம். இங்கு "அது" உறுதிப்பாட்டின்கண் வந்தது. ஊன்றி ஆராயுங்கால், மரத்து என்பதில் "அத்து" இடைப்பிறவரலான ஓர் சாரியையன்று, மரம் எனுஞ் சொல்லினகத்துள்ளதே என்பது பெறப்படும். எங்ஙனமெனில், மரத்தின் அம் ஈறு "அது" எனும் சொல்லின்





விகாரமாம். இவ் அது எனுஞ் சுட்டு அல் முதலியனவாகவும் அம் எனவும் திரியுமெனக் கண்டாம். (62-ம் பக்கங்காண்க) உண்மையில் மரம் ஆதியில் மரல் (மர—அது) என நின்றதாகத் தோன்றும். "மரன்" அதன் மற்றோர் உருவம். மரல் சொல், அரல் (√அடு) பரல் எனுஞ் சொற்களோடு சம்பந்தப்பட்டு, இறுகியது, கடினமானது எனும் பொருள் கொள்ளும். மரச் சொற்கு இப் பொருள் உண்மையை "அகக்காழனவேமரமெனமொழிப" எனும் தொல்காப்பியச் சூத்திரத்தினறிக.—(பொரு. 691).

ஆல் எனும் மூன்றாம் வேற்றுமை உருபு அயல் எனும் இடப்பெயரின் மரூஉப்போலும். "முயற்சியால் செல்வமடையலாம்" என்னும் போழ்து முயற்சியைப் பக்கத் துணையாக்கொண்டு என்பதே போதருதல் காண்க. முயற்சிவாயிலாய் என்பதூஉம் முயற்சியால் என்பதூஉம் ஒரே பொருளைத்தரும் இருதொடர்களன்றோ. "வாயில்" =வழி—இல். பிஷப் கால்டுவல் "ஆல்" உருபு "கால்"(=வாய்) எனும் சொல்லின் திரிபென்றார் (p. 276) இதனை ஒப்புவோர் ஒப்புக. இனி, மூன்றாம் வேற்றுமையுருபின் ஆன் எனும் உருவம் "ஆல்"இன் மரூஉ என்பது வெளிப்படை. ஒடு ஓடு என்பன, உடன் என்பதின் மறு உருவங்கள். "உடன்", உள் எனும் பிரதம சொல்லடியிலிருந்து உண்டாகி "உள்நிற்பது" எனும் அர்த்தமுள்ளதாகும் "உளன்" என்பதன் திரிபு.

நாலாவதான குவ்வுருபு கையென்பதின் திரிபெனத் தோன்றுகின்றது. சாத்தன்→கை கொடு என்பது சாத்தற்கை கொடு என நின்றதாகலாம். இனி, சாத்தற்கை என்பது சாத்தற்கி எனவும் சாத்தற்கு எனவும் வருதல் அசம்பாவிதமாகாது. "கு" முடிவு மூன்றாம்வேற்றுமைப் பெயர்களிற்போல, வடக்கு கிழக்குஎனும் திசைகாட்டுஞ் சொற்களிலும்பயிலுகின்றது. வடக்கு ஆதியில் வடகை, வல(து)கை, வள(க்)கை என்றும்; கிழக்கு, கீழ்க்கை என்றும்

இருந்திட்டல் பிசகாகுமா? கன்னடத்தில் மூன்றாவதன் உருபு "கெ" என்றிருப்பது. சிங்களத்தில் அது "கை" (Ghai) ஆகும். இப் பிந்திய மொழியில் "ஒஹு–கரா" எனில், அவன் எதிரே எனப்பொருள்படும். இதில் ஒஹு– அவன், கரா கையேயாதலால், ஒஹு–கரா "அவன்கை" எனவருதல் காண்க. வடமொழியில் கிறுதே என்னும் இடைச்சொல் நான்காமுருபுப் பொருண்மையில் வருவது. கிறுதே என்பது க்ரம் எனும் கைப்பொருட்சொல்லின் விகாரமேயெனக் காண்க.

ஐந்தாம் வேற்றுமையின் இன்னுருபும் இடம் எனப் பொருள்படுகின்ற இல் எனுஞ் சொல்லே. இல் எனுஞ் சொல் கீழுறுந்தன்மையை விளக்கும் இகரச்சுட்டினின்று பிறந்த முதல் அடிகளுள் ஒன்று. இல்=கீழே, நிலத்தில் இடத்தில், இடம் என வந்திட்டது. இடத்தினின்றே "வீடு" எனும் பொருள் "இல்"லுக்குத் தோன்றிற்றென அறிக.

ஆறாம் வேற்றுமையுருபு படர்க்கை ஒன்றன்பாற் பிரதிப் பெயரும் பலவின்பாற் பிரதிப்பெயர்ச் சிதைவு மேயாம். "அது" ஒன்றன்பாற் படர்க்கைப்பொருள். ஆதுவும் அது.. "அ", அ(வ்)ஐ எனும் பலவின்பாற் பிரதிப்பெயரின் மரூஉ. "உயர்திணை ஒருமை பன்மை ஆகிய கிழமைப் பொருட்கு இவ்வுருபுகளேலா" எனப் பவணந்தியினுரையாசிரியர் கூறிப்போந்தது இவை நாங் காட்டியவாறு அஃறிணைப் பிரதிப்பெயர்களேயாதல்பற்றி யாம் என்க.

கண் எனும் ஏழனுருபு ஐந்தாவதனுருபின் வேறன்று. இச்சொல், அண்=சமீபத்தினுள்ளது என்பதன் வலியுறுத்த உருவாம். பொருளொன்றான வேற்றுமையினை இரு வேற்றுமை யென்றாக்கினார் வடமொழி வியாகரண வழிப்பட்ட நம் இலக்கணவாசிரியர்.



# எட்டாம் அதிகாரம்

## Particles denoting Tense

## காலங்காட்டும் இடைநிலைகள்

தெரிநிலைவினைக்கண் நிகழ்வு, இறப்பு, எதிர்வுகளைக் காட்டும் இடைநிலைகள் எழுந்தவாற்றையும் ஆராய்வாம்.

நிகழ்கால இடைநிலைகள் ஆநின்று கின்று கிறு எனல் எக்கால வழக்கு. (பவணந்தி நன்னூல், 143). ஆயின் ஆநின்றும் கின்றுமே சங்ககாலத்தன. முந்தியது ஆகிடந்து, ஆவிருந்து எனவும் வருதலால் (தொல். சொல். 204 நச்சினார்க். உரை) ஆநின்று=ஆகி-நின்று எனும் சொற் கூட்டமே எனத் தோன்றும். செய்யாநின்றேன் என்புழி செய்(வோன்) ஆ(கி) நின்றேன் என்பது கருத்து எனக் காண்க. ஆகி எனும் வினையெச்சம் "ஆ"மாத்திரையாய் நின்றலும் செந்தமிழ் வழக்கன்றோ. மலையாளத்துச் சீரிய கிறீஸ்தவர்களிடத்துள்ள கி. பி. 774-ம் ஆண்டுச் சாசனத்தில் ஆநின்று என்பது ஆயிநின்று என வருகின்றது. இது ஆகிநின்று என்பதற்கும் ஆநின்று என்பதற்கும் இடைப்பட்ட உருவமாம் என்க. (Caldwell, p. 492)

கின்று கிறு என்பவற்றுள் "கின்று" உருவந்தான் செந்தமிழில் மிகப் பயில்வது. அதுவே இரண்டனுள்ளும் முந்தியதென்பதற்கு, மலையாளத்தில் இந் நிகழ்கால இடைநிலை கின்னு, இன்னு, உன்னு என வருதலானும், இதற்கிணையாக ஒன்று மூன்று ஆதியன ஒன்னு மூனு ஆதியனவாய் வருதலானும் பெறப்படும். தமிழில் அடிக்

கின்றான் என்பது மலையாளத்தில் அடிக்குன்னான் என்றாகும். பழைய மலையாளச் சாஸனங்களில் இது அடிக்குன்றான் எனவரும்.

“கிறு”வுக்கு “கின்று”வே பிறப்பிடம் எனின், இக்கின்றுதான் எவ்வாறெழுந்துள்ளது? பிஷப் கால்டுவெல் பண்டிதர் எடுத்தோதும் கொள்கைப்படி, கின்று என்பது, க்+இன்று எனவாகும். “க்” வருங்கால இடை நிலை; செய்கு என்னும் செந்தமிழ் வினையிற்போல. அவ் வருங் காலத்தை, இன்று(இந்நாளில்) எனும் சொல் நிகழ்காலமாக்கும் என்ப. செய்-க-இன்று-ஏன் = இன்றைக்குச் செய்கேனாவேன், செய்கின்றேன் என்றபடி. ஆயின் இவ்வுற்பத்தி எமக்கு மெய்போலாததாகத் தொனிக்கின்றது. தமிழ் மொழியின் பிற கூட்டுச்சொற்களது ஒழுங்குமுறையின் சீர்மையை நோக்குமிடத்து, இதிலையும் ஆநின்று என்னும் உருவத்தினுக்குள்ள பிறப்பை ஒத்ததொன்றே உளதாதல் வெளிப்படும். ஆகி-நின்று எனவே ஆ(கி)நின்று, ஆநின்று என வந்ததைக் கண்டாமன்றோ. அவ் ஆகிநின்று தான் ஆகி(நி)ன்று ஆகின்று எனவும் மாறிற்றென்க. இவ் ஆகின்று உருவம் சங்கநூல்களில் ஆகிநின்று என்பதற்குப்பதிலாய் வழங்குதலைக் காண்க. ஆகின்று, பின்னும் முதலாகாரங்கெட்டு கின்று எனவும் நிற்றல் மணிமேகலையில் “ஊழியெண்ணி நீடுகின்றோங்கிய ஒரு பெருங்கோயில்” என்பதிலும், இறையனாரகப் பொருளுரையிற் சில்லிடங்களிலும் தோற்றுகின்றது. இஃதிவ்வாறாக, ஆரிய “கிறு” எனும் உதவிவினையே எமது நிகழ்கால இடைநிலையாமென றெவறன் போப்பையரோடு ஸ்ரீ ஆர். ஸ்வாமினாதய்யர் கொண்டமதம் (சுதேசமித்திரன் அநுபந்தம்) ஒதுக்கி வைக்கப்பட்டதாகும் எனக்கொள்க.





## இறந்தகால இடைநிலை

இனி, த், ட், ற், இன் என்னும் இறந்தகால இடைநிலைகள் (பவணந்தி பத. 142) எழுந்தமையை நோக்குதும். இவற்றுள் ட், ற் என்பன தகரவொற்றின் மரூஉக்களே என்பது மலையிலக்கு. உண்-த்-ஆன் உண்டான் எனவும் செல்-த்-ஆன் சென்றான் எனவும் மாறுதல் எழுத்துப் புணரியல் வழி வரும் விகற்பங்களே என்க. அப்பால், இன் இடைநிலை சங்ககாலத்ததன்று, பிற்பட்டதாம். இன்றைக்கும் இவ் “இன்” தமிழிலே தெலுங்கிலேயன்றி மலையாளத்திலே கன்னடத்திலேயின்று. முற்றுவினைகட்கு அடி வினையெச்சமேயென்றல் தமிழ் மொழிக் குல முழுதிலும் தோற்றுகின்றதோர் ஒழுங்காதலால், வினையெச்ச உருவங்களைக் கொண்டும் அவற்றினின்று பிறந்த இறந்தகாலத்து முற்றுவினையுருவங்களை அறியலாமன்றோ? இக்குறிப்பின் வழி ஆராயுமிடத்து, இன்விகுதி கொண்ட வினையெச்சங்கள் யாண்டுமில. உ-ம், வினைப்பகுதி ஆட்டு, வினையெச்சம் ஆட்டி; ஓடு, ஓடி என வரும். மலையாளத்தில் ஆட்டி, ஓடி என்பன வினையெச்சமும் முற்றுமாகின்றன. வினையெச்ச உருவத்தோடு அகரஞ்சேருமிடத்து பெயரெச்சமாதல் இருமொழிக்கண்ணும் வழக்காம். எங்ஙனம்? ஆட்டி, ஆட்டிய, ஓடி, ஓடிய. இவற்றைக்கொண்டு இகரமே இறந்தகாலங் காட்டுவதெனவும், இன் என்னும் இடைநிலையின் ஈற்று னகரம் இடைப்பிறவரலாமெனவும் தோன்றும்.

ஆதலின், தகரம் இகரம் எனும் இரண்டுமே இறந்தகால இடைநிலையென்பது பெற்றாம். இவற்றுள் தகரம் கன்னடத்தில் து, இது, உது என வினையெச்சங்களிற் பயில்வது. உ-ம், பாழ்-து=வாழ்ந்து. (பாழ்து என்பதில் பகரம் ம்ப என உச்சரிக்கப்படுவது.) இத்துவ்வின்

முன் உச்சாரண லாகவத்தின் பொருட்டு இகரம் சேர்ந்தும் வரும். எங்ஙனம்? பாழ்து, பாழிது எனவாகும். இது பூர்வ கன்னடவழக்கு. ஆயின், நாடோடிக் கன்னடத்தில் பாழிது என்பது பாழி என நின்றுவிட்டது. விட்டதனால் இகரமும் இறந்தகால விகுதியாமென இலக்கண நூலோர் ஆட்சிசெய்யலாயினார். தெலுங்கில் துவ்வன்று இகரமே இறந்தகால இடைநிலையாகின்றது. உ-ம் பகுதி, நடசு; வினையெச்சம், நடசி என வருவது. ஆயினும் முற்று வினைக்கண் இகரம் இன் எனவும் இதியெனவும் வரும். உ-ம் நடசினானு, நடசிதினி.

இவ் ஆராய்ச்சியில் வெளிப்படுவது யாதெனில், "து" இடைநிலைதான் ஆதியில் இறந்தகாலங் காட்டிநின்று பின் இகரமாகியும் அவ்விகரத்தோடு உச்சாரண னகரம் சேர்ந்தும் வந்ததாம். தமிழ் வினையெச்சங்கள் பல "செய்து" என்பதிற்போல துவ்வீறு உடையன என்பது ஒருதலை. தெலுங்கில் இகரத்தையடுத்துவந்த தகரம் (நடசி-த்-இனி), ஆதியில் இறந்த காலங் குறித்த தகரமே, மீண்டு தோற்றியதுபோலும். தமிழிற் பயிலும் இன் விகுதியின் னகரமும் ஆதித் தக்ரமாகலாம். அங்ஙனமாயின், போயினான் என்புழி போது + ஆன் = போதி–ஆன் = போ-இ-தான் = போயினான் என வந்திருத்தல் கூடும். "போயினான்" பரவை வழக்கில் போனான் எனவரும். இங்ஙனம் ஆனான் என்பது ஆ(கி)து + ஆன், ஆதி + ஆன் = ஆ-இ-தான் ஆயினான் என விகாரப்படும். இலக்கியத் தமிழில் போதி (புகு-த்-இ) ஆதி (ஆகு-த்-இ) எனும் முன்னிலை யொருமை உருவங்களும் உண்மை பிரசித்தம். கன்னடத்தில் போதி ஆதி என்பன இன்றைக்கும் நிலவுகின்றன. அப்பால், தகரம் னகரமாதல் எந்தமிழிற்போலப் பிறமொழிகளிலும் கண்டதோர் இயல்பன்றோ.





ஆகவே த் ட் ற் இன் என்பன இறந்தகால இடைநிலைகள் யாவும் தகரமொன்றில் அடங்குவன. இத்தகரம் வினையெச்சங்களில் துவ்வென நிற்கின்றமையையும் கண்டாம். இதன் பிறப்பு வரலாறியாது? அது துவ்வீறாய் வரும் வினையெச்சங்களில் தோன்றுகின்றது போலும். செய்(அ)து செய்து என வந்திருத்தல் கூடாதா? அங்ஙனமாயின், ஓடி என்றற்றொடக்கமான பிற வினையெச்சங்களில் இகரம் வந்தமை யாங்ஙனம் என ஓர் ஐயப்பாடு நிகழல் கூடும். ஆதியில் "அது" என நின்ற விகுதி, பின் சொன் முதல் உயிர்கெட்ட காலையில் "து" என நின்று, இலேசாய் ஒலித்தலைநோக்கி உகரம் இகரமாகி "தி" எனவந்து, அப்பால் அவ்வுயிர்மெய்யின் தகரமும்போய் இகரமாத்திரையாய் நிற்றல் சாலுமே எனச் சமாதானம் செய்க. (Cf. Caldwell, pp. 511-2) இதற்கு, முன் எடுத்தாண்ட உதாரணங்களைக்காண்க.

இனி "அது" எவ்வாறு இறந்த காலங் காட்டலாயிற்றெனில், இவ் அது எனுஞ் சொல் இடைக்காலவழக்கில் தூரத்துச் சுட்டன்றோ? நிகழும் யாதோர் வினை, அடிக்குள் நடப்பதன்று, தூரத்திலுள்ளதெனக் காட்டுமுகத்தால் அவ்வினையை "அது" எனச் சுட்டி துலையிடத்ததாக்கினார் போலும் இடைக்காலத் தமிழ் மாக்கள். எங்ஙனம்? செய்-அது-யான் என்புழி, செய்தலாகிய வினையைத் துலையிட்டகாலததில் (முன்னே) இயற்றியோன் யான் எனும் பொருள் கொண்டு செய்-த்-ஏன் செய்தேன் எனும் வினைமுற்றெழுந்தது. வினைமுற்றுக்கள் பிரதிப்பெயரோடுகூடி இயலாதிருந்த காலத்தில், யான் எனுஞ் சொல் ஈற்றில் சேராது, செய்து எனல் மாத்திரையாய் நின்றது. இதுதான் வினையெச்ச உருவமுமாம். இங்ஙனமே போ(ந்)த்–ஏன், போது ஆதியனவும் என்க. போது என, வினையெச்சமும் முற்றுமாய் ஆதியில் நின்ற உருவம் புகு–அது

என்பதின் குறுக்கமாம். குறுகியதாகிய போது எனும் உருவம் போந்தேன் என ஒருபாலும், (போதி, போ-இ) போயினேன் என ஒருபாலும் நின்று, இகரமும் "இன்" னும் நாளடைவில் இறந்தகால இடைநிலையாய் வந்திட்டமைக்கு நல் எடுத்துக்காட்டாகும் எனக் காண்க.

தமிழ்த் தகர இடைநிலையே ஆரியம் ஆதிய மொழிகளிலும் ஆங்காங்கு இறந்தகாலங்காட்டி நிற்பதாயின் தமிழ்மொழியின் தொன்மை மிக்க ஏற்றம்பெறும். ஆரியத்தில் சென்றகால வினைமுற்றிலன்று அக்காலத்தை உட்கொண்ட எச்சங்களிலே தகர இடைநிலைபயிலும். (எச்சங்களே முற்றுக்கட்கு முன்னவையென்றலை இங்கு மனத்திற் தரித்துக்கொள்க.) எங்ஙனம்? கம், க-த (Gatas) போயின, பூ, பூ-த (Bhutas) உண்டான எனவரும். இத, ந எனும் இறந்தகால வினையெச்ச விகுதிகளும் தகர விகுதியின் மரூஉக்களேயாம். (Whitney § 956-7) இதற்கு ஓர் நற்சான்று, சிலச்சில ஆரிய வினையெச்சங்களிற் பழைய தகரமும் அதன் மரூஉவாகிய நகரமும் மாறி நிகழ்தலாம். உ-ம் ப்றீ எனுமடியிலிருந்து பூர்ண, பூர்த்த=நிறைத்த; நுத் எனுமடியிலிருந்து நுந்ந, நுத்த=உந்திய. அப்பால் நகரம் லகரமாய்த் திரிந்துநிற்றல் வடமொழியில் மாத்திரையன்று சிலவோனிக், ருஷியம் எனும் மொழிகளிலும் காணப்படுதலைக் குறிப்பிட்டார் Beames என்பாரும் (III 136). சிங்கள வினையெச்சங்களின் லா ஈறுமிது. உ-ம் கற, கறலா=செய்து.

இங்ஙனமே, தவத், த்வா எனும் ஆரிய விகுதிகளிலும் இறந்தகாலங் காட்டும் தகரம் வழங்கும். உ-ம் க்று-தவத், க்று-த்வா, செய்த, செய்து. வினையெச்ச விகுதியாகிய த்வா, சில்லிடங்களில் த்ய எனவும் ய எனவும் நிற்கும்; ஆகத்ய, ஆதிக்றுத்ய, அநுசாஸ்ய என்பனவற்றிற்போல





இத் த்வா பின்னும் ஆரிய பாகதங்களில் த்வான, த்வானம், யான, யானம், தூன, தூனம், ஊன, ஊனே, ஊனம் எனவும் வந்திட்டது. (Beames) அசோக கல்வெட்டுக்களில் இது தமிழிற்போல "து" என்றுமட்டும் இருத்தல் நோக்கத்தக்கது. "து" அச்சாசனங்களிற்றானே ச்ய (த்வா), ச எனவும் மாறிவிட்டமை, "து" விகுதியே முற்பட்டது என்பதற்கு ஓர் சான்றாகும்போலும். அசோக சாசனங்களில் பிரசைகள் தெரிந்துகொள்ளத்தக்க நாடோடி மொழியே எடுத்தாளப்பட்டிருக்கும் என்பதையும், கிரந்தங்களில் ஏறிக்கொண்ட மொழியைக்காட்டில் அதுதான் பன்முறையும் அதிபூர்வமான சொல்லுருவங்களைக் காட்டுவதாகும் என்பதையும் உற்றுநோக்கும்போது, "து" பிரத்தியயத்தின் பழமை தெளியப்படுமன்றோ. அப்பால் "ச்ய" சவுரஸேநிய பாகதத்தில் இய என மாறி இய் ஆகத் திரிந்து, தற்கால வட இந்திய மொழிகளில், இ, ஈ, ஈன, ஈன், இனீ, இன் எனப் பலவிதமாய் நிற்கின்றது (ஸவாமிநாதய்யர், p. 32) இப்பரிணாம முறை தமிழ்த் துவ் விகுதி இகரமாய், இன்னாய் வந்திட்ட முறையை ஒத்திருத்தல் காண்க.

ஆரியத்திற்போல அக்குலத்துப் பிறமொழிகளிலும் தகர இடைநிலை, எச்சங்களில் செல்காலங் காட்டும். உ-ம் கிரேக்கம் Gno-t-os; லத்தீன் (G)no-t-us, = அறியப்பெற்ற, ஆகியன காண்க. ஆயின், ஆங்கிளத்தில் Did என்றதின் மரூஉவாய், இறந்தகால வினையுருவங்களின் விகுதியாய் வரும் d இந்த தமிழ் துவ்வொடு சம்பந்தப்பட்டதன்று என பிஷப் கால்டுவெல் பண்டிதர் காட்டியுள்ளார் (p. 510). Did என்பதிலுள்ள ஈற்று d, Do என்னும் பகுதியை இரட்டலால் வந்ததென்ப. இவ்வாறு பகுதி இரட்டலால் ஆரியத்தில் பெரும்பான்மை நிகழ்கால வினைகள் சென்றகாலங் காட்டும். இம் முறை தமிழிலும் சிறுபான்

மையுண்டு. ஆயின் இவ் இரட்டல் ஆரியத்திலும் தமிழிலும் ஒருபடித்தன்று. முந்தியதில் வினைப்பகுதியின் முதலசை இரட்டும், பிந்தியதில் ஈற்றசையின் மெய்யிரட்டும். உ-ம் ஆரியத்தில் பட்=படி எனும் வினை படதி=படிக்கின்றான் பபாட=படித்தான் என வரும். தமிழில் படு=துன்பம் நுகர் என்பது படுகிறான் (நிகழ்வு) பட்டான் (இறப்பு). இவ்வாறே புகு, புக்கான், பெறு, பெற்றான் ஆதியன வரும். கன்னடம் தெலுங்குகளிலும் இதனைப்போன்றதோர் வரன்முறையைக்காணலாம். (Caldwell, pp.496-7)

## எதிர்கால இடைநிலை

எதிர்கால இடைநிலை யவ்வே, வவ்வே, ககரமாதிய மெய்களூர்ந்து வரும் உகரமே, உம்மையேயெனக் கூறினார் நன்னூலார். (பவணந்தி, பத. 144-5) இவையாவும் உகரத்துள் அடங்குவன எனவும், இவ் உகரம் கடைக்குறைந்துநின்று தொழிற் பெயர் விகுதியாயிற்றென யாம் குறித்த (63-ம்பக்.) "உள்"எனும் சொல்லே எனவும் கொள்ளலாம். கொள்ளுமிடத்து, நடப்பான் எனும் எதிர்கால வினைமுற்றில் நடப்பு என்பது பகுதியும், ஆன் (அவன்) எனும் பிரதிப்பெயரானது விகுதியுமாகும்; இது இலக்கண நூலோரது பவ்விடைநிலை. உய்வான் எனும் வினைமுற்றில் உய்வு பகுதியும் ஆன் விகுதியுமாம்; இது வவ் இடைநிலை. இவ்வாறே உகரவீறும் உம்மையீறுங்கொண்ட இடைநிலைகள் யாவும் தொழிற் பெயரைக்காட்டும் "உள்" சொல்லின் கடைக் குறையாகிய உகரமே என்க. உ-ம் சேறு (செல்–உ); வருது (வடி–உ); உண்கு (உண்–உ); சேறி (செல்–இ; இங்கு உகரம் இகரமாயிற்று) கடைக் குறைந்த உள் விகுதி சொன்முதல் மெய்பெறும் பான்மையை 63-ம் பக்கத்துட்காண்க. (Cf. Caldwell, p. 516) "உம்" இணைந்து "செய்யும்" என்றற்றொடக்கமாய் நிற்புழி





அவ் உம்மையும் உள் என்பதன் விகாரமாம். உள்=உறுவது, பொருந்துவது. இவ் உம்மையும் நன்னூலார் கூறும் எட்டு வகை உம்மையும் ஒன்றே எனவும், இது எவ்விடத்தும் உள்-(உறுதல், பொருந்துதல்) எனும் சொல்லின் திரிபே எனவும் நுனித்து அறிக.

செந்தமிழிற் செய்யும் ஆதியன சில எதிர்கால வினைமுற்றுக்கட்கு செய்கு எனும் ஒரு உருவமும் காணப்படுகின்றது. இது பிற்காலத்து செய்கேன், செய்வேன் என வந்தமையைக் கொண்டு "உள்" சொல்லின் திரிபாகிய ஆதி உகரமே இசைநிறைநோக்கி ககரமாதிய மெய் முதலும் பெறலாயிற்றென்க. செந்தமிழ் வான், பான், பாக்கு என்பன எதிர்கால வினையெச்ச ஈறுகள், அது (அல்) எனுஞ் சொல்லின் மரூஉக்களாம். "அது" அல், அன், என்றாகி பின் உயிர் நீண்டு ஆன் எனவந்தது என்க. (Cf. Caldwell, p.578) அது, ஆன் ஆவதை பத்து எனுஞ் சொல்லிலுங் காண்க. இருபது, இருபான். இவ்வாறே செய்வது செய்வான் என, உண்பது உண்பான் எனவரல் சாலும். "பாக்கு" உருவம் பான் என்பதின் விகாரம் போலும். இங்கு ஈற்றுகரம் செயற்கு எனும் வாய்பாட்டு வினையெச்சக் குறியென்க. ஓட்ர மொழியிலும் இவ்வித வினையெச்ச முடிபொன்றுளது. ஹஸிப்பாகு=உட்காரும் பொருட்டு, தேகிபாகு=பார்க்கும்பொருட்டு (ஸ்வாமிநாதய்யர், 32-ம்பக்கம்)

இதுகாறும் "உள்" சொல்லின் ஈறு கெட்ட நிலையாகிய உவ்வே தமிழ் எதிர்கால இடைநிலையாயிற்று எனக் கண்டாம். ஒத்த பிறப்புடைமையால் "உ" என்னுமொலி எளிதின் வகரமாதலுண்டன்றே. (17-ம் பக்கம்) வகரந்தான் தமிழில் பெரும்பான்மை எதிர்காலங் காட்டுவதுமாம். ஆதலால் உகரத்திரிபாகிய வவ்வே பகரமாதிய

எதிர்கால இடைநிலைகட்கெல்லாம் அடிப்படையெனக் கொள்ளத்தகும். இவ்வூகம் கன்னட, துளு மொழிகளுள்ளும் வகரந்தான் மிக்கு வழங்குதலானும் வலியுறுத்தப்படும். வகரந்தான் ஆரிய பாகதங்கள் பலவற்றிலும் பிற மொழிகள் சிலவற்றிலும் எதிர்காலக் குறியாய் இயலுதலும் இங்கு நோக்கற்பாற்று. வங்காளம், ஒறியம், போஜ்புரி இந்தி எனும் மொழிகளில் b என உச்சாரணமடையும் வகரமே எதிர்கால இடைநிலையாகும். உ-ம் வங்காளம், றாக்கிவ்; ஒறியம், றாக்கிவி, போஜ்புரி இந்தி றாக்கவ்=காப்பேன். இவ் b அல்லது bo லத்தினிலும் எதிர்காலங் காட்டும். உ-ம் Ama-bo=அண்ணிப்பேன் (இங்கு அண் எனும் தமிழ் அடியின் மற்றொரு உருவமாகிய அம், Am-o எனும் லத்தீன் சொற்கு அடியாயிருத்தலையும் நோக்குக) பின்னிஷ் அங்கேரிய மொழிகளிலும் வகரம் எதிர்காலப்பொருட்டாய் நிகழும் என்பர் பிஷப்கால்டுவெல் (p. 520). ஆயின் பீம்ஸ் எஸ்பார் ஐரோப்பிய மொழிகளில் பயிலும் எதிர் கால வகரம் ஆரிய தவ்ய எனும் எச்சத்தின் திரிபென்றார். (Beames, III 158) அது பொருந்தாது. இத் தவ்ய எச்ச இறுதியும் ஆரியத்து து, தும் எனும் செயவெனெச்சக்குறியின் விகாரமேயாதலானும் (Whitney, § 964) "து" தய என ஒந்திடாமல் தவ்ய என வகர இடையீடு பெற்று வந்ததற்குக் காரணம் சொல்லவேண்டியிருத்தலானும் அத் தவ்ய பிரத்தியத்திலும் எமது எதிர்கால வகரமே இலங்குதல் காண்க.



# ஒன்பதாம் அதிகாரம்

## Infinitive, Benedictive and Negative Forms

## செயவெனெச்சம், வியங்கோள், எதிர்மறை

முக்காலத்திற்கும் பொதுவான செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்து இறுதிக்கண் நிற்பதும் அகரச்சுட்டேயாம். "உழச்சென்றான்" என்னுமிடத்து உழுதலாகிய அதனை நோக்குதல்தான் உழ என வந்தது. இவண் அகரம் உழுதலாகிய செயலை வலியுறுத்துச் சுட்டுவதாயிற்று. செய என்னும் எச்சத்து "அ"வ்விறுதி அல் என உருமாறி "செயல்" எனும் தொழிற் பெயரின் விகுதியாம். செயல்=செய்வதாகிய அது. இங்கு "அல்" அது என்பதற்கு இணையான சுட்டேயாம். உண்மையில் செய என்னெச்சமெல்லாம் ஆதியில் அல் எனும் உறுதிச் சுட்டையே விகுதியாய்ப் பெற்றிருந்ததெனக் கோடலுமொன்று. (ஸ்வாமிநாதய்யர், 30-ம்பக்.) ஆடத்தொடங்கு என்பது ஆடல் தொடங்கு என்பதன் மறுஉருவமே ஆதல் உணர்க. அப்பால் செய என்னும் வாய்பாட்டுள் அடங்கிய "ஆக" எனும் வினையெச்சம் "நன்றாக" என்ற உதாரணத்திற்போல வினையுரிச்சொற்கட்கு (Adverbs) இரண்டாமுறுப்பாகி நிற்கும். அதன் ககரம் யகரவொற்றாக மெலிந்து ஆய் எனவும் வரும். நன்றாக, நன்றாய்.

### வியங்கோள்

இனி, செய எனும் வினையெச்சத்து இறுதி அகரச் சுட்டே மரியாதை ஏவல், வியங்கோள் எனும் பொருண்மையிலும் பயில்வது. வர என்னுமிடத்து வரக்கடவீர்

எனும் மரியாதை ஏவலாம். "வரம்பு உயர" எனுமிடத்து நீரணை உயரக்கடவது எனும் வியங்கோளாம். ஆக எனும் வினையெச்சம் "அருளாய்" என்றதிற்போல ஏவலும் "செய்வேனாக" என்றதிற்போல வியங்கோளுமாம். எமது "ஆக" விகுதி தெலுங்கில் "காக" எனவரும். அப்பால் ஏவல் வியங்கோட் பொருட்கள் கொள்ளும் அகரம், ஒருபுடை தன்வலியுறுத்த உருவமாகிய அல் என நின்று உடன்பாட்டு வியங்கோள் விகுதியாகும். "மக்கட்பதடியெனல்" (குறள் 196) இவ் "அல்" வியங்கோள் விகுதியே கன்னடத்தில் அலி எனவும் தெலுங்கில் அநீ எனவும் வந்திட்டதாம். இனி ஒருபுடை எம் அகரச்சுட்டு ஓசைநயத்தின் பொருட்டு ககர மெய்ம்முதல்பெற்று "க" எனவும் நிற்கும். இங்ஙனம் வாழ என்பது வாழ்க என வரும். உயர என்பது உயர்க என வரும். வாழிய என்பதிற் ககரம் யகரமாய் மெலிந்து நின்றது. அவ் "இய" தான் இ எனவும் இயர் எனவும் வருவதென்க, வாழி, வாழியர். தன்னகத்தே அமைவுடைத்தாய் விளங்குகின்ற இத்தமிழ் வியங்கோளோடு ஆரியத்தின் ஈய, ஈதாஹ, ஈத ஆதிய மூவிடத்து ஏவல் விகுதிகளையும் ஒப்புநோக்குக.

இனி, கடவேன், கடவாய், கடவன் ஆதிய விபத்தி உருவங்களையுடைய வினைச்சொல் எவ்வாறு எழுந்ததெனப் பரிசோதித்தல் தகும். அகரச்சுட்டு "ட"வ் வியஞ்சனத்தோடு விளங்கி உச்சாரண உகரம் பெற்று அடு என நின்றஞான்று கொண்ட அர்த்தங்களுட் "சேர்த்தல்" ஒன்றெனக் கண்டாம். (9-ம் பக்கம்) இவ் "அடு", உறுதிப்பாடு நோக்கி, ககர வல்லின மெய் முதலும் டகர ஒற்றிரட்டலும் உற்று கட்டு என்றாகி, இறுகச் சேர்த்தல் எனும் அர்த்தத்தினை அடைந்தது. அப்பால் "கட்டுதல்" கடம், கடன் என நின்று யாவரொருவரோடே யாதொன்றோடே பந்திக்கப்பட்ட நிலையை உணர்த்துவதாயிற்று. "கிழவோட்சுட்டிய தெய்வக்கடத்தினும்" (தொல். பொரு. 150)





இங்கு கடம் கடனே; கடமையும் கடப்பாடும் அது. கடம்படுதல்=கடப்பாடு என்பது. இதனானே "கடவன் பாரி கைவண்மையே" எனும் புறநானூற்றுத் தொடைக்கு (106) "பாரி கைவண்மை செய்தலைக் கடப்பாடாகவுடையன்" எனும் பொருள்வரலாயிற்று. "யான் செய்யக் கடவேன்" என்புழி செய்தல் என் கடப்பாடாயுள்ளது என்றதாகும். இவ்வாறே நீ செய்யக்கடவை அவன் செய்யக்கடவன், அது செய்யக்கடவது என வரும். அப்பால் கடப்பாடு "தகுதி", "உரிமை" எனத்திரிந்த அர்த்தத்தில், வாழக்கடவாய் என்றது வாழல் உனக்குத் தகுதியுற்று உரிமையாக என்னும் வியங்கோட் பொருள் தோன்றியதென்க.

எமது கடவது எனுஞ் சொல்லும் ஆரிய பாகதங்களில் வரும் கடவியெ எனும் சொல்லும் ஒலி அளவில் ஒத்திசைப்பினும் உற்பத்தியில் அவ்வாறன்று. ஸ்ரீ ஸ்வாமிநாதய்யர் எடுத்துக்காட்டிய அசோக சாஸனத்தில் நொபி ச ஸமாஜெ கடவியெ என எழுதியிருப்பது சமஸ்கிருதத்தில் ந அபி ச ஸமாஜே கர்த்தவ்ய என்பதின் மறுஉருவமாதலால், எமது "கடவது" உருவம் அதுதான் எனத் துணியற்பாலதன்று. "கடவது" எனுந் தமிழ்ச் சொல்லின் பிறப்பு தமிழ்ச் சொல்லடிகளோடு நன்குபொருந்தி அமைவு பெற்றிருக்கின்றமையை ஓர்புறத்தும், தமிழ்ச் சொற்கள், பாகதச் சொற்களைமான தேய்ந்து, குறைந்து உருமாறாது, இனிது தீட்டிய சித்திரப்படங்களேபோல, பேச்சொலி விதிகட்கேற்ப உருப்பெற்று நிற்கின்றமையை ஓர் புறத்தும் வைத்து நோக்குமிடத்து, இரவல்கொண்டோர் நாங்களல்லம் என்பதூஉம், "கடவது" கட்டுதல் எனும் எங்கள் துவிதீய சொல்லடியினின்று போந்த சுத்த தமிழ்ச் சொல்லென்பதூஉம் நன்றாகத் துணியப்படும்.

இரவல்வாங்கியது ஓர்வேளை ஆரிய மொழியேயாகலாம். அதெவ்வாறெனில், கர்த்தவ்யச் சொற்கு "க்று" அல்லது "கர்" ஆரியத்தாதுவாம். இக் "க்று" அன்றேல் "கர்" தாது எவ்வாறு வந்துற்றது? அதற்கு ஒன்றில் கெய் (செய்) அன்றேல் "கட்டு" தானே தோற்றுவாய் எனல் அமைவுடைத்தாகாதா? கெய் என்பது கிளத்துச் செய்யும் பிரயத்தனத்தைக் குறிக்கின்ற "எய்" என்னும் அடியின் வலியுறுதத உருவம் என முன்னரே காட்டினும். "கெய்" அடியின் யகர வியஞ்சனம் தன்னோடடுத்த பிறப்பினையுடைய ரகரமாக விகாரப்படுவது அசம்பாவிதமாகாது. ஆதலால் கெய் உருவம் கொர், கிர், க்று, கர் என ஆகியிருத்தல் சாலும். ஆரியர் எமது நெகிழொலி எழுத்துக்களை ரகரங்கூட்டி உச்சரிக்கும் ஓர் மனப்பாங்குடையவரென்பது அன்னோர் "தமிழ்" என்னும் பதத்தை த்ரமிள எனச் சொல்வதாலும், வளை, வட்டம் எனும் தமிழ்ச் சொற்களை வ்று, வ்றுத்தம் என ஆக்குவதாலும் புலப்படும். எம்மனோர் ஆரிய தேசச் சொல்லை "திரேகம்" என்பதூஉம் இவ்வாறானதோர் ஒலிமாற்று நயத்தினைக் காட்டும். இவ்வாறு "கட்டு" எனும் எமது மிகுமுயற்சியைக் காட்டுகின்ற சொல், வலிகொண்ட உச்சாரணத்தையே பெரும்பான்மை மேற்கொண்டுள்ளோரான ஆரியரின் வாயிற் கர் என வரல் அபூர்வமன்றே. இந்நூலில் யாம் பலவிடத்துங் காட்டியாங்கு எம் தமிழ் மொழியின் அடிகள் மொழியுற்பத்தியாகின்ற இயற்கை முறையைத் தழுவி ஐயந்திரிபற நிச்சயிக்கப்பட்டுள்ளன. எம் சொல்லடிகள் எல்லாம் இன்றைக்கும் எம் மொழியில் நிலவுகின்ற தனிச் சொற்களேயாம். ஆரியர், ஆதியோர் கூறுகின்ற தாதுக்களோ பெரும்பான்மை அவர் மொழியில் வழங்குஞ் சொற்களாகாமல் மனோகற்பனை மாத்திரையாய்க் கிடக்கின்றன. ஆகவே, தமியவாய் (தனியாய்) நிலை பெறுகின்ற தமிழ்ச் சொல்லடிகள் பிற மொழிகட்குத் தாயாயினமை ஒக்குமாயினும்





அம் மொழிகளின் கற்பனா ரூபமான தாதுக்கள் தமிழ்ச் சொற்கட்கு உற்பத்தி தந்தன எனல் எவ்வாற்றானும் ஒவ்வாதென ஒதுக்குக.

இவ்வாறே இருக்கட்டு ஆதியனவாக உலக வழக்கில் வரும் அட்டு, அட்டும், அட்டே என்பன ஆரியப் பாகதங்களின் "கட்டு, கிடு, கட்டம், கட்ட" என்பவற்றிலிருந்து உண்டாயினவல்ல, தமிழ் "ஒட்டு" எனும் வினைச்சொல்லின் மரூஉக்களாமெனக் கொள்க. "ஒட்டுதல்", ஒல்லுதல், ஒன்றுதல், ஒன்னுதல் எனும் உருவங்களைச் சார்ந்தது. இவை பொருந்தல், சேர்தல் எனும் பொருளுள்ளவை; உள் (உறுதல்) எனும் அடியாய்ப்பிறந்த துவிதீய சொல்லடிகள். ஒட்டுதற் சொற்கு உள்ள "பொருந்தல்", "தகுதியாதல்" எனும் அர்த்தத்தை "பருவத்தோடொட்டவொழுகல்" எனும் குறளிற் காண்க. (482) ஒண்ணாது எனும் உலகவழக்கும் ஒட்டாது என்பதும் ஒன்றே. இனி இவ் அர்த்தத்திலிருந்து "ஒட்டுதல்" சம்மதித்தல், இடங்கொடுத்தல் எனவும் பொருள்கொண்டது.— "ஒட்டேனரசோடொழிப்பேன் மதுரையும்" (சிலப். 21, 37). ஆதலின், இருக்க ஒட்டு எனில், "இருக்க இடங்கொடு, சம்மதி" என்றாகும். இதுதான் இருக்கட்டு ஆதியனவாய் வந்ததென்க.

## எதிர்மறை

இனி, வினைகளினும் பெயர்களினும் எதிர்மறை உருவம் எழுந்த வரலாற்றினையுங் கூறுதும். உடம்பாட்டில் கேவலம் வினைச்சொல்லடியே ஏவலுருவமுமாதலால் அது ஈண்டு நோக்கற்பாற்றன்று. உதாரணம்: நட, வா, மடி ஆதியன. இங்கு ஆராயற்பாலதான எதிர்மறையுள் வினைச்சொல் நடவேன், நடவாய், நடவான், நடவாத, நடவா என வருவதாம். இவற்றில் வினைப்பகுதியும் விகுதியும்

இடைநிலை யாதுமின்றி நிற்றலே எதிர்மறையாகின்றது. நட-க்கின்றேன், நட-ந்தேன், நட-ப்பேன் என்பன கின்று, த், ப் என்னும் இடைநிலைப்பேற்றால் நிகழ்கின்ற, சென்ற, வருங்காலங்களைக் காட்டும் உடம்பாட்டு வினையுருவங்களாகின்றன. நட(வ்)ஏன் என்புழி காலங்காட்டும் இடைநிலை பெறாமையால் எதிர்மறைப் பொருள் ஏற்படுகின்றது. நடவாத, நடவா, எனும் எச்சங்களும் நடவா—அது நடவா—அவை என்னும் வரலாறுள்ளவையாதலால், அவ்வெச்சங்களுள்ளும் காலங்காட்டும் இடைநிலைப்பேறு இன்றாகும். ஆதலால், காலம் காட்டாமைதான் எதிர்மறைப் பொருட்குத் தோற்றுவாயாயிற்றென்போமா? அற்றன்று. தமிழ்ப் பாகதமாகிய தெலுங்கை ஆராயுமிடத்து, இடைநிலைபெறா இவ்வுருவங்கள் ஆதியில் "அ" எனும் எதிர்மறைச் சொல் இடைப்பெற்று இயன்றமை வெளிப்படும். தெலுங்கில் சேய்-அ-னு, சேய்-அ-வு சேய்-அ-மு, சேய்-அ-று என்பன தமிழின் செய்-யேன், செய்-யாய், செய்-யோம், செய்-யீர் என்பனவற்றிற்கு இணையாம். இவ்வாறே செய் என்னும் அடியின் எதிர்மறை வினையெச்சம் தெலுங்கில் சேய்-அ-க எனவும், பெயரெச்சம் சேய்-அ-னி எனவும், தொழிற்பெயர் சேய்-அ-மி எனவும் நிற்கின்றன. இவை முறையே செய்யாது, செய்யாத, செய்யாமை என்னும் தமிழுருவங்கட்குச்சரி. (Cf. Caldwell, p. 470) ஆதலால் தொடக்கத்தில் செய்-அ-ஏன் செய்-அ-ஆய், செய்-அ-ஓம், செய்-அ-ஈர் என நின்றன, உச்சாரணத்தில் செய்யேன் ஆதியனவாய் மாறின எனக் கொள்க. செய்யாது என்பது செய்-அ-அது என்னுஞ் சொற்றொகுதியின் திரிபே. ஈண்டு ஈற்றில் நின்ற "அது" எனும் சுட்டு உறுதிப்பாட்டின்பொருட்டு எழுந்தது. செய்யாமை எனும் உருவத்தில் அமைந்த "மை" விகுதி முன்னர் மல் என நின்றிருத்தல் வேண்டும். "மை"யே மல் ஆவ





தாயின் லகரவொற்று அவசியமின்றிக் கூட்டுற்றதாகும். "மல்" தெலுங்கில் "மி" என, கன்னடத்தில் "ம" என, தமிழில் "மை" என வந்திட்டதென்றல்தான் ஒலிமாற்று விதிகட்கு ஒப்பாகும். மல் விகுதியின் உற்பத்தியை முன்னரே காட்டினும். ஈண்டு, செய்யாது எனும் வினையெச்சந்தான் செய்யாதே, செய்யாதீர் என வந்திட்டது எனக் குறித்தல் தகும். முந்தியதில் ஏகாரம் தேற்றத்தின் பொருட்டு. அது எகரச் சுட்டேயாம் என ஏலவே தெரிவித்தாம்.

இனி, செய்யேன் ஆதிய எதிர்மறை உருவங்களில் அகரம் எதிர்மறைச் சொல்லாதல் யாங்ஙனம்? இவ் அகரம் "அல்" எனும் சொல்லின் குறுக்கமாம். அய் எனும் முதலடியினின்று பிறந்த அஃகு-தல் எனும் சொல்லை நோக்கினுமன்றோ. (17-ம்பக்கம்) இவ் அஃகு-தலின் மற்றொரு உருவம் அல்கு-தலாம். அல்குதல்=சுருங்குதல், குறைதல், அழிதல். அல், குறைந்தது=(ஒளி) அழிந்தது=இரவு. அன்மை=அல்லாமை. அன்று (கன்னடத்தில் அல்லது, துளுவில் அத்த்,)=அல்லது. அல்-வழி=வேற்றுமையில்லாமை. இவ் "அல்" பதத்தின் திரிபே "இல்" பதமுமாம். இது இன்மை, இன்று, இல்-பொருள் எனவரும். இவ்வாறான "அல்" தான் செய்யேன் ஆதியவற்றில் எதிர்மறைக் குறிப்பான அகரமாய் ஓர்கால் நின்றமை பண்டைத் தமிழின் உதாகரணங்களாற் றெளிவாகும். பேசலேம் (பேசு-அல்-ஏம்)=பேசேம்; உண்டிலேன் என்பதில் "அல்" இல்லாயிற்று. செய்(க்)அலாதார்=செய்யாதார். அறி(க்)இலீர்= அறியீர். மாற்றலன் = மாற்றான். செல்லல்=செல்லாதே. செல்லேல் என்பதில் "அல்" ஏலாயிற்று. செய்யற்க (செய்-அல்-க)=செய்யாதே. இங்கு ககரம் வாழ்க என்பதிற் போல வந்தது. ஓராஅல்=ஒருவரீதே (தொல். சொல். 443). இங்கு அல் ஆஅல் என நீண்டது.

செய்யன்மின் (செய்-அல்-மின்) ஈண்டு "மின்" சொல், மனார் என்புழிக்கண்ட "மன்" னையொத்தது. அதனை ஆராய்ந்தவிடத்துக் காண்க (54-ம்பக்கம்). ஆல், ஏல், இல் எனவும் நிற்கின்றதாகிய எமது "அல்" எனும் எதிர்மறைச் சொல்லும் அதன் கடைக்குறைந்த "அ" உருவமும் ஆரியத்தில் அ, அந், அலம் என, சாந்தால் பின்னிஷ் மொழிகளில் ஆலா என, ஒஸ்றியாக் மொழியில் இலா என, எபிரேயத்தில் அல் என, கல்தேயத்தில் லா என நிற்றலும் கவனிக்கற்பாற்று. (Caldwell, p. 477)



# பத்தாம் அதிகாரம்

## Tamil Roots in the Indo-Germanic Languages

## பிறமொழிகளிற் தமிழடிகள்

இதுகாறும் கூறிப்போந்தனவற்றால் எந் தமிழ் மொழி அமைப்புற்ற வரலாறு விளக்கமாம். ஆதியில் மிகச் சிலவேயாயிருந்த முதற்சொல்லடிகள் நால்வகைச் சுட்டினின்றும் இலகுவான உச்சாரணம் பொருந்திய வியஞ்சனங்கள் சேர்த்தி இயற்றப்பெற்றன. பின் நெட்டுயிர்கள், வல்லின மெல்லினச் சொன்முதல் மெய்கள், இரட்டித்த ஒற்றுக்கள் ஆதிய உபகரணங்களைக்கொண்டு வழிச்சொல் அடிகள் எழுந்தன. பிரதிப்பெயர்கள், திணைபாலிடங்காட்டும் விகுதிகள், வேற்றுமையுருபுகள், காலம்முதலியன காட்டும் இடைநிலைகளெல்லாம், முன் ஒவ்வோர் தனிச் சொல்லாயிருந்தவைதாம், பின் வெவ்வேறு சொற்களுடன் செறிந்து மருவுண்டு புதுச் சொல்லுருவங்கட்குக் காரணமாயின. ஆயினவிடத்தும், தலைநின்ற சொல்லடிகள்கொண்டமாற்றம் சிறிதேயாதலால், துருவியாராய்வோரெல்லாம் அச்சொல்லடிகளின் ஆதியுருவத்தினை அற்ப சிரமத்தோடு தெரிந்திட வல்லோராகின்றனர். இவ்வாறு, தம் பண்டைய சொல்லடிகளைச் சிக்கலான மாற்றமின்றித் தலையிடத்துக் கொண்டு இயலும் மொழிகளைக் கூட்டுச்சொல் மொழிகள் (Agglutinative) எனப் பெயரிட்டழைப்பர் மேனாட்டு மேதாவிகள். சீனம் முதலிய இத்தகையன. ஆரியம், இலத்தின், கிரேக்கம் ஆதியனமொழிகள் இவ்வாறன்றி விகாரச்சொல்மொழிகள் (Inflexional) எனப்படும். இவற்றின் சொற்கள் பெரும்பான்மை சுய உருவம்

மிகத்திரிந்தும், தலையில் உபசருக்கத்தினுக்கு, கடையில்
விகுதிக்கு இடைப்பட்டும் நிற்றலால் மறைந்தும் கிடப்பன.

இதனானன்றே ஆரியமாதிய மொழிகட்கும் எந் தமி
ழுக்கும் இடையிலுள்ள உண்மைச்சம்பந்தம் தெற்றெனத்
தெரியாது மறைந்துகிடப்ப, ஆரியமாதிகள்வேறு, தமிழ்
வேறு என மயங்கிக் கூறினர் மதிவாணர் பல்லோரும்.
உண்மையில் நிகழ்ந்திட்டது யாதெனில், மானுடவர்க்கம்
அனைத்தினுக்கும் தாய்மொழி ஒன்றே. அதுதான் நால்
வகைச் சுட்டுக்களினடியாய்ப் பிறந்து பலப்பல பிரதம
துவிதீய சொல்லடிகளோடு விளங்கியது; அதுதான், தன்
சொல்லடிகளுட் சில வேற்றுமையுருபுகளாய், காலம்,
இடம், திணை, பால்காட்டும் விகுதிகளாய்மாறி, பிறசொல்
லடிகளைக் கூட்டுச்சொற்களாக்கிவிடுமுன்னும், விவிதகுலங்
கள் தத்தம் உச்சாரண ரீதிக்கு இயைய ஆதிச்சொல்லடி
களைத் தலைபோக்கியோ ஈறு நீக்கியோ உரப்பித் தொ
னித்தோ கனைத்துச்சொல்லியோ மெலித்துக் கூறியோ
பலவாறாய்த் திரித்து வேற்றுமைப்படுத்துமுன்னும் ஒன்
றாய்த் திகழ்ந்தது. எந் தமிழ்மொழியில் ஆதிச்சொல்லடி
கள் பெரும்பான்மை அறைகுறையின்றி நிலவுகின்றன
வாகவே, அவை தாம் ஏனைய மொழிகளின் அடிப்படை
யான சொற்பகுதிகளின் உண்மையுருவமாதல்வேண்டும்.
அம்மொழிகளின் பண்டைச் சொற்களை நுண்மதியால்
ஆராய்ந்து ஒப்புநோக்கிக்காண்பது உண்டாயின், யாங்கூறி
யது மெய்யுரையாகாமற் போகாது என்பது எமது
துணிபு.

ஆதிமொழியில் ஒருபொருள் விளக்கப் பல சொல்லடி
கள் இருந்தமை ஒக்கும். இவ்வாறே அயக்குதலும் இயக்
குதலும் செலுத்துதலும் என மூவேறு சொற்களும்
மூவேறுவகையாய் எழுந்துவந்தன, போக்குதல் எனும்





ஓர் அர்த்தத்தினையே காட்டின. அயக்குதல் அய எனும்
அடியினின்றும், இயக்குதல் இய, (இறங்கு) எனுமடியி
லிருந்தும் வந்ததைக் கண்டாம். செலுத்துதல் "எல்"
(எழு) எனுமடியிலிருந்து வல்லின மெய்முதலால் உறுதி
யடைந்துவருவது. இனி மொழிகளுள் ஒன்று "அய"
அடியாய்ச் சொல்லுருப்படுத்த, மற்றொன்று "இய" அடி
யாய்க்கிளவியாக்க, இன்னுமொன்று "எல்" அடியாய்ச்
சொல்லியற்றுமாயின், மேலெழுந்த வாரியாக நோக்கு
வோர்க்கு அம்மொழிகள் மூன்றும் வேறுவேறெனத்
தோன்றுமன்றோ? இவ்வாறே தன்மை ஒருமைப் பிரதிப்
பெயர் தமிழில் யான் என்றிருப்ப, ஆரியத்தில் அஹம்
என வருதலால் இருமொழிக்கும் உறவில்லை என்போர்,
தமிழ் "யான்" இகரச்சுட்டு வழியாய்ப் பிறந்திருத்தலையும்
ஆரிய "அஹம்" அகரச்சுட்டுவழியாய்ப் பிறந்திருத்தலை
யும் ஆராய்ந்தறியாதோரேயாம். இருவகையாலும் தன்மை
ஒருமையைக் குறித்தல் கூடுமென்னல் இலத்தினில் Ego
எனும் ஆரிய "அஹ"த்தை ஒத்த சொல்லிருப்ப, கிரேக்
கத்தில் Hion என தமிழ் "இயா"னை ஒத்த ஓர் பழம்
உருவம் இருத்தலாலும் பெறப்படும். இவ்வாறே தமிழில்
ஈன்றாள்பெயர் தாய் என்றிருப்ப ஆரியத்தில் அம்பா
எனவாகின்றதே என அறியாதோர் மயக்கமுறுவர். இவற்
றுள் முந்தியது "அய்" எனுமடியாய்ப் பிறந்து தகர
சொன்முதல் மெய்யால் உறுதிப்பாடடைந்து மிக நெருங்
கிய உறவு உடையாளைக் காட்டும். பிந்தியது "அம்"எனும்
அடியாய்ப்பிறந்து உச்சாரண விகற்பத்தால் மெலிந்த பக
ரத்தை இடையிட்டெழுந்த "அம்மா" எனும் உருவமாம்:
அம்மா, அம்(ப்)ஆ. "அய்" அடியும் "அம்" அடியும்
ஒருபடித்தாய் நெருங்கிய சம்பந்தத்தினைக் காட்டி அண்
மைச் சுட்டு எனும் மாதாவின் மக்களாய் உற்பவித்தனவே
யன்றோ.

விகாரச்சொல் மொழிகளில் உபசர்க்க முன்னீட்டாலும் பிரத்தியயப் பின்னீட்டாலும் உடல் விகாரத்தாலும் சொற்கள் உருமாறி நின்றவிடத்தும், அவற்றை நுண்மதியெனும் விளக்கத்தையும் ஒலிமாற்று விதிகள் என்னும் உபகாரணங்களையுங்கொண்டு சிக்கறுத்து ஆதிச் சொல்லடிகளாகக் காண்டல் சாத்தியமேயாம். உதாரணமாய் ஒன்றைத் தருகின்றோம். "அன்னுவயம்" என்னும் வடமொழியைப் பிரித்து நோக்குமிடத்து "அனு"; ஒரு சொல். "இ(ய்)", வய என விகாரமடைந்த வேறொரு சொல், நுணுகி நோக்குங்கால் இவற்றுள் முந்தியது அண்(ணு)= நெருங்கிச் சேர்தல் என்னும் தமிழடியும், பிந்தியது இய(ங்கு)=போதல் எனும் தமிழடியுமேஎனப் புலப்படும். நெருங்கிச் சேர்ந்து போவதே அன்னுவயம் எனும் ஆரிய மொழியின் சொல்லொடுபொருளுமாம்.

இனி, தமிழ் மொழியானது சேமித்து வைத்திருக்கின்ற ஆதிச் சொல்லடிகள் ஆரியமாதிய மொழிச் சொற்கள் பலவற்றில் எவ்வாறு திரிந்து நிலவுகின்றன எனக் காட்டும் முகத்தால் ஓர் தமிழ்த் தலை அடியினை இங்கு விஸ்தரிப்பாம். முன்னர் ஆங்காங்கு பிரதிப்பெயர் ஆதியனவற்றுட் கண்ட மாற்றங்களையும் இதற்கு எடுத்துக்காட்டுக்களாய்க் கொள்க.

## எல் எனும் தமிழடியின் நல்லமகார்

எகரச் சுட்டினின்று பிறந்த பிரதம அடிகளைக் காட்டுமிடத்து எல்–லு=மேல் எழுவது; எரி–தல், எறி–தல்= மேலே வீசுதல்; எழு-தல்=மேற்கிளம்புதல் என்பன எடுத்தோதப்பட்டன. எல், எரி, எறி, எழு எனும் நான்கு அடிகளும் ஒரே சொல்லின் விகாரங்களாம் என்றல் லகர, ரகர, றகர, ழகரங்கள் ஒரே லகரத்தின் திரிபுகளாதலால் தெற்றெனப் புலப்படும். இனி, தமிழ் அமைப்பின்கண்





எரி, எறி, எழு என்பவற்றிற்கு அடிப்படையாயுள்ள எல் எனும் சொல் எழுந்து, எறித்து, எரிந்து வருவதாகிய சூரியனைக் குறிப்பதாயிற்று. ஆதி மானுடர் ஆகாயத்திற் றுலங்கும் இப் பென்னம்பெரிய விளக்கமானது, முறை பிறழாமல் காலைதோறும் கிழக்கில் எழுந்து வருவதைப் புறப்பாடான விசேடமாய்க்கண்டு, அதற்கு எல் எனப் பெயரிட்டனர் என்க. எழுவான் (எழும் அவன்) என அதி விரிவாய் இவ் எல்லு மற்றொரு பெயரடைந்திருத்தலையும் கவனிக்குக.

இவ்வடியின் எகரம் ஒகரமாய் மாறி, ஒலி-த்தல், ஒளி எனத் தமிழில் வருதலை ஒப்ப, பிறமொழிகளிலும் எகரத் திரிபினால் "எல்" அடி ஒல், ஓர் எனநின்று லத்தினில் Orior, கிரேக்கத்தில் Or-numi="எழுகின்றேன்" எனவந்தது. முந்திய மொழியில் Oriens என்பது "எழுவான்" உடன் சொல்லினும் பொருளினும் ஒப்புமையுடையதாகின்றது. ஒல் என மாறிய இவ் எல் அடியே லத்தினில் Sol என ஸகர மெய்முதலோடு பயின்று எமது எல்லை (சூரியனை)க் காட்டும். இதுதான் பிரித்தானியத்தில் Heol எனவும், கிரேக்கத்தில் Helios எனவும்படும். எழுந்து நிலைபெறும் அர்த்தத்தில் எமது எல் சிங்களத்தில் Hela (குன்று) என நிற்கும். சமஸ்கிருத சிலை, சைலமுமது. எல்–லனவா=மேனின்று தூங்கச்செய்தல் எனுஞ் சிங்களமுமது. இவ்வர்த்தத்தில் லத். Cel-sus (=சேண்); Collis (குன்று); பழம் ஆங். Hyll (குன்று) எனவருதலுங் காண்க. எழுகின்ற அன்றேல் செல்கின்ற அர்த்தத்தில் எமது எல் (எழ்) அடி சமஸ்கிருதத்து தலைக்குறைந்து Ri எனவும் ஆங்கிலமாதி மொழிகளில் Ern-en, Rin-nan, Run எனவும், கிரேக்கத்தில் Er-chomai (போகின்றேன்) எனவும் நிற்கும்.

ஒளியின் சுனையாகிய சூரியன் பெயரிலிருந்து ஒளிதானே பெயரடைதல் சகசமன்றே. இதனால் எல் பதத்திற்கு வெளிச்சம் எனும் பொருளும் ஏற்பட்டது.—"எல்லே யிலக்கம்" என்றார் தொல்காப்பியனாரும். (சொல். 271) 'எல்" ஒளியெனவே அவ்வொளியினையுடையோன் மீட்டொருகால் "எல்லவன்" எனப் பெயரடைந்தனன். இவ்வாறே "எல்லார்" ஒளியில் வசிப்போர், ஒளிபொருந்தியோர், தேவர் என வந்திட்டது.—"பனிவானத் தெல்லார் கண்ணும்" (சீவக. 364). சிங்களத்தில் ஒளிக்கு எலிய எனப் பெயர் உண்டானதும் இவ் எல்லினாலாம். எலிய-ட்ட எனுஞ்சொல் ஒளியைக் கருதுவதோடு வெளியே எனும் அர்த்தமும் தரும். (எமது "வெளியே" எலிய அன்றி வேறன்று என அடிக்குட் காண்போம்.) சிங்களத்தில் எலிய-ட்ட என்றதுபோல தமிழில் எல்லே=வெளியாய் என ஓர் சொல்லிருத்தலையும் நோக்குக. — "எல்லேமற்றெம் பெருமாற்கின்றிவளுமின்னாளோ" (சீவக.2957). இனி எமது ஏல எனும் சொல் "வெளிச்சத்தோடு," "விடிய,'' என ஆதியிற் பொருள்தந்து, அப்பால் "முன்னமே" என நிற்கும். வெள்-ளென என்பதூஉம் அது. வெள்=எல், என=உண்டாக; அன்றேல் வெளிச்சம் தோற்றும் நேரத்தில் என்பது. இதைப்போல காரென என்றொரு தொடர் இருப்பதையும் நோக்குக. கார்=இருள், என=உண்டாக; அன்றேல் இருளும்வேளை என்பது. ஏல எனும் தமிழ்ச் சொல் சிங்களத்தில் வேலா-ப்பஹ என நிற்பதோடு அலியம, அலுயம (விடியற்காலை) எனும் சொற்கட்கும் அடியாகும். பிராஞ்சியத்தில் Aube (=லத். Alba) விடியற்காலை என்னும் பொருள்கொள்ளலும் இவ்வாறே. அவ் Alba எனும் லத்தின்பதம் எல்லின் திரிபேயாம். இது சிங்களத்தில் அலு (ஒளியுள்ள), அளு (வெண்மையானது, சாம்பர்) அளுத் (புதிய) என நிற்கும். அம்மொழிதன்





னில் "எலு" ஆடு (வெண்மையான மிருகம்) எனப் பெயர் கொள்ளும். எமது வெள்-ஆட்டை இதனோடு ஒப்பிடுக. சமஸ்கிருத ஏலக அன்றேல் ஏடச்சொல் (ஆடு என்பது கருத்து) இச் சிங்கள எலுவோடு சம்பந்தப்பட்டதேயென்பது எம்மதம். ஏலகச்சொல் தமிழில் ஏடகம், ஏணை, ஏரகம், ஏழகம், மேஷகம், மேஷம் எனப் பல்லுருவங் கொண்டு, சொற்பிறப்புவரலாறு அறியாதோரை உளந்தடுமாறச்செய்யும். சமஸ்கிருத அகராதிக்காரர் தம் மேஷச் சொல் "கண்ணைத் திறத்தல்" எனும் பொருளைத் தருகின்ற "மிஷ்" அடியினின்று பிறந்ததென விநோத உற்பத்தி கூறினும், உண்மையில் அது எல் எனும் அடியிற் பிறந்துளதெனல் இங்கு கூறியவற்றை உய்த்து நோக்குவார்க்கு வெளிப்படும். எலு, ஏலகச்சொற்கள் வெண்மையின் நிமித்தம் ஆட்டைக் குறித்தனவெனில், அவ்விசேடத்தை நோக்கி எமது எலியும் பெயரடைந்திட்டது போலும். வெள்ளாடு என்பதைப்போல வெள்ளெலி எனும் தொடரும் இருத்தல் நோக்கற்பாற்று.

எல் பதம் அப்பால் எல்லு, எல்லை, என்று, என்றாழ் என நின்றக்காலையில், வெளிச்சம் நிலைபெறும் காலமாகிய நாளை, நாளின் முடிவாகிய அந்தத்தை, வேனிற் காலத்தை உணர்த்துவதாயிற்று.—"எல்லுப்படவிட்ட சுடு தீவிளக்கம்" (புறநா. 16-17) "எல்லையுமிரவுந்துயிறுறந்து" (கலித். 123) "எல்லைக்கணின்றார்" (குறள் 806) "என்றைத்தொட விண்ணிலெழுந்துறலால்" (கந்தபு. விந்த. 4) "என்றாழ் மாமலை மறையும்" (குறுந். 215) "என்றாழ் வாடுவறல்போல" (புறநா. 75). இம் மேற்கோட்களில் சூரியன் அர்த்தமும் அதின் வெளிச்சம் நிலைபெறும் நாள், காலம், முடிவு எனும் அர்த்தங்களும் ஒன்றினின் றொன்றாய்ப் பெறப்படுதல் காண்க. "எல்லை"=வெளிச்சக்காலத்தின் முடிவு என்ற அர்த்தம், நேரமாகவும் திரியலுற்றது.

சிங்களத்தில் “வேலா”=எல்லை; “வெளாவ”=நேரம். இதற்கொப்பவே தமிழில் வேலி=எல்லை; வேளை=நேரம் என வரல் காண்க.

## கேழு, கேழ், காழ்

ஒளி எனும் அர்த்தத்தில் “எல்” எழில் எனவாகி, காந்தி, வர்ணம், அழகு எனும் பொருள் கொண்டது. ஆரிய லவ-ண(=பிரகாசம், அழகு) பதத்தையும் நோக்குக. இவ் எழில்தான் தன் ஆதி அடிக்குள்ள எழு-தல் எனும் அர்த்தத்தையுட்கொண்டு உயர்ச்சியைக் காட்டுதலுமொன்று:—“பகட்டெழின்மார்பின்” (புறநா. 13) எனும் மேற்கோளிற்போல. அப்பால், “எழில்” வர்ணம் எனும் அர்த்தத்தில் எழுத்து என நின்று, வர்ணம் தீட்டிச் சித்திரித்தலை உணர்த்தும். எந் தமிழ் லிபி ஆதியில் சிவப்பு நீலம் ஆதியவர்ணங்களாற் தீட்டப்பட்டமையால் அதற்கு எழுத்துப் பெயர் வரலாயிற்று. ஆயின் “எழுத்துப்புடவை” இன்றைக்கும் லிபியுடைய புடவையயன்று வர்ணந்தீட்டியதையே குறித்தல் காண்க.—“இன்னன பலபலவெழுத்து நிலமண்டபம்” எனும் பரிபாடலிலும் (19, 53) வர்ணந்தீட்டியமையே பெறப்படுகின்றது. ஆரிய லிக்க், லிங் என்பன தாதுக்கள் சொன்முதலுயிர்கெட்டு இயங்குதலாகிய அம்மொழிப் பெருவழக்குக்கேற்ப (எ)லிக்க் (எ)லிங் என எந்தமிழ் எல்லோடு சம்பந்தம்பூண்டவையே. அம்மொழிச் சொற்களாகும் லிகம், லிபி என்பனவும் லத்தின் Littera பதமும் இலிகம், இலக்கம் (இலங்குதல்) ஆதியனவும் ஒன்றேயெனக் காண்க.

“எழி-ல்” வல்லின மெய்முதலால் உறுதிப்பட்டு கெழு என நின்று உறைப்பான வர்ணம், பிரகாசம் எனப் பொருள்படும். பிர-காசம் எனும் ஆரியப்பதத்தின் பகுதியாகிய காஷ் அடி எமது கெழுவோடு சம்பந்தப்பட்டதே.





“கெழு” காழ் என்றாகி அதற்கு அடியாவது. காழ்=ஒளி, பளிங்கு (பிங்.). “காழ்” காய்தல் எனச் சூட்டையுணர்த்திநிற்றலுமொன்று. கெழு எனும் அடிதான் ஆரிய-சர்மனிய தாதுக்களெனப்படும் Ghar, Gar, Gla என்பனவற்றிற்கும் மூலமாம். இத்தாதுக்கள் சமஸ். Ghir, Gharma பிரகாசம் சூடு, கிரேக். Chli-ein சூடாயிருத்தல், Kle-os, Klu-tos லத். Cla-rus, Glo-ria, In-cli-tus, ஆங். சக். Gloed பிரகாசமான, Glow பிரகாசி, Glass கண்ணாடி, Clean துப்புரவான ஆதியனசொற்களை ஒருபாலும்; சமஸ். Hir-ana பொன், Har-i மஞ்சல், கிரேக். Chru-sos பொன், Chlo-ros மஞ்சல், லத். Hel-nus இளமஞ்சல் ஆங். சக். Geol-o மஞ்சல், Gol-d பொன் ஆதியனவற்றை மற்றொருபாலும்; சமஸ். Har-y ஆசித்தல், கிரேக். Chara ஆனந்தம், Char-is தயவு; லத். Gra-tus பிரீதியான ஆதியனவற்றை மேலொருபாலும் பிறப்பிக்கும்.

எழி-ல் சொல் தகர மெய்முதலால் உறுதிப்பாடடையும்போது தெள், தெளி=வெளிச்சமாதல், தெரி=மனதில் உண்டாகும் ஒளியாகிய அறிவு, தெளிவு=அறிவு என வரும். தெரி எனுமடி சிங்களத்து Ter-enawa எனும் சொற்குப் பிறப்பிடமாயிற்று. தெளிவு நன்னீர்போலும் களங்கமற்றிருத்தல் எனும் பொருளில் தேறல் எனவந்து, தெளித்தகட்கும் தேனுக்கும் பெயராம். மனம் பிரகாசமடைதலும் தேறல் எனப்படும். இத்தெளிவுதான் எண்ணெயையுங் குறிக்கும். தெளிவெண்ணெய் எனும் தொடரை நோக்குக. இனி, தெள் எனும் துவிதீய அடி சிங்களத் தெல் (எண்ணெய்)க்கும் சமஸ்கிருதத்தில், தில, தைலச் சொற்கட்கும் காரணமாயிற்று. தெள்ளும் தைலம் வடிப்பதற்கான எள்ளும் ஒன்றேயெனல் காண்க. ஆயின், “எள்” எல் அடியினின்று உற்பத்தியாகாமல், அதனோடு உறவுபூண்ட எரி எனுமடியிற் பிறந்ததுமாகலாம். அன்றி

இழுது=வடிவது, கொழுப்பு, எனும் "இழ்" அடிப்பிறந்த சொல்லின் திரிபாயினும் ஆகலாம்.

## வெள், விடி, வெடி

ஒளிப்பொருள்கொண்ட எல் அடி மெலிந்த மெய் முதலாகி வருமிடத்து பல மொழிகளிலும் எண்ணிறந்த சொற்கட்குப் பிறப்பிடமாகின்றது. சிலவற்றை மாத்திரம் ஈண்டுக் குறிப்பாம். வகர மெய்முதலாய் வரும் "எல்" வெள் என நின்று பிரகாசத்தை, தவள வர்ணத்தைச் சுட்டும். வெள்ளி=வெளுத்துத் துலங்கும் உலோகம், விண்மீன். (விண், மீன் எனும் இவைதாமும் "வெள்" அடியின் மகாரே எனக் காண்போம்.) "வெள்" வெள்ளை என்றுமாகும். இது சிங்களத்தில் Hela, Ela=வெண்ணிறம் என நிற்கும். அப்பால் "வெள்ளை" வெள்ளிய என்றும், வால், வாலிது, வாலிய என்றும் திரிந்து வெண்மையையே சுட்டும்:—"கலத்துமுண்ணுள் வாலிதுமுடாஅள்" (அகநா. 262) இவ் "வாலிய", சமஸ்கிருதத்தில் வாலுக எனவாகி மணற்கும் கற்பூரத்திற்கும் பெயராம். இருபொருளும் வெண்ணிற விசேடங்கொண்டிருத்தல் காண்க. சிங்களத்தில் இது Veli என்றாகி மணற்பெயரேயாகும். "மண"லும் இச்சொல்லோடு சம்பந்தப்பட்டதே போலும்.

வெள் அடி வெளி-ச்சம் என நின்று சூரியப்பிரகாசத்தைக் குறிக்குமிடத்து பிறமொழிப் பலசொற்கட்கு மாதிரிகையாய்த் திகழும். சிங்கள எலிய; லத். Luc-eo Lux, Fulg-ėo, Flagr-o, Flamma; கிரேக். Phleg-ein எரிதல்; சமஸ். Brih, Bhraj; சர்ம. Licht; கொதிக். Bairh; ஆங். Bright; வைதிகசமஸ். Arc, Rc; பாளி Acci இவையெல்லாம் பிரகாசத்தைக் குறிக்கும் சொற்களாம். மீண்டும் சமஸ். Rksh=பிரகாசமான; Rocana, Ruci, Locana=கண்; Aloka=வெளிச்சம்; ஆங்கில





சாக். Bloscan, ஆங். Bleach=வெள்ளையாக்கல்எனவரும். எமது வெளுத்தற்சொல்லும் ஈற்றிற் தந்த ஆங்கிலச்சொல்லும் ஒன்றே எனக்காண்க. இவ்வாறே வெட்குதல் (முகத்தில் வெளுப்புக் கொள்ளல்) பதமும் ஆங்கில Blush சொல்லும் ஒன்றாம். இது பிரகாசத்தை உணர்த்தும் Bloz-en எனும் ஒல்லாந்த அடியோடு ஒப்புமையுடையது. சமஸ்கிருதத்தில் லஜ்ஜ், லஜ்ஜா எனவருதலும் இவ் "வெள்" அடியே. லஜ்ஜா வெட்கமாம். அதுமட்டா! "வெள்" அடிதானே மீண்டும் சமஸ்கிருதத்தில் Svit, Sveta எனவும், சிங்களத்தில் Sudu எனவும், ஆங்கிலத்தில் White, Wheat எனவும் வெண்மைப் பொருளைத் தந்துநின்றது. ஆங்கில Wheat (கோதுமை) சொல் வெண்மையாகிய அவ்வரிசியினின்றுண்டானது. இவ்வுதாரணங்களுட் பலவற்றில் காணும் ஒலிமாற்றுக்கள் சிலவற்றை மனத்திற் தரித்துக்கொள்ளல் நன்று. எமது எல், வெள் எனுமடிகளை ஆரிய மொழிகள் ஏற்றுக்கோடுமிடத்து, பெரும்பான்மை சொன்முதல் உயிரை அன்றேல் உயிர்மெய்யைக் கழித்துவிடுகின்றன. வெ—ளிச்சம் லத்தினில் லுச்ச் எனவும், சமஸ்கிருதத்தில் லஜ்ஜ் எனவும் வந்திட்டதைக் காண்க. வேறொரு ஒலிமாற்று, எமது துவிதீய அடிகளின் மெய்முதற்குமுன் ஸகர ஒற்றைக் கூட்டுவது. சமஸ்கிருதமொழியாளர் சொன்முதல் வல்லெழுத்துக்களின் முன்னும் ஸகர ஒற்றைக்கூட்டும் நாட்டமுடையோராதலைக் காட்டப் பல உதாரணங்கள் தரல்கூடும். பச் (பார்) எனும் சொல்லை அன்னோர் ஸ்பச் எனவும், மர் (அமர்-த்து) எனுஞ் சொல்லை ஸ்மர் எனவும் வழங்குதலைக் காண்க. இங்ஙனமே வெள், வெட் எனுமடியாய்வந்த "வித்" சொல் சமஸ்கிருதத்தில் ச்வித் என்றாயிற்று. அதுதான் இகரம் தன்னோடு பிறப்பொத்த ஏகாரமாயினமையால் ச்வேத என நின்று சிங்கள ஸூது சொற்கும் காரணமாயிற்று. ச்வித் எனும்

அடியாய்ப்பிறந்த ஆங்கிலம் Hwit என ஒருகால் நின்று தற்காலம் White என்றாயிற்று. மற்று Bகரம் Fகர வகரமாகின்றமை, லகர ளகர றகரமாகின்றமையாதிய மாற்றங்களை உய்த்துணர்ந்துகொள்க.

பின்னும் வெள் அடி வெளி என நின்று வெளிச்சமாயுள்ள, (பொருட்கள் நிறைத்தலாற் கறுப்படையாத) திறந்த இடத்தைக் காட்டும். இது சிங்களத்தில் Bahara, Bara எனவும், சமஸ்கிருதத்தில் Vahis, Bahis எனவும், ஆங்கிலத்தில் Bleak எனவும் நிற்கும். இவ் வெளியாந் தன்மையையே வெறிது, வறுமை, வெறும், வீண் ஆதிய தமிழ்ச்சொற்கள் காட்டும். இவ்வடிதான் சமஸ்கிருதத்தில் Vritha, லத்தினில் Frustra, Fraus எனுஞ் சொற்களைப் பிறப்பித்தது. "வெள்" அடியே, விளக்கப் பொருளோடு, மின்-னுதல் எனுந் தமிழ்ச் சொற்குக் காரணமாகி, அதினின்றும், மீன் எனும் வெள்ளிப் பெயரும் மச்சப்பெயரும் வரக் காரணமாயிற்று. இலங்குதலாலன்றே தம்முள் வெகு வேறுபாடுள்ள இருபொருட்கள் இப்பொதுப் பெயர் அடைந்தமையும். எமது "மீன்" சமஸ்கிருதத்தில் மீன எனவரும். விளக்கப்பொருட்கூட்டரவாலேதான் "விழித்தல்" கண்ணைத்திறத்தல் என்றாயிற்று. இச்சொல்லோடு சமஸ்கிருத மிஷ், மீல் எனும் விழித்தற் பொருட் தாதுக்களை நிறுத்திநோக்குக. மேலும், வெளியாயிருத்தல்பற்றி ஆகாயம் தமிழில் விண் எனப் பெயர் பெற்றது. இவ் விண் சப்தத்தை ஆரிய விஷ்–ணுவிலும் வ்று எனும் தாதுவால்வரும் வருணனிலும் காண்பார் சில்லோர். (Caldwell, 163) விண்ணுக்கு உள்ள வான் எனும் மறுபெயர் எல் அடிதான் வால், வாள் என நின்று பெற்றமகவாகலாம்.

வெள் எனுமடி வெளி என நின்று, வெளிப்பு எனும் அர்த்தத்தில் விடிதல் வெடிப்பு எனவும்பட்டது. இனி,





சுவரில், பலகையில் வெளிப்பு உண்டாகுமிடத்து கேட்கப்படும் சப்தமும் வெடிப்பு, வெடி எனவருதல் இயல்பே. வெடித்து இரண்டாவதைப்போலப் பிளத்தல் வெட்டுதல் எனப்பட்டது. இவ் வெட்-டுதல், தனக்குள்ள வெளித்தல் (=ஊடே வெளிச்சந்தோன்றச்செய்தல்) எனும் அர்த்தத்தைக் கைவிடாமல், "வித்" (=காண்டல்) எனும் ஆரிய அடியாயிற்று. அவ் அடியினின்று பிறக்கும் வித்தை (Vidya)யும் வெளி-ச்சமாகிய அறிவும் ஒன்றேயாம். மீண்டும் வெட்-டு எனும் அடி லத்தினில் Vid-eo=காண்டல், கிரேக்கத்தில் Eid-on, Id-ein=மனக்காட்சியுறல்; சர்மனியத்தில் Wiss-en; ஆங்கிலத்தில் Wit=அறிதல் என வந்தது. சமஸ்கிருத Budh "புத்தி"யும் அதுவேயாகலாம். அறிவு எனும் சொற்தானும் அறுத்தற்பொருளதாகவே வருமாதலால் வெட்டுதற்பொருளிலிருந்தும் வித்தை, புத்தியாதியன பிறத்தற்கு இழுக்கில்லையென்க. லத்தினில் வெட்டுதற்பொருள் Di-vid-o (பிரித்தல்) In-di-vid-uus (பிரிந்த, புறம்பான) எனும் சொற்களிற் துளங்குகின்றது. Vi-vid-us எனுஞ் சொல்லில் பிரகாசம் மேற்பட்டுத் தொனிக்கும். Vitr-um (கண்ணாடி 'வீதுறு") வெளிச்சமாய்த்தோற்றும் பொருளேயாம். இனி, வெட்டுதல் எனும் பிரித்தற் பொருளில் எமது வேறு, விலத்து, விலக்கு, விரி, பிரி, பிள எனும் சொற்களும்; சமஸ்கிருத Bhid, Bind, Bhil எனும் தாதுக்களும்; லத்தின் Find-o, ஆங்கில Bill, சிங்கள Vena ஆதியவைகளும் பிறந்து பல வேறு சொற்களாய்ப் பிரிதல் காண்க.

## இலகு, நிலவு

இதுகாறும் எல் அடி சொன் முதல் மெய்பெற்று வெவ்வேறு சொற்களை உற்பத்தியாக்கக் கண்டாம். இனி, அவ் "எல்"தான் தன் எகரத்தைப் பிறப்பாலொத்த இகரமாக மாற்றிப் பிறப்பித்த வேறுபல சொற்களுட் சிலவற்

றைக் காண்பாம். "எல்" இல-கு, இல-ங்கு என நின்று
வெளிச்சமாய்த் தோன்றுவதைக் குறித்தது. இலக்கித்
தல்=வர்ணந்தீட்டுதல் எனும் பொருளுள்ள ஓர் தமிழ்ச்
சொல்லாம்.—"இவ்வுருவுநெஞ்சென்னுங் கிழியின்மேலிருந்
திலக்கித்து" (சீவக. 180). வர்ணந்தீட்டுதலினின்று குறி
வைத்தல் எனும் பொருளும் இச்சொல்லிலேறிற்று. ஆக
வே, இலங்கு, இலக்குச்சொல்லே சமஸ்கிருதத்தில் லக்ஷ்,
லக்ஷணம், லக்ஷ்மி என வருவது. இவற்றின் அடித்தளத்
தில் பிரகாசத்தன்மை இலங்குகின்றமை காண்க. இலங்கு
அடிதான் கிரேக்கத்தில் Lampo=பிரகாசித்தல் என நிற்
கும். ஆங்கிலத்தில் Lamp="லாம்பு" எனவரும் விளக்கு,
விளங்குதலாகிய இலகுதற் சம்பந்தங்கொண்டதே எனவும்,
Light எனும் ஆங்கிலச் சொல்லும் எமது வெளிச்சச்
சொல்லும் ஒன்றே எனவும் அறிந்து மகிழ்க. அப்பால்,
இலகு என்ற சொல், ஆரியத்தில் Laghu எனவும், லத்தி
னில் Levis எனவும், கொதிக்கில் Leihts எனவும், ஆங்
கிலத்தில் Light எனவும் வந்திட்டது. அதுதான் சிறிது
பொருள்மாற்றத்தோடு சர்மனியத்தில் Ge-ling-en=சித்தி
யெய்தல், கிரேக்கத்தில் Elasson=சிறிது எனவாயிற்று.
எமது இலேசுச்சொல்லும் இலகுவும் ஒன்றே. வெளிச்ச
மாயிருப்பது பாரமாகாமல் இலேசாயிருத்தல் எவ்வாறென
ஆய்ந்துணர்க. பாரமாகாதது வெளிச்சக் குறியீடு பெற்ற
தெனில், அடர்த்தியுள்ளது அல் அடியாய்ப்பிறந்த கடு
எனும் துவிதீய சொல்லடியினின்றும் கரு-மை எனும்
நிறப்பெயர்க்குக் காரணமாகிய விசித்திரமும் உய்த்துணர
ற்பாலது. வெள்ளை நிறம்=இலகுதல், இலேசு=அடர்த்தி
யற்றபொருள்; அடர்த்தியான பொருள்=கடு-மை, கரு
நிறம் எனக்காண்க.

"இலகு"ச்சொல் நகர மெய்முதல்பெற்று நிலவு நிலா
எனவந்தகாலையில், சந்திரவெளிச்சத்தையும் சந்திரனையும்





குறித்தது. கெழு என வல்லின மெய்முதல் பெற்ற சொல்
உறைத்த பிரகாசமாகிய நிறத்தையும், நிலவு என மெல்லின
மெய்முதல் கொண்ட சொல் மெல்லொளியாகிய சந்திர
ஆலோகத்தையும் உணர்த்தும் பெற்றியை நோக்கி மகிழ்க.
இந்நிலவுச்சொல் சிங்களத்தில் நிலாவ எனநின்று மங்கல்
ஒளியாகிய நீல நிறத்தைக் குறிக்கும். நிலவு, நிலாவ என்
பனவே நீல நிறத்துக்கும் அடியாயின. இது சமஸ்கிரு
தத்தில் Nila எனவும், லத்தினில் Niger எனவும் நிற்கும்.
கிரேக்கத்தில் இதுதான் Melas எனவந்து இருண்ட நிறத்
தைக்காட்டும். கிரேக்கத்தில் இச்சொற்கு எதிர்நிலையான
Leukos எனும் சொல் மீட்டும் எமது இலகுச்சொல்லே
யாம். அப்பால், லத்தின் Lu(ci)na எனும் சந்திரப்பெய
ரும் எமது நிலவுப்பெயரும் கிட்டின உறவுபூண்டிருத்தலை
முன்காட்டிய Lux சப்தத்தோடு ஆராய்ந்துகாண்க.

இல(ங்)குச் சொல் வகரமெய் முதல்கொண்டு விலங்கு,
விளங்கு என்றாகி வெளிச்சத்தை, விளக்கமாய் எழுந்து
நிற்கும் பொருளைக் காட்டும். விலங்கல்=மலை. இவ்வடி
யானதே சமஸ்கிருதத்தில் உப்பரிகை, உயர்ச்சி என்னும்
பொருளுள்ள "விடங்க"முமாம். விடங்கச் சொற்கு அழ
குப் பொருள் வந்தமையும் இலகுதலினாலே என்க. அப்
பால், "விளங்குதல்", விளக்கு ஆதிய தமிழ்ச்சொற்கட்கும்
Las, Vilas ஆதிய பிரகாசப்பொருட் சமஸ்கிருத பதங்
கட்கும் உற்பத்தியாகும்.

## ஒலி, சோலி, சுடு

எல் எனும் பகு சந்தானப்பாவை தன் மகாரின் கணக்
கை மேலும் பெருக்குவாள், எகரத்தை ஒகர உகரங்களாய்
மாற்றிப் பின்னும் பல சொற்களை ஈன்றாள். "ஒல்" அடி
யாய் ஒலித்தல் (=வெண்மையாக்கல்) முதலாம் சொற்கள்
ஒருபுடைபிறந்தன. ஒலித்தல் சிங்களத்தில் எலி-கறணவா

என நிற்கும். லத்தினில் Lu-o (வெண்மையாக்கும் பொருட்டு) கழுவுதலாம். இதனை Ab-lu-tion எனும் ஆங்கில விகாரச்சொல்லிற் காண்க. மறுபுடை, ஒள் என்றாகிய அடியால் ஒளி, ஒளிவு (வெளிச்சம்) ஆதியன சொற்கள் பிறந்தன. இவ்வடியோடு உறவுபூண்டன சமஸ்கிருதம் Usha=விடியற்காலை; லத்தின் Or-iens = கீழ்த்திசை, Aur-ora=விடியற்போது; ஒல்லாந்தம் Oost=எழுவான் திசை; பழம் ஆங்கிலம் Eastan=கீழ்த்திசை எனவரும்.

அப்பால் ஒல் அடி உறுதிப்பாட்டை நோக்கிச் சகர மெய்முதல்பெற்று சொலி என்றாயிற்று. சொலித்தல்= பிரகாசித்தல். இதன் சகசர்கள்: ஆரியம் Jval, Jvar எனவும், Jyoti, Dyud எனவுமாம். சொலி என்பது ஜ்வல ஆதியனவாய் வந்தமையில் ஆரியரது ஊன்றி உறைப்பாகவும் விரைவாகவும் உச்சரிக்கும் வன்மையைக் காண்க. ஜகரம் தகரமாகும் விதியையும் குறித்துக்கொள்க. இனி எமது சொலி, ஜ்வல என நின்றுதான் படிமுறையாய்ச் சிங்கள Dala சப்தமாயிற்று. தள=சுவாலித்தல். கிரேக்கத்தில் இது Deatai, Delos என வரும். சமஸ்கிருத Dhavala, சொலித்தலிலிருந்து வெண்மையைக் குறித்தது. லத்தினில் Dies என்பது சமஸ்கிருத Dyud என்பது போலச் சொலிப்பை வெளிச்சத்தைக் காட்டி, அவ்வெளிச்சம் நிலைபெறும் காலமாகிய நாளைக்குறித்தது. சமஸ்கிருத Dip-yate, தீபம் ஆதியனவும், திவ் (Div) எனும் அடியும் இவ்வாறே இதனோடு உறவுகொண்டன. திவ் அடி தேவ, என ஒருபாலும், தேயு என ஒருபாலும் திரியும். தேவ எனும் சொல், லத்தினில் கிரேக்கத்தில் கடவுட்பெயரான Deus, Zeus எனவும், தமிழில் தெய்வம் எனவும் வந்திட்டன. தேயுச் சொல் தமிழிற் தீ (நெருப்பு) என ஆயிற்று.





ஒல் அடியை மேலும் விரிப்பிற் பெருகுமாதலால் அதுதான் உல் என நின்று உண்டாக்கிய சொற்களிற் சிலவற்றை இனி நோக்குவாம். உல் எனுஞ்சொல் உலர்–தல், உரு-த்தல் எனநின்று நெருப்பில் எரிதலை, காய்தலை உணர்த்தும். உருத்தல் எரிதலாமென்றற்கு "ஆகமுருப்பநூறி" (புறநா. 25, 10) எனும் பிரயோகங்காண்க. இது லத்தினில் Ur-o, Bur-o, Am-bur-o என; கிரேக்கத்தில் Pur என; சர்மனியத்தில் Bren-nen என நின்று எரிதற் பொருள் தரும். உடற்றல் எனும் தமிழ்ச்சொல்லுமது. சமஸ்கிருத Vas, Ush எனுமடிகளை ஒப்புநோக்குக. உகரம் பிறப்பு ஒப்புமையால் வகரமாதல் இங்குகவனிக்கற்பாலது. தமிழில் உலர், உலங்கு, உணங்கு, உண்ணம்எனப் படிமுறையாய் நிற்கின்ற சூட்டுப்பொருட் சொல், சமஸ்கிருதத்தில் உஷ்ணம் என வருதலையுங் காண்க. ஈண்டு லகரம் டகர றகரங்களாய்த் திரிந்தது. எமது "உலை"யும் உல் அடியாய்ப் பிறந்து "எரிக்குமிடம்" எனப் பொருளுற்றதேயாம். இது லத்தினில் Fur-nus ("போறணை") Fer-veo (எரிதல்)என, கிரேக்கத்தில் Ther-mos (சூடு) எனவரும். தமிழ் உருச்சொல் எரித்தலோடு ஒளியையும் காட்டி அதனால் உருவம் என வடிவப் பொருட்சொல்லாயிற்று. "நின்புகழுருவினகை" (பரிபா. 3, 32) எனும் பிரயோகத்தில் உருச்சொல் வடிவங்காட்டல் பெற்றாம். சமஸ்கிருத "ரூப"ச் சொல் இவ்வடியானதேயென்க.

இனி உல் அடி சகர மெய்முதலாலுறுதிப்பாடடைந்து மிக எரித்தலைக் காட்டும். சுல்–லி நெருப்பெரிக்குமிடமாம். சுல்=வெள்ளி. இவற்றோடு லத்தின் Sul-fur சொல்லும் பழம் ஆங்கில Seolfor, ஒல்லாந்த Zilver சொற்களும் உறவுபூண்டன. அப்பால் சுடு–தல் எரித்தலாம். இவ்வாறு விரிந்தவிடத்து சமஸ்கிருத Shuc, Shudh, Shub எனும் வெண்மைப்பொருளுள்ள தாதுக்களோடும் சுல்லுப் பதத்

திற்கு உறவுண்டாதல் காண்க. சுல்-(லி), சூடு என்பன வற்றோடு லத்தின் Cal-eo, Cal-idus; சமஸ்கிருத Shush, Ush; கிரேக்க Katha-ros ஆதிய சூட்டுப்பொருட் சொற்களையும் ஒப்புநோக்குக. எமது "சுல்" மீட்டும் சுடர், சுடலை என்றாகி நெருப்பு மிக்கவிடத்தைக் குறிக்கும். "சுடர்" எரியும் பொருளாகிய சூரியனுக்குமுரியது. இதுதான் சுர எனும் சூரிய அர்த்தச் சமஸ்கிருதமுமாம். Sol என்னும் லத்தினையும் காண்க. சமஸ்கிருதத்தில் "சுர" சூர்ய என வந்ததுமாகலாம். பின், சுல் அடி சுள்ளை, சூளை எனத் தமிழ்மொழியாயும் நிற்கும். சமஸ்கிருத "ஜ்வல" முன்காட்டிய "சொலி" ப்பதத்தினின்று வந்ததுமாகலாம், இச்சூளைச் சொல்லினின்று எழுந்ததுமாகலாம். அடி எவ்வாற்றானும் ஒன்றே. இனி எம் சூளைதான் சிங்களத்தில் Udul (சுவாலிப்பது), Uduna (சூளை) எனவும்; லத்தினில் Culina (அடுக்களை) எனவும்; பழம் ஆங்கிலத்தில் Cylene (Kiln) எனவும் நிற்கின்றது. அப்பால் "சுள்ளை" சுண்டு (காய்ந்திடுதல்), சுண்ணம் (சாம்பராயெரிந்தது) என ஆகி, சிங்கள ஹூணு; சமஸ்கிருத சூர்ண; லத்தின் Calx; ஆங்கில Chalk ஆதிய உருவங்களாயிற்று. அம்மாத்திரையன்று, சுண்டு என்பது சுவண்டு என ஓருருவமடைந்து நெருப்புவண்ணத்தைக் காட்டுமுகத்தால் சுவப்பு என்றாகி சிவப்பு, செம்மை, சேவல், சேயன் ஆதிய சொற்களைப் பிறப்பித்து சிவசப்தத்திற்கும் தோற்றுவாயாயிற்று. சுண்டு சுண்ணமானதுபோல, சுவண்டு சுவண்ணமாகி நெருப்புநிற உலோகத்தைக் குறித்தது. ஸ்வர்ண எனும் சமஸ்கிருதமுமது. அப்பால் "சுவண்டல்" சோர்தலுக்கு அடியாகி சுணங்கு எனும் ஒரு சொற் பிறந்தது. உணங்குதலும் (உலர்தல்) சுணங்குதலும் (சோர்தல்) ஒன்றே. ஆயின் சுணங்குகின்ற மிருகப்பெயர் இதினின்றும் வந்தமை வியப்பாம். சுணங்கன்=உரோசமற்றதாகிய நாய். இது சமஸ்கிருதத்தில் Shvan எனவும், கிரேக்கத்தில் Kuon எனவும்,





லத்தினில் Canis எனவும், சர்மனியத்தில் Hund எனவும், ஆங்கிலத்தில் Hound எனவும் நிற்றல் காண்க.

## எரி, எறிப்பு, நெருப்பு

வரம்பின்றிச் செல்லாமைப்பொருட்டு ஈற்றில் எர் எனுமடியாய்ப் பிறந்த சில சொற்களோடு இந்நூலினைத் தலைக்கட்டுவாம். எர் அடி எரி எனநின்று, எழுந்து வீசும் நெருப்பை, அதன் பிரபையைக் குறிக்கும். எறி-த்தலும் அது. எரிச்சல் எனுமுருவமே சமஸ்கிருதத்தில் ஈர்ஷ்யா என நிற்பதுபோலும். அஃதெவ்வாறாயினும், முன்காட்டிய Or-ior எனும் லத்தினும் Arisan எனும் பழம் ஆங்கிலமும் எமது எரி-தலோடு ஒப்புநோக்கற்பாலன. "எரி" வெயில் என வருவதுமொன்று. இது சிங்களத்தில் வேல்-எனவா என நின்று காய்தலைக் குறிக்கும். எரி எறியாய்த் தகர மெய்முதலால் உறுதிப்பாடடைந்து தெறு என நிற்றலுமொன்று. "ஒண்கதிர் தெறுதலின்" (கலித். 2) என்பதில் தெறுதல் எரித்தலாம். பின் "தெறுதல்" அழித்தற் கருத்துக்கொண்டது. செறுதலுமது. "தெறும்பாவி தரிசனத்தின் (சிவக. சிவதன்மா. 13) எரிப்புத்தான் நெருப்பு (எறிப்பது) எனவும், நிறம் (பிரபையானது) எனவும், நீறு (எரிந்து சாம்பரானது) எனவும் வருகின்றது. ஈண்டு மெல்லின மெய்முதலான "நெருப்பு" அனல் மாத்திரையையும், வல்லின முதலான "தெறுதல்" சுட்டு அழித்தலையும் குறித்தலைக் கவனிக்குக. இவை யாவையும் ஒருங்கு நோக்குங்கால் இவ்வடியாய்ப் பிறந்த பிறமொழிச் சொற்களின் வரலாறு வெளிப்படும். சிங்கள Ira, சமஸ்கிருத Ravi என்பன எரித்தலையே சுபாவமாய்க்கொண்ட சூரியனை விளக்கும் நெருப்பின் நிறமாகிய சிவப்பைக் காட்டி இவ் எரி அடி சமஸ்கிருதத்தில் Aruna, Arusha, Rudhira, Rohita எனவும், லத்தினில் Ruber எனவும்; கிரேக்

கத்தில் Erud-ros எனவும் வரும். லத்தின் Aurum எனும்
பொன் அர்த்தச் சொல்லும் நெருப்பு நிறங் குறித்ததே.
(எமது "பொன்" "ஒல்" அடியாய், பகர மெய்முதலுறு
திப்பாடடைந்து, பொல், பொற்பு, பொன் என நிற்பது)
இனி வேறொரு வழியால் எரிச்சொல் நெருப்புவண்ண
மான எமது "இரத்த"ச் சொல்லைத்தர, அது சமஸ்கிரு
தத்தில் Rakta, Ratna எனும் சொற்களையும், Ranj
எனும் தாதுவாய் நின்று பல வியுற்பன்னங்களையும் தரும்.
இரத்தமே லெத்தம் எனும் மரூஉ வழியாய்ச் சிங்களத்தில்
லே எனக் குருதியையும், றத்றன் எனப் பொன் அர்த்தச்
சொல்லையும் தருவதாம்.

இதுகாறும் எடுத்தோதியவற்றுள் ஆங்காங்கு தமிழ்ச்
சொல் முந்தியதா சமஸ்கிருதம் ஆதிய பிறமொழிச்சொல்
முந்தியதா எனத் தெளிதல் எளிதன்று. ஆயின் ஆதியில்
இடச்சம்பந்த உற்பத்திகொண்டெழுந்து எந்தமிழில் விகார
மடையாது முத்துப்போற் தெளிவுறக் கிடக்கும் சொல்
லடிகளே நாமெடுத்தாண்ட மொழிக்ளின் சொற்கட்கெல்
லாம் அடிப்படையாம் எனுந் துணிபு செவ்வையாய் நிலை
விடப்பட்டதொன்றே என்பதில் மயக்கமின்று.



# APPENDIX

# INDEX

## OF WORDS WHOSE ORIGIN IS TO BE FOUND IN THIS WORK

## இந்நூலினுள் வரலாறு விளக்கப்பெற்ற சொற்கள்

### I தமிழ்ச் சொற்கள்


| | | | |
|---|---|---|---|
| அஃகல் | ... 17 | அட்டுதல் | ... 26 |
| அஃகு | ... 42 | அணி | ... 20 |
| அகம் | ... 34, 64 | அண்டுதல் | ... 27 |
| அகட்டுதல் | ... 32 | அண்டை | ... 13 |
| அகலம் | ... 32 | அண்ணித்தல் | ... 20 |
| அகல் | ... 32 | அது | ... 48, 66 |
| அகல்தல் | ... 17, 32 | அத்தன் | ... 20 |
| அகவல் | ... 34 | அத்து | ... 64 |
| அகழான் | ... 32 | அத்துதல் | ... 19 |
| அகழ் | ... 32 | அமை- | ... 18 |
| அகழ்தல் | ... 32 | அமைச்சன் | ... 18 |
| அகற்றுதல் | ... 32 | அம்விகுதி | ... 62 |
| அசக்குதல் | ... 31 | அம்மை | ... 18 |
| அசங்குதல் | ... 31 | அயக்குதல் | ... 31, 87 |
| அசைதல் | ... 31 | அயர்தல் | ... 31 |
| அடு | ... 13 | அயர்த்தல் | ... 31 |
| அடுத்தல் | ... 15, 25 | அயல் | ... 13, 31 |
| அடைதல் | ... 19 | அயா | ... 34 |

அரவு ... 63
அருகு ... 18
அருத்துதல் ... 33
அருந்துதல் .. 33
அர்விகுதி ... 53, 60
அலகு ... 32
அலரி, அலர் ... 33
அலை ... 18
அலைதல் ... 35
அல்விகுதி ... 51, 60
அல்குதல் ... 83
அவர் ... 50
அவள் ... 48
அவன் ... 47, 48
அவவு ... 34
அவா ... 34
அவை ... 54
அவ்வித்தல், அவ்வியம் 34
அவ்வுருபு ... 66
அழுங்குதல் ... 19
அழ்விகுதி ... 60
அள் ... 19, 60
அறுவிகுதி ... 61
அறைதல் ... 19
அனுங்குதல் ... 19
அன்விகுதி ... 47
அன்மை ... 83
அன்னை ... 20

ஆசை ... 31
ஆடுதல் ... 25, 35
ஆண் ... 48
ஆதவுருபு ... 66
ஆநின்று ... 68
ஆமாத்தியன் ... 18
ஆய் ... 18
ஆய்தல் ... 23, 34
ஆராய்தல் ... 34
ஆர்தல் ... 33
ஆர்பு ... 33
ஆர்வம், ஆர்வல் ... 34
ஆர்விகுதி ... 54
ஆலம் ... 32
ஆல் ... 32, 65
ஆவல் ... 34
ஆழம் ... 32
ஆழல் ... 32
ஆள் ... 48
ஆன் உருபு ... 65
ஆன்றோர் ... 32

இவ்விகுதி ... 63
இடம் ... 4
இடறு ... 61
இடு ... 14
இடுதல் ... 4, 22
இடுங்குதல் ... 4
இடை ... 4
இணர் ... 4, 22
இணுட்டு ... 4
இணுங்குதல் ... 4
இதழ் ... 21
இமை ... 22
இமைத்தல் ... 21
இயக்கு ... 39
இயக்குதல் ... 87
இயங்குதல் ... 21
இயம் ... 39
இயவர் ... 39
இயம்புதல் ... 39
இயலல் ... 39
இயல்பு ... 40
இயவுள் ... 40
இயவை ... 39





இயலல், இயறல் ... 39
இயற்கை ... 40
இயற்றல், இயற்றி ... 39
இயான் ... 45
இரங்குதல் ... 4, 22
இரண்டு .. 53
இரத்தம் ... 104
இருத்தல் 4, 14, 21
இருக்கட்டு ... 81
இர்விகுதி ... 53
இலகுதல் ... 29, 98
இலக்கம் ... 92
இலக்கித்தல் ... 98
இலங்குதல் ... 98
இலிகம் ... 92
இலேசு ... 98
இலை ... 4, 21
இல்விகுதி ... 51, 62
இவர்தல் ... 22
இவன் ... 47
இழிதல் ... 3, 21
இழுது ... 94
இழுத்தல் ... 4
இளகுதல் ... 21
இறங்குதல் ... 22
இறை ... 4
இறைஞ்சுதல் ... 4
இனைதல் .. 22
இன் இடைநிலை ... 69
இன்னுருபு ... 66
இன்மை ... 83

ஈடு ... 4
ஈர்த்தல் ... 4, 53

உவ்விகுதி ... 63
உகப்பு ... 37
உகல் ... 21
உச்சி ... 13
உடற்றல் ... 101
உடன் ... 65
உடைதல் ... 21
உட்கல் ... 21
உணங்குதல் 101, 102
உண்ணம் ... 101
உண்ணல் ... 21
உண்மை ... 38
உதித்தல் ... 21
உப்பசம் ... 36
உப்பல் ... 36
உப்பளம், உம்பளம் ... 37
உப்பு ... 37
உப்புதல் ... 20, 36
உமணர் ... 37
உமிழ்தல் ... 20
உம் ... 50, 75
உம்பர் ... 13, 38
உயர் ... 13
உய்தல் ... 13, 20
உரவுதல் ... 20
உருத்தல் ... 101
உருவம் ... 101
உலங்குதல் ... 101
உலர்தல் ... 29, 101
உலவுதல் ... 2
உலை ... 101
உலைதல் .. 2, 20
உல்விகுதி ... 63
உவகை ... 37
உவட்டல் ... 37
உவணம் ... 38
உவணை, உவண் ... 38
உவத்தல் ... 20, 37

உவப்பு ... 37
உவர்ப்பு ... 37
உவன் ... 47
உவாந்தித்தல் ... 38
உழத்தல் ... 2
உழறுதல் ... 2
உழுதல் ... 21
உளர்தல் ... 2
உளி ... 2
உளைதல் ... 2
உள் 3, 13, 21
உள்விகுதி ... 63
உறவு (உரவு) விகுதி 63
உறுதல் ... 21
உன்னல் ... 21

ஊங்கு ... 13
ஊதுதல் ... 37
ஊழ்விகுதி 63

எஃகு ... 41
எகினம் ... 41
எடுத்தல் ... 14, 22
எண்ணல் ... 22
எதிர் ... 22
எது ... 51
எயிறு ... 41
எயிற்றி ... 41
எயினம், எயினர் ... 41
எய், எய்தல் ... 22 41
எய்ம்மான் ... 41
எரி ... 103
எரிச்சல் ... 103
எரிதல் ...22, 103
எலி ... 91
எல், 29, 52, 89
எல்லவன் ... 90
எல்லா ... 52
எல்லார் ... 90
எல்லு ... 22, 91
எல்லை ... 91
எல்லே ... 90
எவன் ... 47, 56
எவள் ... 55
எழில் ... 92
எழு ... 42
எழுதல் ... 22, 42
எழுத்து ... 92
எழுப்புதல் ... 14
எறிதல் ... 22
எறித்தல் ... 103
என்று ... 51, 91
என்றூழ் ... 91
என்னல் ... 22

ஏ ... 42
ஏகுதல் ... 42
ஏடகம் ... 91
ஏடு ... 4
ஏணை ... 91
ஏது ... 55
ஏய்தல் ... 39
ஏரகம் .. 91
ஏல ... 90
ஏலகம் ... 91
ஏலல் ... 39
ஏவன் ... 55
ஏவு ஏவுதல் ... 42
ஏழகம் ... 91
ஏல் ... 39
ஏறு ... 42
ஏற்றல் ... 40
ஏனம், ஏனல் ... 41







ஐ ... 17
ஐயுருபு ... 64
ஐவிகுதி ... 61
ஐயம் ... 30

ஒடு உருபு ... 65
ஒட்டுதல் ... 81
ஒண்ணாது ... 81
ஒண்ணுதல் ... 53
ஒலித்தல் 29, 89, 99
ஒளி, ஒளிவு ...89, 100
ஒன்று ... 53
ஒன்றுதல் ... 81
ஒன்னார் ... 53

ஓச்சர் ... 37
ஓடு உருபு ... 65
ஓதுதல், ஓத்து ... 37

கடம், கடன் ... 78
கடவது ... 78
கடு ... 98
கடுகுதல் ... 25
கண் உருபு ... 66
கண் விகுதி ... 63
கருமை ... 98
கல்விகுதி ... 62
கவர், கவர்தல் ... 35
கவலை ... 35
கவவுதல் ... 35
கவளம் ... 35
கவனம் ... 35
கள்விகுதி ... 51
கவற்சி ... 35
கவை ... 35
கவ்வுதல் ... 35
கு, டு விகுதி ... 64
காரொன ... 90
காழ் ... 93

கிடங்கு ... 4
கிணறு ... 4, 61
கிண்டல் ... 4
கிழக்கு ... 65
கிழங்கு ... 4
கிழித்தல் ... 4
கிளை ... 4
கிறு, கின்று ... 67
கீறல், கீன்றல் ... 4

குவ்வுருபு ... 65
குப்பல், குப்பை .. 38

கெழு ... 92, 99
கேணி ... 4
கேழல் ... 4
கை விகுதி ... 61
கை ... 29, 42
கொழு ... 2

சரிதல் ... 24
சாதல், சாய்தல் ... 24
சால் ... 32
சில்லு ... 3
சிவப்பு ... 102
சுடர், சுடலை ... 102
சுடுதல் ... 101
சுணங்கன் ... 102
சுணங்குதல் ... 102
சுண்டுதல் ... 102
சுண்ணம் ... 102

சுலவுதல், சுலாவுதல் 3
சுல், சுல்லு ... 101
சுல்வி ... 101
சுவண்டு ... 102
சுவண்ணம் ... 102
சுவப்பு ... 102
சுவர், சுவல் ... 38
சுவை ... 37
சுழலல் ... 2
சுள்ளை ... 102
சுற்றுதல் ... 2

சூடு ... 102
சூளை ... 102

செம்மை ... 102
செய்தல் ... 29, 42
செலுத்தல் ... 87
செல்லல் ... 42

சேயன் ... 102
சேவல் ... 102
சேறல் ... 42

சைவிகுதி ... 6

சொலித்தல் ... 100

தடுத்தல் ... 25
தல்விகுதி ... 62
தவித்தல் ... 35

தாய் ... 87
தாலம் ... 32
தாவுதல் ... 35
தாழி ... 32
தாழ்வு ... 32
தான் ... 48

தீ ... 100

துருவுதல் ... 3
துவ்விடைநிலை ... 70
துவர்ப்பு ... 37
துழாவுதல் ... 3
துளைத்தல் ... 3

தெரிதல் ... 14, 93
தெய்வம் ... 100
தெவிட்டல் ... 38
தெளிதல் ... 14
தெளிவு ... 93
தெள் ... 93
தெறுதல் ... 103

தேறல் ... 93
தேற்றம் ... 14
தேற்றேகாரம் ... 14
தேன் ... 93

நசை ... 31
நடுங்குதல் ... 25
நயமாய் ... 32
நல் ... 33
நனவு ... 33
நனி, நனிதல் ... 33
நன்று ... 32

நாம், நாங்கள் ... 50
நான் ... 45

நிலவு, நிலா ... 99
நிறம் ... 103

நீ ... 47
நீலம் ... 99
நீர் ... 50, 53
நீறு ... 103







நெருப்பு ... 103

படுதல் ... 25
பரல் ... 65
பரவுதல் ... 35

பாக்கு ஈறு ... 75
பாடுவிகுதி ... 63
பாவுதல் ... 35
பான் ஈறு ... 75

பிதுங்குதல் ... 4
பிசித்தல் ... 97
பிளத்தல் ... 97

புள்ளல் ... 38

பொய், பொய்ப்பு ... 38
பொற்பு ... 104
பொன் ... 104

மடுத்தல் ... 26
மணல் ... 49
மரம், மரல் ... 65
மர்விகுதி ... 54
மலர் ... 33
மலிதல் ... 33
மல்விகுதி ... 62
மல்குதல் ... 33
மல்லல் ... 33
மழை ... 33
மனார்விகுதி ... 54

மின்விகுதி ... 84
மின்னுதல் ... 96

மீன் ... 96

மைவிகுதி ... 62

மோவுதல் ... 42

யாம் ... 50
யாவன் ... 56
யாவும் ... 53
யான் ... 45, 87

வடக்கு ... 65
வயா ... 34
வர்விகுதி ... 54
வவ்வுதல் ... 35
வளம், வளன் ... 33
வளர்தல் ... 33
வறுமை ... 96
வனப்பு ... 33
வனம் ... 33

வாயில் ... 65
வாலிது, வால் ... 94
வான் ... 96
வான் ஈறு ... 75

விடிதல் ... 96
விடுதல் ... 4
விண் ... 96
விலக்கு, விலத்து ... 97
விலங்கல் ... 99
விலங்கு ... 99
விழித்தல் ... 96
விளக்கு ... 99
விளங்குதல் ... 99

வீண் ... 96

வெடி ... 97
வெடிப்பு ... 96
வெட்கம் ... 95
வெட்டுதல் ... 95, 97
வெயில் ... 103
வெளி ... 96

வெளிச்சம் 94, 98
வெளுத்தல் ... 95
வெள், வெள்ளிய ... 94
வெள்ளாடு ... 91
வெள்ளி ... 94
வெள்வென ... 90
வெள்ளை 94
வெறிது, வெறும் ... 96
வேலி ... 92
வேளை ... 92
வேறு ... 97
வை விகுதி ... 61

## II. Indo-Germanic Words

[AS.=Anglo-Saxon; B.=Breton; D.=Dutch; E.=English; F.=French; G.=German; Goth.=Gothic; Gr.=Greek; L.=Latin; Lith.=Lithuanian; P.=Pali; S.=Sanskrit; Sin.=Sinhalese.]

**A**, An S. ... 84
Ablution E. ... 100
Acci P. ... 94
Aham S. ... 46, 87
Alba L. ... 90
Aliyama, Aluyama Sin. 90
Aloka S. ... 94
Alu, Alut Sin. ... 90
Amatya S. ... 18
Amba S ... 87
Amburo L. ... 101
Amo L. ... 76
Anvaya S. ... 88
Arc S. ... 94
Arisan AS. ... 103
Aruna S. ... 103
Arusha S. ... 103
Asa S. ... 31
Aube F. ... 90
Aurora L. ... 100
Aurum L. ... 104

**B**ara, Bahara Sin.... 96
Bahis S. ... 96
Bairh Goth. ... 94
Bhid, Bhil S. ... 97
Bhraj S. ... 94
Bill E. ... 97
Bind S. ... 97
Bleach E. ... 95
Bleak E. ... 96
Bloscan AS. ... 95
Blozen D. ... 95
Blush E. ... 95
Brennen G. ... 101
Bright E. ... 94
Brih S. ... 97
Budh S. ... 94
Buro L. ... 101





**C**aleo L. ... 102
Calx L. ... 102
Canis L. ... 103
Celsus L. ... 89
Chalk E. ... 102
Chara Gr. ... 93
Charis Gr. ... 93
Chliein Gr. ... 93
Chloros Gr. ... 93
Chrusos Gr. ... 93
Churna S. ... 102
Clarus L. ... 93
Clean E. ... 93
Collis L. ... 89
Cylene AS. ... 102
Culina L. ... 102

**D**ala Sin. ... 100
Daz G. ... 49
Deatai Gr. ... 100
Delos Gr. ... 100
Deus L. ... 100
Deva S. ... 100
Dhavala S. ... 100
Dies L. ... 100
Dipa, Dipyate S. ... 100
Div S. ... 100
Divido L. ... 97
Dravida S. ... 80
Dyud S. ... 100

**E**astan AS. ... 100
Ego L. ... 87
Eidon Gr. ... 97
Ela Sin. ... 94
Elaka S. ... 91
Elasson Gr. ... 98
Eliya, Eliyatta Sin.... 90, 94
Ellanawa Sin. ... 89
Elu Sin. ... 91
Erchomai Gr. ... 89
Ernen AS. ... 89
Erudros Gr. ... 104

**F**erveo L. ... 101
Findo L. ... 97
Flagro L. ... 94
Flamma L. ... 94
Fraus L. ... 96
Frustra L. ... 96
Fulgeo L. ... 94
Furnus L. ... 101

**G**elingen G. ... 98
Geolo AS. ... 93
Gharma S. ... 93
Ghir S. ... 93
Glass E. ... 93
Gloria L. ... 93
Gloed AS. ... 93
Glow E. ... 93
Gold E. ... 93
Gratus L. ... 93

**H**ari S. ... 93
Hary S. ... 93
Hela Sin. ... 89, 94
Helios Gr ... 89
Helnus L. ... 93
Heol B. ... 89
Hion Gr. ... 87
Hirana S ... 93
Hos Gr. ... 59
Hound E. ... 103
Hund G. ... 103
Hunu Sin. ... 102
Hwit AS. ... 96
Hyll AS. ... 89

Idein Gr. ... 97
Inclitus L. ... 93
Individuus L. ... 97
Ira Sin. ... 103
Irshya S. ... 103

Jval, Jvar S. ... 100
Jvala S. ... 102
Jyoti S. ... 100

Kah S. ... 57
Kara S. ... 42
Katharos Gr. ... 102
Kavala S. ... 35
Kiln E, ... 102
Kleos Gr. ... 93
Klutos Gr. ... 93
Kri S. ... 80
Krite S. ... 66
Kuon Gr. ... 102

Laghu S. ... 98
Lajj S. ... 95
Laksh, Lakshmi S ... 98
Lamp E. ... 98
Lampo Gr. ... 98
Las S. ... 99
Lavana S. ... 92
Le Sin. ... 104
Leihts Goth. ... 98
Leukos Gr. ... 99
Levis L. ... 98
Licht G. ... 94
Light E. ... 98
Likh, Ling S. .. 92
Lipi S. ... 92
Littera L. ... 92
Locaṇa S. ... 94
Luceo L. ... 94
Luna L. ... 99
Luo L. ... 100
Lux L. ... 94, 99

Mala S. ... 33
Mar S. ... 95
Mesha S. ... 91
Mil S. ... 96
Milas Gr. ... 99
Mina S. ... 96
Mish S. ... 96

Niger L. ... 99
Nila S. ... 99
Nilawa Sin. ... 99

Oost D. ... 100
Oriens L. ...89, 100
Orior L. ...89, 103
Ornumi Gr. ... 89

Pash S. ... 95
Phlagein Gr. ... 94
Prakasa S. ... 92
Pur Gr. ... 101

Quis L. ... 59

Ranj, Rakta S. ... 104
Ratna S. ... 104
Ratran Sin. ... 104
Ravi S. ... 103
Re S. ... 94
Ri S. ... 89
Rinnan AS. ... 89
Rksh S. ... 94
Rocana S. ... 94
Rohita S. ... 103
Ruber L. ... 103
Ruci S. ... 94
Rudhira S, ... 103





Run E. ... 89
Rupa S. ... 101

Sa S. ... 49
Seolfor AS. ... 101
Shila, Shaila S. ... 89
Shiva S. ... 102
Shub S. ... 101
Shuc S. ... 101
Shudh S. ... 101
Shush S.... ... 101
Shvan S. .. 102
Sol L. 89, 102
Sudu Sin. ... 95
Sulfur L. ... 101
Sura, Surya S, ... 102
Svad S. ... 37
Svar S. ... 38
Svarna S. ... 102
Svit, Sveta S. ... 95
Sweet E. ... 37

Taila S. ... 93
Talis L. ... 49
Tas Lith. ... 48
Tejo P. ... 100
Tel Sin, ... 93
Ten Gr. ... 49
Terenewa Sin. ... 93
Thata Goth. ... 49
Thermos Gr. ... 101
Tila S. ... 93
Ton Gr. ... 49
Tvam S. ... 47

Udul, Uduna Sin. 102
Upa, Upari S. ... 38
Upparika S. ... 38
Uru L. ... 101
Ush, Ushna S. ... 101, 2
Usha S. ... 100

Vahis S. ... 96
Valuka S. ... 94
Varuna S. ... 96
Vas S. ... 101
Vela Sin. ... 92
Velanawa Sin. ... 103
Velawa Sin. ... 92
Veli Sin. ... 94
Vena Sin. ... 97
Vid, Vidya S. ... 97
Vidanka S. ... 99
Video L. ... 97
Vilas S. ... 99
Vitrum L. ... 97
Vishnu S. ... 96
Vividus L. ... 97
Vos L. ... 47
Vritha S. ... 96
Vritta S. ... 80

Wheat E. ... 95
White E. ... 95
Who E. ... 59
Wit E. ... 97

Yah S. ... 58
Ya S. ... 39

Zeus Gr. ... 100
Zilver D. ... 101

## Errata

# பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 20 | ஹ-று | ஹ்றவ |
| 19 | 25 | ணவ்வொடு | னவ்வொடு |
| 31 | 15—16 | [இருவரியையும் | நீக்கிவிடுக ] |
| 34 | 28 | விடுதலுமுண்டு | விடுதலது மனு ம்பொருளே |
| 76 | 16 | எஸ்பார் | என்பார் |
| 77 | 17 | உரூவமே | உருவமே |
| 79 | 19 | ,, | ,, |